சங்ககாலின் -

அரசியல்

கடமைக்குகம் ஆச்சிரியர்

கா-திரவியம் திருமணி

சர்க்காவின் அரசியல்

ஆச்சார்யா கிருபளானி

தமிழாக்கம் : கா. திரவியம்

நவயுகப் பிரசுராலயம்
காரைக்குடி :: சென்னை 5.

முதற் பதிப்பு: ஜனவரி 1947

விலை ரூ. 2-0-0

PRINTED AT THE B. N. PRESS, MADRAS.
for Navayuga Prachuralayam P. I. C. No. R. 68-A. 051147100.

பதிப்புரை

சர்க்காவும், குடிசைக் கைத்தொழிலும் வெளிப் பார்வைக்கு எளியனவாகவும் அற்பமாகவும் தோன்றினும் உண்மையில் அவற்றின் சக்தி அளவிடற்கரிது. அவற்ருல்தான் இந்தியா சுதந்திரமடைய முடியும், அடையப் போகின்றது என்பதை உணராத தீவிர வாதிகள், பொதுவுடைமை வாதிகள் அவற்றின் சக்தியை - சக்தியே இல்லை என்பது அவர்கள் கருத்து - மிகக் குறைத்து மதிப்பிடுகிருர்கள்; இன்றைய அரசியல் உயர்வுக்கு அவைதான் காரணம் என்பதை முற்றிலும் மறந்துவிடுகின்றனர். அவைகளின் அரசியல், பொருளாதார முக்கியத்துவத்தை உணராதவர்களுக்கு உணர்த்துவதற்கென எழுதப்பட்டதே போன்று இந்நூல் அமைந்துள்ளது.

காந்திய தத்துவங்களேயும் முறைகளேயும் எடுத்துச் சொல்லுவதற்குத் தனித் திறமைவேண்டும். அத்தகைய திறமைவாய்ந்த இவ்வாசிரியரின் இந்நூல், காந்தீய தத்துவங்களேயும் முறைகளேயும் அறிந்துகொள்ள விரும்பும் தமிழ் நாட்டவருக்கு ஏற்ற துணையாக இருக்கும் என்பது எங்கள் துணிபு.

திரு. கா. திரவியம் இந்நூலேச் சிறந்த முறையில் மூலத்தின் வேகம் குன்ருது தமிழாக்கித் தந்திருக்கிருர். வெளியிட உரிமையளித்த கிருபளானி அவர்களுக்கும் தமிழாக்கித் தந்த கா. திரவியம் அவர்களுக்கும் எங்கள் நன்றி.

சென்னே }
1—1—47. }

நவயுகப் பிரசுராலயத்தார்.

பொருளடக்கம்

அத்தியாயம் 1

சர்க்காவின் அரசியல் தத்துவம்

சர்க்கா, கதர் ஆகியவற்றின் அரசியல் முக்யத்துவம் என்ன என்ற பிரச்னை பற்றிய விவாதம் இன்னும் தீர்ந்த பாடில்லை. சர்க்காவின் கொள்கையைக் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டாலொழியத் தாம் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்குவது சாத்தியமில்லையென்று காந்திஜி கூறியுள்ளதால், இப்பிரச்னை மீது விவாதம் முன்னிலும் அதிகமாக வலுத்துள்ளது. சென்ற 19 ஆண்டுகளாக நடந்த பலமான விவாதத்திற்குப் பின்பாவது, காங்கிரஸ் வாதிகள் மனத்திலிருந்த ஐயம் நீங்கியிருக்கும் என்று தான் நாம் எதிர்பார்த்தோம். ஆனால், சஞ்சலம் நிறைந்த இன்றைய உலகில் எதுவும் தெளிவாகவோ, முடிவாகவோ தீர்மானிக்கப்பட முடியுமென்று தோன்றவில்லை.

சர்க்காவின் பொருளாதார முக்யத்துவத்தை ஒத்துக் கொண்ட பின்னர்தான், நாம் அதன் அரசியல் முக்யத்துவம் பற்றி விவாதிக்க முடியும். பொருளாதார முக்யத்துவத்தையே நாம் ஆட்சேபித்தால், அரசியல் முக்யத்துவம் பற்றி விவாதிக்க இடமேற்படுவதேயில்லை. ஆகவே, இந்தியாவின் இன்றையப் பொருளாதார நிலைமையில், சர்க்கா இன்றியமையாதது என்பதை ஒப்புக் கொண்டு, இனி அதன் அரசியல் முக்யத்துவம் பற்றி ஆராயப் புகுவோம்.

முதலில், சர்க்காவும் கதர்த்தொண்டும் தனிப்பட்ட திட்டங்களல்லவென்பதை நாம் உணர **தவறான கருத்து** வேண்டும். கிராமப் புனருத்தாரணம், குடிசைத் தொழில் அபிவிருத்தி என்ற அடிப்படையான திட்டங்களின் முக்கிய அம்சங்களே அவை. பொருள் உற்பத்தியில், குவியல் முறைக்கு எதிராக உள்ள பரவல் முறைக்கும், குடிசைத் தொழிலுக்கும் அறிகுறியாக நிற்பவை சர்க்காவும் கதரும். அவ்வளவுதான். ஆகவே, இயந்திர சக்தியின் உபயோகம், விஞ்ஞானம் ஆகிய பிரச்னைகள் இங்கு எழுவில்லை. மின்சார சக்தி கிராமத்திற்கும் பரவி, குடிசைத் தொழிலாளிக்கும் கிடைக்கும்படி செய்தால், அவன் தன் சர்க்காவையோ, தறியையோ அச் சக்தியைக் கொண்டே நடத்தலாம். இயந்திர சக்தியையும், மின்சாரத்தையும் பெரிய நகரங்களில்தான்—ஆலைகளில்—உபயோகிக்க முடியுமென்ற தப்பபிப்பிராயம் பலருக்கு இருப்பதால் தான், இப் பிரச்னையில் அடிக்கடி குழப்பம் ஏற்படுகிறது. நீராவியின் சக்தியைக் கொண்டு இயந்திரத் தொழிலை நடத்துவதென்றால், அத் தொழிலை மிக விரிவான முறையில் நடத்துவது தான் லாபகரமானது. அச் சக்தியைச் சிறு சிறு அளவாக, தூரமான இடங்களுக்குப் பரப்பி அனுப்ப முடியாது. அதை மட்டுமே உபயோகிப்பதென்றால், ஓரிடத்திலேயே—பெரிய ஆலைகளில்—உற்பத்தி குவிய வேண்டி ஏற்படும். ஒரு பெரிய ஆலையில் உற்பத்தி அனைத்தும் குவிந்து நடப்பதென்பது (குவியல் முறை) நீராவி சக்தி கண்டு பிடிப்பதற்கு முன்பே இருந்து வந்தது. அப்பொழுது ஆலைகள் இவ்வளவு பெரியனவாகவும், அதிகமாகவும் இல்லையென்பது தான் வித்தியாசம். ஆலைகளினால் உண்டாகும் சமூகப் பிரச்னைகளான—பெண்களையும் சிறு குழந்தைகளையும் வேலை

வாங்கும் அநீதி, அதிக நேர வேலை, அசுத்தமான சூழ்நிலை, குறைந்த கூலி, சுரண்டல் ஆகியவையும் புதிய பிரச்னைகளல்ல. ஆலைகள் அதிகரித்துப் பெருகியுள்ளதால் இந்த அநீதிகளும் பெருகி வளர்ந்துள்ளன. அவ்வளவுதான். நீராவி சக்தியைக் கண்டுபிடித்ததால் மட்டும் இந்த ஆலைகள் இவ்வளவு பெருகி விடவில்லை. பூகோள சாஸ்திர அறிவு விரிந்து, புது மூலப் பொருள்களை நயமாகப் பெறுவதையும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைத் தூர தேசங்களில் விற்பதையும் சாத்திய மாக்கியதால்தான் இயந்திரத்தொழில் இந்த அளவிற்கு விரிந்தது.

ஆகவே, இயந்திர சக்தியை உபயோகிக்க வேண்டுமென்றால், அதற்காகப் பெரிய ஆலைகள் அவசியம் என்பதில்லை என்ற உண்மையை முதலில் நாம் மனத்திற்கொண்டால்தான் நம் ஆராய்ச்சி சரிவர நடக்கும். ஆலைகளில் இன்று நடக்கும் அநீதிகளுக்கு இயந்திர சக்தியின் உபயோகம் மூலகாரணமல்ல. உற்பத்தி அனைத்தும் ஓரிடத்தில் குவிந்து, அதன் மூலம் செல்வமும், மூலதனமும் இயந்திரங்களின் சொந்தக்காரர்களான ஒரு சில முதலாளிகள் கையில் குவிந்ததால்தான், முதலாளி வர்க்கமென்று ஒரு புறமும், இயந்திரத் தொழிலாளிகளென்ற அடிமை வர்க்கம் மற்றொரு புறமும் ஆக, பொருளாதார ஏற்றத் தாழ்வும், அநீதியும் ஏற்பட்டுள்ளன. இயந்திர சக்தி இருந்ததால்தான், தொழில்கள் வளர்ந்து, அதன் மூலம் இந்த அநீதிகளும் பெருகின என்ற அளவிற்கு இச் சக்தி ஒரு துணைக் கருவியாக இருந்ததே யொழிய, மூல காரணமாக இருக்கவில்லை. இன்று நாம், பெரிய ஆலைகளின் எண்ணிக்கையை அதிகரிக்காமலும், நிலவுடைமை யில்லாத இயந்திரத் தொழிலாளர் வர்க்கத்தை உண்டு பண்ணாமலும், இயந்திர சக்தியை உபயோகிப்பது சாத்தியம் தான். இயந்திர சக்தியை அகற்றாமலும்,

பொருள் உற்பத்தி அளவைக் குறைக்காமலும், உற்பத்தி ஓர் ஆலையில் குவிந்து கிடக்காமல் பல கிராமங்களுக்கும் பரவும்படியும் நாம் செய்ய முடியும். விஞ்ஞான அறிவு வளர்ந்துள்ள இந்நாளில், பெரிய ஆலைகளில் 'குவியல் உற்பத்தி' செய்வதைத் தவிர வேறு உற்பத்தி முறை சாத்தியமில்லையென்று நினைப்பதுதான் விஞ்ஞானத்தை அவமதிப்பதாகும். அது விஞ்ஞான அறிவுக்கு விரோதமான மூட நம்பிக்கையாகும். அன்றாட வாழ்க்கையில் நீராவி சக்தியைத் தவிர வேறு பல சக்திகளை உபயோகித்து வருகின்றபோதிலும், நீராவி சக்திதான் கதி என்ற அறியாமையில் ஆழ்ந்திருப்பவர்களே இந்த மூட நம்பிக்கைக்குப் பலியாகியுள்ளனர்.

ஆகவே, குடிசைக் கைத்தொழில் பற்றி ஆராயும் போது, அதில் இயந்திர சக்திப் பிரச்னையையும் சேர்த்துக் குழப்பக் கூடாது.

குடிசைக் கைத்தொழில்களைப் பற்றி ஆராயும்போது, மற்றொரு குழப்பத்தையும் சிலர் புகுத்துகிறார்கள். இயந்திரங்களனைத்தையும் காந்திஜி வெறுக்கிறார் என்று இவர்கள் வியாக்கியானம் செய்கின்றனர். காந்திஜி தமது கொள்கையை எத்தனை முறை விளக்கினாலும், அவர் எல்லா இயந்திரங்களையும் எதிர்க்கிறார் என்ற மூடநம்பிக்கையைமட்டும் இவர்கள் விடுவதில்லை. மனிதன் உழைப்பை மிச்சப்படுத்தி அவன் வேலையை எளிதாக்கும் இயந்திரங்களுக்கு, காந்திஜி போன்ற சீர்திருத்த வாதி ஆட்சேபிக்க முடியாது. அந்த இயந்திரங்களை உபயோகிக்கும் அநியாய முறையைத்தான் அவர் ஆட்சேபிக்கிறார். காந்திஜி மதுவிலக்கை ஆதரிக்கிறார். அதனால் அவர் பிராந்திப் புட்டியை எதிர்க்கிறார் என்று கூறமுடியாது. புட்டியை மட்டும் எடுத்துக்கொண்டால், அது நல்லதுமல்ல; கெட்டதுமல்ல. அதை உபயோகிக்கும் விதத்தால்தான் அது

கெட்டதாகிறது; அதுபோல்தான் எல்லா இயந்திரங்களும். அவை நல்ல வழியில் உபயோகிக்கப்பட்டால் நன்மையும், துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் தீமையும் ஏற்படுகின்றன. அவற்ருல் ஏற்படும் நன்மை தீமையைத் தீர்மானிப்பவன் மனிதன்தான். எந்தக் கருவியின்மீதோ, இயந்திரத்தின்மீதோ காந்திஜிக்கு வெறுப்புக் கிடையாது. பெரிய ஆலைகளில், இயந்திரத்தை மனிதனின் கருவியாக்காமல், மனிதனை இயந்திரத்தின் அடிமையாக்கியுள்ளனர் என்பதை அவர் உணர்கிருர். ஆகவே, அம்முறையை அவர் கண்டிக்கிருர். ஆனுலும், உலகம் இன்று உள்ள நிலையில் இயந்திரசக்தி உபயோகமும், பெரிய ஆலைகளில் ஓரளவுக்குக் குவியல் உற்பத்தி முறையும் நடந்தே தீர வேண்டுமென்று அவர் உணர்கிருர். தமது தத்துவத்தில், அவர் அதற்குச் சரியான இடமும் தந்துள்ளார். அவர், அதற்கு எத்தகைய இடம் தந்துள்ளார் என்பதை ஆராய்வதே உண்மையான ஆராய்ச்சியாளருக்கு அழகேயொழிய, அவர் எல்லா இயந்திரங்களுக்கும் எதிரியென்றும், முற்போக்குக்கு முட்டுக்கட்டை போடுபவரென்றும், காலமென்ற கடிகாரத்தைப் பின்னுல் தள்ளிவைக்க முயல்கிருரென்றும் கூச்சலிடுவது வீண். காலம் என்ற கடிகாரத்தைப் பின்னுல் தள்ள யாரால்தான் முடியும்?

இந்தத் தப்பபிப்பிராயங்களை நீக்கிவிட்டால்தான், நாம் சர்க்காவின் அரசியல், பொருளாதார முக்யத்துவத்தைப் பாரபட்சமற்ற முறையில் ஆராய முடியும்.

அரசியலும் பொருளாதாரமும்

நமது தேசத்தின் பொது வாழ்வில் சர்க்காவின் முக்யத்துவம் என்ன? இன்று அதற்கு, ஓரளவு முக்யத்துவம் இருக்கிறது என்பதை எந்த அபேத வாதியும் மறுக்க மாட்டான். ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் குடிசைத் தொழில்களுக்கும் இடமுண்டு

என்பதை அவன் ஒத்துக்கொள்கிருன். சோவியத் ரஷ்யாவிலும் குடிசைத் தொழில்கள் இருக்கின்றன வென்று நாம் கேள்விப்படுகிறோம். குடிசைத் தொழில்களுக்குக் காந்திஜி தரும் முக்கியத்துவத்தின் அளவைத் தான் அபேதவாதி ஆட்சேபிக்கின்ருன். வருங்கால சுதந்திர இந்தியாவில் அவற்றிற்குள்ள முக்கியத்துவம் பற்றியும், அவன் காந்திஜியின் அபிப்பிராயத்தி லிருந்து வேறு படுகின்ருன். நம் நாடு ஜனத்தொகை நிறைந்தது. மேலும், பெருவாரியான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். விவசாயிகளுக்கோ, தங்கள் குடும்பத்தைப்பேணுவதற்குப் போதுமான அளவு நிலம் கிடையாது. இத்தகைய நிலைமையில், துணைக் கைத்தொழில்கள் இருப்பது அவசியம் என்பதைப் பொருளாதார நிபுணர்களும் ஒத்துக்கொள்கின்றனர். ஆனல் வருங்காலத்தில், விவசாயத்தை இயந்திரமயமாக்கி, பெரிய ஆலைகளைப் பெருக்கிய பின்னர், குடிசைக் கைத்தொழிலுக்கு அதிக முக்யத்துவம் இருக்க முடியாது என்று மட்டுமே அவர்கள் கூறுகின்றனர். அதிகாரம் நம் கையில் இல்லாத இன்றைய நிலையில், குடிசைக் கைத்தொழில்களைத் தவிர வேறு வழியில்லையென்பதை அபேதவாதியும், பொருளாதார நிபுணர்களும் ஒத்துக்கொள்கின்றனர்.

இதற்குக் காரணம் வெளிப்படையானது. தேசத்தை இயந்திர மயமாக்குவது என்பது வெறும் பொருளாதாரப் பிரச்னையல்ல. அது அரசியலுடன் நெருங்கிப் பிணைக்கப் பட்ட பிரச்னை. அரசியலும் பொருளாதாரமும் ஒன்ருய்ப் பிணைக்கப்படாமலிருந்த காலம், சமீப காலச் சரித்திரத்திலேயே கிடையாதென்று கூறலாம். வியாபாரத்தைக் கட்டுப்படுத்தச் சட்டங்கள் புகுத்தப்பட்ட

தற்கும், பின்னர், அவை நீக்கப்பட்டதற்கும் அரசியலே காரணம். இங்கிலாந்து தேசச் சரித்திரத்தில் இதற்குப் பல உதாரணங்கள் காணலாம். வியாபார சுதந்திரம் ஜனநாயக அரசியலுக்கு அடிப்படையானது என்று ஒரு காலத்தில் இங்கிலாந்து பறைசாற்றியது. வியாபார சுதந்திரம் எந்த அரசியல் சூழ்நிலையில் லாபகரமாயிருந்ததோ, அந்தச் சூழ்நிலை நீங்கிய பின்னர், இங்கிலாந்து அப்பொருளாதாரக் கொள்கையைக் கைவிட்டுவிட்டது. இன்றோ, நாணயச் செலாவணி, பண லேவாதேவி, சுங்கம், அயல்நாட்டு வியாபாரம் ஆகியவற்றின் மீது ஒரு தேசத்தின் அரசாங்கத்திற்குப் பூர்ண அதிகாரம் இருந்தாலொழிய, அந்நாட்டில், இயந்திரத் தொழிலை ஸ்திரப்படுத்துவதென்பது சாத்தியமில்லை. பொருளாதாரம் ஸ்திரமாக வேண்டுமென்றால், தனியரசுரிமை வேண்டும்; அயல் நாட்டு அதிகாரத்திற்கோ, கட்டுப்பாட்டுக்கோ இடமிருக்கக் கூடாது. நாட்டின் விவசாய, சுரங்க வளங்களனைத்தின் மீதும் பூர்ண அதிகாரம் சர்க்காருக்கு இருந்தால்தான், இயந்திரத் தொழிலைப் பரப்புவதற்குச் சாத்தியமாகும். சுருங்கச் சொன்னால், பூர்ண அரசியல் அதிகாரமும் தனி அரசுரிமையும் இல்லாமல், ஒரு தேசத்தில், நிரந்தரமாக, பெருவாரியான இயந்திரத் தொழிலைப் பரப்புவதென்பது அசாத்தியம். இயந்திரத் தொழில் வளர்ச்சிக்கு, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது அவசியம். ஆனால், குடிசைத் தொழில் வளர்ச்சிக்கு இது அவ்வளவு அவசியமில்லையென்றாலும், ஒரு சிறிய அளவிற்கு அவசியம் தானே என்று வாதாடலாம். மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், இது சிறிய வேறுபாடாகவே தோன்றிய போதிலும், அரசியல் துறையில், இச்சிறிய வேறுபாடுகளுக்கும் முக்கியத்துவம் அதிகம்.

இந்தியாவில் பெருவாரியாக இயந்திரத் தொழிலை ஸ்திரமான முறையில் பரப்புவதற்கு இயலாத பல தடைகள் இருக்கும் இன்றைய நிலைமையில், தேசம் என்ன செய்ய வேண்டும்? அரசியல் அதிகாரம் கைப்பற்றப்படும் வரை, வாளா விருப்பதா? நாட்டு மக்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கும் நேரத்தில் இத்தகைய கொள்கை தற்கொலைக்குச் சமமாகும். மேலும் நம் நாடு, மற்ற நாடுகளின் தயவை நம்பிப் பிழைக்கும் நிலைக்கு வந்துவிடும். அத்தகைய நிலை, நாட்டின் அரசியல், பொருளாதார இழிவில் மட்டுமல்ல, ஆத்மீகச் சீர்கேட்டிலும் முடியும். அடிமைத்தனம், இயற்கையிலேயே இழிவுபடுத்தும் நிலை. அந்நிலையை நீக்க, விடா முயற்சி செய்வதே இயற்கை. நாம் இன்றுள்ள நிலைமையில், இத்தகைய இழிவை நீக்கச் செய்யக்கூடிய முயற்சிகளில் ஒன்று, நமக்குத் தேவையான பொருள்களுக்காக இங்கிலாந்து போன்ற அயல் நாடுகளை நம்பியிருக்காமல், நம் நாட்டிலேயே உற்பத்தி செய்துகொள்ள முயற்சிப்பதாகும். சுதேசியை வளர்க்க, நம் சக்திகளனைத்தையும் ஈடுபடுத்த வேண்டும். எல்லாத் துறைகளிலும் அன்னியத் தொடர்பை அறுத்துச் சுயேச்சையாக வாழ முயல வேண்டும். பொருளாதாரத் துறையில் சர்வதேச உறவு கொண்டாடுவது நல்ல கொள்கைதான். ஆனால், அக்கொள்கை எல்லா நாடுகளின் பரஸ்பர நன்மைக்கேற்றதாயிருக்க வேண்டும். அவ்வாறிருக்க வேண்டுமானால், அந்நாடுகளுக்கிடையே சமத்துவ நிலை இருக்கவேண்டியது அவசியம். எளியாருக்கும் வலியாருக்குமுள்ள தொடர்பு சமநிலையி லிருக்க முடியாது. அது சரண்டலில் தான் முடியும். சுதந்திர, சமத்துவ ஒத்துழைப்பினால் கிடைக்கும் உறவும் பலமும் இதனால் கிடைக்க முடியாது. இன்று இந்தியா உள்ள நிலையையும், உலகின் சூழ்நிலையையும்

மனத்திற்கொண்டு, சுயதேவைப் பூர்த்தி முறையைப் பின்பற்றி இந்தியா பொருளாதார சுயேச்சை அடைவதன் அவசியத்தை உணராதவர்கள், அடிப்படைப் பிரச்னையையே காணத் தவறியவராவார்கள். வலிமையுள்ள தேசங்களெல்லாம், பொருளாதாரத் துறையில் யதேச்சாதிகாரத்தை நிலை நாட்டித் தங்கள் உள் நாட்டுத் தொழில்களைக் காப்பாற்றிக்கொள்ள வேலி கட்டிக்கொண்டிருக்கும் நேரத்தில், ஏழ்மை நிலையிலுள்ள இந்தியாவுக்குச் சர்வதேச ஒத்துழைப்புப் பற்றிப் போதிப்பது விவேகத்திற் கேற்றதல்ல. அது நமது அரசியல், பொருளாதார எதிரிகள் விரிக்கும் வலையில் சிக்கிக் கொள்வதாகும். சுமார் இருபது ஆண்டுகளுக்குமுன் நமது இந்திய மிதவாதக் கட்சியினர், இந்தியா வியாபார சுதந்திரக் கொள்கையைப் பின்பற்ற வேண்டுமென்று கூறினர். தங்கள் அலாதியான அரசியல், பொருளாதார நிலைமைக்கேற்ப, தங்கள் நன்மைக்காக இங்கிலாந்து மக்கள் வகுத்திருந்த இக்கொள்கையைக் கண்மூடித்தனமாக இந்தியாவும் பின்பற்ற வேண்டுமென்று அவர்கள் கூறினர். மற்றத் தேசங்கள் தங்கள் அரசியல், பொருளாதாரக் கொள்கையை மாற்றிவிட்ட பின்னும்கூட, இக்கொள்கையை, தின்ஷா வாச்சா, தம் இறுதிநாள் வரைத் தீவிரமாக ஆதரித்து வந்தார்.

ஆகவே, இந்தியாவின் இன்றைய அரசியல் நிலைமையில், குடிசைக் கைத்தொழில் மூலம் தொழிலபிவிருத்தி ஏற்படுவதே இயற்கையான, நன்மை பயக்கும் வழியாகும். பொருளாதாரத் துறையில் அது லாபகரமானதும்கூட. பொருளாதாரத் துறையில் ஏற்படும் லாபம்—அது சுரண்டல் முறையினால் கிடைத்த லாபமாயிருந்தாலொழிய-அரசியல் துறையிலும் நன்மையாக இருக்கவேண்டும். இந்திய மக்களை வாட்டும் வறுமையை நீக்கும் எத்திட்டமும் தேசத்

தைப் பலப்படுத்தும் திட்டமாகும். இன்று, இந்தியாவின் நன்மையைக் கருதாத அதிகார வர்க்கத்தால், மனமின்றி வகுக்கப்படும் இயந்திரத் தொழில் திட்டத்தால் கிடைக்கும் நிவாரணத்தைவிட, வேலையில்லாமல் திண்டாடும் இந்திய மக்களுக்குக் குடிசைத் தொழில்களால் அதிக நிவாரணம் ஏற்படுவது நிச்சயம். விவசாயிக்கு ஒரு துணைத்தொழில் தருவதன் மூலம், நிலத்தின் மீதுள்ள பளுவைக் குறைக்க இது உதவுகிறது. அவனுடைய அற்ப வருவாய்க்கு மேலாக ஒரு சொற்ப தொகை கிடைத்தாலும், அந்த அளவிற்கு அவன் வறுமையும் பிணியும் குறைவதாகும்; உறுதியும் பலமும் அதிகரிப்பதாகும். அவன் பொருளாதார நிலை சற்று உயர்வதால், தன் மதிப்பும், இறுதியில், நாட்டின் நன் மதிப்பும் உயர்கின்றன. இந்த உயர்வைச் சரியான வழியில் பயன்படுத்தினால், நாட்டு மக்களனைவருக்கும் கல்வியறிவும், அரசியல் உணர்வும் பரவும்படி செய்யலாம். பொருளாதாரமே, மனிதனின் வாழ்க்கைக்கும் உலக சரித்திரத்திற்கும் மூல காரணமாகும் என்ற சித்தாந்தத்தை நாம் ஒத்துக்கொள்ளாவிடினும், நாட்டின் பொருளாதார நிலை உயர்ந்தால், அந்த அளவிற்கு அரசியல் பலமும் வளரும் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவ்வாறிருக்கும் போது, சரித்திரத்தை உருவாக்குவது பொருளாதாரமே என்ற தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்கள், இதை ஆட்சேபிப்பதற்குக் காரணமேயிருக்க முடியாது.

ஸ்தாபன ரீதியான கட்டுப்பாடு

இன்று, முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருப்பது, மனிதர் ஒன்றுபட்டு ஸ்தாபன ரீதியான கட்டுப்பாட்டுக்குப் பணிந்து நடப்பதேயாகும். இக் கட்டுப்பாடே வெற்றிக்கும் முன்னேற்றத்திற்கும் அடிகோலியுள்ளது. ஒவ்வொரு ஊழியரும் இக் கட்டுப்

பாட்டை வளர்க்க வேலை செய்கின்றார். சிலர் தொண்டர்களைத் திரட்டுகின்றனர்; இன்னும் சிலர் சிந்தனைகளையும், புதிய கருத்துக்களையும் திரட்டுகின்றனர். கவிஞன், கலைஞன், அனைவரும் தங்கள் தங்கள் துறையில், சிந்தனையையும், செயலையும் ஒன்றுதிரட்டுபவர்களே. சீர்திருத்தவாதியோ மனிதர்களைத் திரட்டுகின்றான். போரிலோ, போர்வீரர்களை ஒன்று திரட்டும் திறமைகொண்ட தளபதி வெற்றி பெறுகின்றான். அத் திறமையில்லாத தளபதி தோல்வி யுறுகின்றான். அரசியலிலும் அவ்வாறே. ஓர் உன்னத லட்சியத்திற்காகப் பல தொண்டர்களை, பணச் செலவின்றி வெகு விரைவில் திரட்டுபவரே சிறந்த அரசியல் தலைவர்.

இவ்வாறு கட்டுப்பட்டு ஒன்று திரளும் சக்திதான், மற்றச் சுதந்திர நாட்டு மக்களைவிட இந்திய மக்களுக்குக் குறைவாக இருக்கிறது. தனிப்பட்ட மனிதன் என்ற முறையில் எடுத்துக் கொண்டால், இந்தியன் எந்தத் துறையிலும் யாருக்கும் சளைத்தவ னல்லன். போர்த் துறையில் கூட, பிரிட்டிஷார் இந்தியாவை வென்றுவிடவில்லை. இந்தியரிலேயே ஒரு பகுதியினர் மற்றப் பகுதியினரை வென்று, பிரிட்டிஷாரிடம் கொடுத்தனர். போரிட்டது இந்தியர்கள்தான்; போராடத் திரட்டியது ஆங்கிலேயன். இந்திய மன்னர் இருவரிடைப் போர் மூண்டபோதும், ஒவ்வொரு மன்னரும் தத்தம் படையைத் திரட்டும் பொறுப்பை ஆங்கிலேயனிடமோ, பிரெஞ்சுத் தளபதியிடமோ ஒப்புவித்தனர். சேனையைத் திரட்டி, போர்க் கிரமப்படி அணிவகுக்கும் திறமை அவர்களுக் கிருந்தது. ஆனால் வீரத்தில் இந்தியன், ஐரோப்பியனுக்குச் சளைத்தவன் என்பதற்குச் சரித்திரத்தில் எங்கும் சான்று கிடையாது. சேனையில் சரியான கட்டுப்பாடு இருந்தபோது, இந்தியன், ஐரோப்பியனைவிடச் சிறந்த

முறையில், உறுதியான வீரத்துடன் போராடமுடியும் என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது. அன்னிய ஆட்சியால் ஏற்பட்டுள்ள பலவீனங்களும், சீர்கேடுகளும் ஒருபுற மிருக்க, ஸ்தாபன ரீதியான கட்டுப்பாடு நம்மிடை யில்லாத தால், நமது சமூக, அரசியல், பொருளாதாரத் துறைகளில் பல குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. எல்லாச் சக்திகளை யும் ஒன்றுதிரட்டிக் கட்டுப்பாடாக வேலை செய்யும் திறமைதான், இந்தியாவின் உடனடியான தேவை. சுதந் திரப் போராட்டத்திற்கு இச்சக்தி மிகவும் அவசியமாகும். சுதந்திரம் பெற்ற பின்பு அதைக் காப்பதற்கும் இதுவே இன்றியமையாத தாகும்.

சமூக வாழ்விற்குரிய சிறந்த பண்புகள்

ஸ்தாபன ரீதியான கட்டுப்பாட்டுக்குப் பொறுமை, ஒத்துழைப்பு, ஒற்றுமை, ஐக்யம், தலைமைக்குப் பணிந்து நடக்கும் தன்மை போன்ற சிறந்த ஆத்மீகப் பண்புகள் அவசியம். நாம் சுதந்திரம் அடைவதற்கு முன்பும், பிறதேசங்களுடன் போட்டியிடுவதற்கு முன்பும் இப்பண்புகளை வளர்க்கவேண்டும். நிர்மாண வேலை ஏதாவதொன்றைச் செய்வதன் மூலம் தான், நாம் பல்வேறு சக்திகளை ஒன்று திரட்டவும், மேற் சொன்ன பண்புகளை வளர்க்கவும் முடியும். கட்டுப்பாடு என்பது, மேலிருக்கும் தலைவரால் தன் அதிகாரத்தைக் கொண்டு சுமத்தப்படவும் கூடும்; கீழுள்ள தொண்டர் கள், ஒன்றுபட்டு வேலை செய்வதன்மூலம் தங்களிடையே அக்கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்ளவும் கூடும். ஒரு ஜனநாயக சர்க்கார், ஜனநாயக முறைப்படி மக்களைத் திரட்டவும்கூடும். ஒரு சர்வாதிகாரி, தன் யதேச்சாதி காரத்தால் மக்களைத் திரட்டவும் கூடும். ஜனநாயகக் கட்டுப்பாடே, ஆத்மீக பல முடையது; லௌகீக நன்மை யும் பலமும்கூட, இறுதியில் அதற்குத்தான் சேர்கின்றன;

அரசியல் பலத்திலும், சர்வாதிகாரக் கட்டுப்பாட்டை விடச் சிறந்தது. ஒவ்வொரு தொழிலும்—அது சிறியதோ, பெரியதோ, ஓர் ஆலையில் குவிந்து கிடக்கிறதோ, பல கிராமங்களில் பரவிக் கிடக்கிறதோ—பல மனிதர்களை ஒன்று திரட்டுகிறது. ஆலைத் தொழிலில், சர்வாதிகார அமைப்பில் ஏற்படுவதுபோல், மேலதிகாரம் கொண்ட ஒருவரோ ஒரு சிலரோ, தாங்கள் விரும்பும் கட்டுப்பாட்டை மற்றவர்கள்மீது சுமத்துகின்றனர். பரவல் முறையைப் பின்பற்றும் குடிசைக் கைத்தொழில்களிலோ, தொழிலாளர், தங்கள் விருப்பத்தின் பேரில் ஜனநாயக முறையில் திரட்டப்படுகின்றனர். இத்தகைய கட்டுப்பாடு அவர்கள் அறிவையும், ஆற்றலையும், ஒற்றுமையையும், ஒழுங்கான வேலைத் திறனையும் வளர்க்கின்றது. ஜனநாயகக் கட்டுப்பாட்டில் தனி மனிதனுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. அவன் பொறுப்பு உணர்ச்சியும், சுய சக்தியும் வளர்க்கப் படுகின்றன. அவன் சுயமதிப்புக் காக்கப்படுவதோடு மட்டுமின்றி வளர்க்கவும் படுகிறது. அவன், தன் சொந்த விருப்பத்தின் பேரில், அந்த ஸ்தாபனத்தின் அம்சமாக விளங்குகின்றான். ஸ்தாபனத்தின் முடிவு அவன் முடிவேயாகும். தன்னிடம் தகுதியிருந்தால், தானும் தலைவனாக முடியுமென்பதை அவன் உணர்கிறான். சர்வாதிகார அமைப்பில், மேலிருந்து கட்டுப்பாடு சுமத்தப்படும்போது இந்த நன்மைகளெல்லாம் கிடைப்பதில்லை.

ஸ்தாபனத்தின் விரிவு

அகில பாரத சர்க்கா சங்கத்தின் 1938-ம் ஆண்டறிக்கையிலிருந்து கீழே தரப்பட்டுள்ள சில புள்ளி விவரங்களைப் பார்த்தால், எவ்வளவுதூரம் சர்க்கா கிராம மக்களைத் திரட்டி ஒன்றுசேர்க்க முடியுமென்பதை நாம் சரிவர உணரமுடியும். சங்கத்திற்கு ரூபாய்

40 லட்சம் மூலதனமிருக்கிறது. முப்பத்தையாயிரம் நூற்பவர், நெசவாளர், தச்சர், சாயவேலை, பூவேலை, சலவை வேலை முதலியவை செய்வோர் ஆகியோருக்கு இச்சங்கம் வேலை தந்துள்ளது. ஏறக்குறைய 1000 நூற்பு நிலையங்களும் விற்பனை நிலையங்களும் உள்ளன. சுமார் 3000 பேர் இந்த ஸ்தாபன வேலையை மேற்பார்வை செய்கின்றனர். ஐம்பதாயிரத்துக்கு மேற்பட்ட கிராமங்களை இது தழுவுகிறது. சங்கத்தினுடைய மூலதனத்தின் ஒரு பகுதியும் இந்தியாவுக்கு வெளியே செலவு செய்யப்படுவதில்லை. பெரும்பகுதி ஏழைகளுக்கு வருவாயாகச் செல்கிறது. ஸ்தாபன ஊழியர்களுக்கு சராசரி, மாதம் ரூ. 25 அல்லது 30 கிடைக்கிறது. ஆற்றல் மிகுந்த கைத்தொழிலாளிக்கும் இதே சம்பளம் கிடைக்கிறது. இந்த 40 லட்சம் ரூபாயும் ஒரு பெரிய ஆலையில் மூலதனமாகப் போடப்பட்டிருந்தால் என்ன ஏற்பட்டிருக்கும்? 40 லட்சம் ரூபாயைக் கொண்டு ஒரு பெரிய ஆலையை நிறுவிவிட முடியாது. சிறிய அல்லது நடுத்தர ஆலையைத்தான் நிறுவமுடியும். இந்த ஆலைக்கு வேண்டிய இயந்திரங்களை அயல் நாட்டிலிருந்து வாங்குவதற்கு, மூலதனத்தில் பெரும் பகுதியைச் செலவு செய்யவேண்டியிருக்கும். இந்த இயந்திரங்களின் சிறிய பாகம் ஒன்று பழுதடைந்து விட்டாலும், அதற்கு வேண்டிய சாமான்களையும் அயல் நாட்டிலிருந்துதான் இறக்குமதி செய்ய வேண்டும். ஒவ்வொரு சிறிய ஆணியும் அயல் நாட்டிலிருந்துதான் வருகிறது. இயந்திரத்தை உற்பத்தி செய்த அனுபவமும், அதை விற்பதால் கிடைக்கும் லாபமும் அன்னியனையே சேரும். கிராமக் கைத்தொழிலிலோ, செலவு செய்யப்படும் பணமனைத்தும் தேச மக்களிடமே போய்ச் சேர்கிறது. தொழிலனுபவமும் தேச மக்களுக்கே கிடைக்கிறது. ஒரு பெரிய ஆலையை மேற்

பார்வை செய்யப் பத்து அல்லது பதினைந்து நபர்கள் போதும். ஆலை சரிவர வேலை செய்வதற்கு, மொத்தம் 1000 அல்லது 1500 தொழிலாளர்கள் போதும். ஆலைச் சொந்தக்காரர் அல்லது ஏஜெண்டுக்குக் கிடைக்கும் லாபம் ஒருபுற மிருக்க, மேற்பார்வை செய்யும் மேலதிகாரிகள் வாங்கும் சம்பளமோ, ஆயிரக்கணக்கிலும் அடங்குவதில்லை. இந்த ஏற்றத்தாழ்வுகளினால் வர்க்கப் போராட்டமும், பொருமையும், வெறுப்பும்வலுக்கின்றன. ஆலைத் தொழிலாளிக்குக் குடிசைத் தொழிலாளியை விட அதிகச் சம்பளம் கிடைத்தபோதிலும், அவன் உற்சாகமின்றி வாழ்கின்றான். அவன் அனுபவிக்கும் ஆத்மீகச் சீர்கேடோ அளவிடற் கரியது. தொழில் முறைக் கட்டுப்பாட்டை எடுத்துக்கொண்டாலும், ஆலையில், கட்டுப்பாடு மேலிருந்து தொழிலாளர்மீது சுமத்தப்படுகிறது. முதலாளிக்கும் தொழிலாளிக்கும் உள்ள தொடர்பு, முதலாளிக்கும் இயந்திரத்திற்கும் உள்ள தொடர்பைப் போன்றதே; சுரண்டுபவருக்கும் சுரண்டப்படுவோருக்கும் உள்ள தொடர்பே. சம்பளம் தருவோருக்கும் வாங்குவோருக்கும், உயிரும் உணர்வுமுள்ள மனிதத் தன்மையுள்ள உறவு எதுவும் கிடையாது. தொழிலாளி இன்னும் தாழ்த்தப்படுகின்றான். முதலாளியின் மூர்க்கத்தனமும் இறுமாப்பும் மேம்படுகின்றன. அவன் சுக போகத்தில் வாழக்கூடும்; ஆனால், அவன் ஆத்மீக வறுமை அவனை என்றும் வாட்டும். ஏழைகளுக்குப் பல லௌகீக சுகங்களும் வாழ்க்கை வசதிகளும் கிட்டுவதில்லை. ஆனால், ஆத்மீக வறுமையால் பீடிக்கப்படுவோருக்குக் கிட்டாதவையும் பலவுண்டு. ஆடம்பரமும் பணமும், மனிதனுக்குத் தேவலோகத்தில் இடமில்லாமல் செய்துவிடுகின்றன என்பதைத் தான் யேசுநாதரும், மற்ற மதாச்சாரியார்களும் எடுத்துக் காட்டியுள்ளனர். பணத்தைச் சேகரிப்பதிலும்

அதைக் காப்பதிலுமே ஒருவன் சக்தியனைத்தும் செலவாகி விடுகிறதே யொழிய, பணத்தால் அவன் அடையக்கூடிய கலாசார முன்னேற்றத்திற்கும், ஆத்மீக உயர்விற்கும் நேரமேயில்லாமல் போய் விடுகிறது. பணக்காரர்கள் ஏழைகளுக்குப் பண உதவி செய்தாலும், ஏதோ தருமம் செய்வதாக எண்ணியே செய்கின்றனர். இதனால் அவர்கள் இறுமாப்புத் தான் வளர்கிறது. மேலும் அவர்கள் தர்மம் செய்கின்றனர் என்பது உண்மையுமல்ல. ஏழைகளின் உழைப்பால் கிடைத்த செல்வத்தைப் பணக்காரர்கள் ஆக்ரமித்துவிட்டனர் என்பதே உண்மை. ஏழைகள், பணக்காரர்களுக்குத் தருமம் செய்தனர் என்பதே உண்மை. ஒரு பணக்காரன் எவ்வளவு தாராளமாகத் தருமம் செய்தாலும், முன்பு சமூகத்திடமிருந்து அவனுக்குக் கிடைத்துள்ள நன்மைக்கு ஈடுகட்ட முடியாது. மேலும் தர்மம், தருவோரையும் பெறுவோரையும் இழிவு படுத்துகிறது. தருவோருக்கு அகங்காரத்தை ஊட்டுகிறது; பெறுவோருக்கு அடிமைத் தனத்தை ஊட்டுகிறது. ஏழைகளுக்கு வேண்டியது, தனிப்பட்ட பிரபுக்களின் தர்மமுமல்ல, சர்க்காரிடும் பிச்சையுமல்ல. அவர்களுக்கு வேண்டியது நல்ல வேலையும் நியாயமான கூலியும். அதுவே, அவர்களிடைத் தன் மதிப்பையும், சுதந்திர உணர்ச்சியையும் வளர்க்கும். இவை யிரண்டும், சிறந்த ஜனநாயகப் பண்புகள்.

அரசியல் துறையில், ஆலை முறைக்கும் குடிசை முறைக்கும் உள்ள வேறுபாடோ மிகவும் முக்கியமானது. இந்தியாவிலுள்ள துணி ஆலைகளில் போடப்பட்டுள்ள மூலதனம் சுமார் 80 கோடி ரூபாய். இந்தியா, தன் தேவைகளைத் தானே பூர்த்தி செய்து கொள்வதற்கு இப்பொழுது நாம் உபயோகிக்கும் துணி அளவைக் கொண்டு கணித்தால், நூறு கோடி ரூபாய் மூலதனம்

வேண்டும். ஆனால், நாற்பது லட்சம் மூலதனமாகக் கொண்ட ஒரு ஸ்தாபனமோ, இந்தியா முழுவதும் பரவியுள்ளது; ஒவ்வொரு தொண்டருக்கும் அரசியல் உணர்வு ஊட்டியுள்ளது. அந்த ஸ்தாபனத்தில் வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளியும், தேசப் பொருளாதாரத்தில் தனக்குள்ள முக்கிய ஸ்தானத்தை உணர்கின்றான். தான் ஒரு பெரிய தேசீய ஸ்தாபனத்தின் அம்சம் என்பதை அவன் உணர்கின்றான். அவன் செய்யும் வேலை சம்பளத்துக்காக வெனினும், சிறந்த தேச சேவையாகி விடுகிறது. ஹிந்து, முஸ்லீம், ஹரிஜன், அனைவரும் இந்த ஸ்தாபனத்தில் ஒன்றுபட்டு வேலை செய்கின்றனர். அவ்வாறு வேலை செய்வதால், தங்கள் வேறுபாடுகளை மறந்துவிடுகின்றனர். ஆலைத் தொழிலிலும் இப்பலன் ஓரளவிற்கு ஏற்படுகிறது. ஆனால், குடிசைத் தொழிலினால் ஏற்படும் ஒற்றுமையோ அதை விட ஸ்திரமாக வுள்ளது. ஏனென்றால், தேசீய உணர்ச்சி அதற்கு அடிப்படையாக வுள்ளது. கிராம சேவை செய்யும் ஊழியரிற் பலர், சமயம் வரும்போது சத்யாக்ரஹ இயக்கத்தில் சேர முன் வருகின்றனர். உண்மையில், நிர்மாண ஊழியர்கள் படையை நிரந்தர சத்யாக்ரஹிகள் படையென்றே சொல்ல வேண்டும். 40 லட்ச ரூபாயைக் கொண்டே இவ்வளவு சாதிக்க முடியுமென்றால், நூறு கோடி ரூபாய் மூலதனத்தைக் கொண்டு குடிசைத் தொழில் மூலம் எவ்வளவு சாதிக்க முடியு மென்பதை நாம் உணர வேண்டும்.

சர்க்கா மூலம் சுயராஜ்யம் என்று காந்திஜி பேசும் போது, படித்தவர்கள் அதைப் பரிகசிக்கின்றனர். அவர் கொள்கையை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. இவ்வளவு லட்ச கஜ நூல், இவ்வளவு லட்ச கஜ துணியென்று அவர்கள் கணக்குப் போடுகின்றார்களே

யொழிய, குடிசைத் தொழிலின் இந்த ஓர் அம்சத்தின் மூலம் எவ்வளவு பெரிய ஸ்தாபனத்தை உண்டாக்க முடியுமென்பதை அவர்கள் உணர்வதில்லை. தேசத்தில் வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க உறுதியுடன் முன்வரும் ஆயிரக்கணக்கான தொண்டர்களை இந்த இயக்கம் திரட்டுகின்றது என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றனர். சர்க்கார், ஏழைகளுக்கு நிவாரணம் என்ற பெயரால் பிச்சையிடும் கெட்ட வழக்கத்தையும் இது ஒழிக்கிறது. இந்த ஒரு கைத்தொழிலை நிறுவுவதன் மூலம், இதே போன்ற ஸ்தாபனத்தைக் கொண்டு நாம் நிறுவக்கூடிய மற்றத் தொழில்களுக்கும் அடிகோலப்படுகிறது. பலாத்காரப் போரை ஆதரிப்பவர்கள், ஒரு சில துப்பாக்கிகள், குண்டுகள், பீரங்கிகள், விமானங்கள் என்றவ்வாறு தனித்தனியாக நினைப்பதில்லை; கணக்கு வழக்கின்றி இந்த நாசகார ஆயுதங்கள் அனைத்தையும் சேர்த்து, பெரிய ஆக்ரமிப்புத் திட்டத்தின் அம்சங்களாக அவற்றை உபயோகிக்கும் போர்முறை பற்றியும், இந்த ஆயுதங்களை உற்பத்தி செய்யும் முறை பற்றியும் நினைக்கின்றனர். ஆனால், நம் நண்பர்கள் சர்க்காவைப்பற்றிப் பேசும்போது மட்டும், அதைமட்டும் தனியாக எடுத்துக்கொண்டு, அதனால் என்ன சாதித்துவிட முடியுமென்று கேட்கின்றனர். சர்க்காவை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தக் கூடிய கூட்டுறவையும், ஒத்துழைப்பையும், பலமான ஸ்தாபனத்தையும் அவர்கள் மறந்துவிடுகின்றனர். இவற்றிற்கும் பொருளாதார முக்யத்துவம் உண்டு என்பதை அவர்கள் எண்ணுவதில்லை. கொடிய போருக்குச் சாதகமான சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பு இருப்பதால்தான், அப்போர் முறையால் நாசம் விளைகிறது. அந்த அமைப்பு இல்லாவிடில், ஆயுதங்களால் மட்டும் அதிக பலன் ஏற்

பட்டுவிடாது. ஒரு சேனை தோற்கும்போது கூட, ஆயுதங்கள் இல்லாத குறையால், சாதாரணமாய்த் தோற்பதில்லை. சேனையின் கட்டுப்பாடு முறிக்கப்படுவதாலோ, போர் வீரர்கள் உறுதி குலைக்கப்படுவதாலோதான் சேனை தோற்கிறது. ஆகவே, அமைப்பு முறிந்தால் ஆயுதங்களால் எதிரிக்குத்தான் பலன் ஏற்படும். போர்க்களத்தில் ஒரு சேனை வெற்றி பெற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால், சேனையைப் போருக்கு அனுப்பிய அரசாங்கமே கவிழ்ந்துவிடலாம். அஸ்திவாரமே தகரும்போது, கட்டிடமே இடிவது இயற்கைதானே.

"சிறிய சர்க்காவிற்கா இவ்வளவு பலம்?"

எதையும் மேலெழுந்த வாரியாகப் பார்த்துவிட்டுச் செல்பவர்கள் மற்றொரு வகையிலும் மயங்கி விடுகின்றனர். துப்பாக்கி அல்லது குண்டு போன்ற நாச ஆயுதம் ஒன்றைப் பார்த்தாலே சிலருக்கு அதன் வலிமை மனத்தில் பதிந்து விடுகிறது. ஒரு துப்பாக்கித் தொழிற்சாலை, பார்த்த மாத்திரத்திலேயே பயங்கரமாகவும், மிக முக்கியமாகவும் தோன்றுகிறது. ஆனால், ஒரு துணி ஆலையையோ சர்க்கரை ஆலையையோ பார்த்தால், நமக்கு ஒன்றுமே தோன்றுவதில்லை. வீட்டுக்கு வீடு நடந்து கொண்டிருக்கும் மிக உபயோககரமான கைத்தொழில் நமக்கு முக்கியமாகத் தோன்றுவதில்லை. ஆனால், ஜாம்ஷெட்பூரிலுள்ள டாட்டா இரும்புத் தொழிற்சாலையிலோ, ஓர் ஆயுத உற்பத்தி சாலையிலோ நடக்கும் வேலை மிக முக்கியமாகத் தோன்றுகிறது. சர்க்காவைப் பார்த்தால் பயம் தோன்றுவதில்லை; பணிவு தோன்றுவதில்லை. அது ஓர் 'அப்பாவி' போலிருக்கிறது. ஆனால், அது சர்க்காவின் தவறல்லவே. சிறிய பொருள்களிலும் அடங்கியுள்ள பெரிய உண்மைகளையும், எளிமையில்

இயங்கும் எழிலையும் காண இயலாத கல்வி கற்றோரின் காமாலைக் கண்மீது தான் தவறு. பெரிதாக ஒன்றைக் கண்ட மாத்திரத்திலேயே பிரமாதமாக எண்ணிவிடும் அறியாமையின் தவறே அது. கிரேக்க தேசத்தில் இருந்த ஜனநாயக நகரக் குடியரசு, அலெக்ஸாந்தர் அல்லது நெப் போலியனின் சாம்ராஜ்யத்தைப் போல் பெரியதாகவோ, பலமானதாகவோ தோன்றாமலிருக்கலாம். ஆனால், அச் சிறு குடியரசின் ஆத்மீக பலமும், கலாசார உயர்வும் அப் பெரிய சாம்ராஜ்யங்களுக்கும் மேம்பட்டதாய் விளங் கியது. கெடுதல் செய்வதற்கு அதனிடம் சக்தி அதிகமாக இல்லை. அதைப் போலவே, கெடுதல் செய்யும் சக்தி, ஆலைத் தொழிலைவிடக் குடிசைத் தொழிலுக்குக் குறை வாகவே இருக்கிறது. உண்மையான தேசப்பற்று உடை யவர்கள் பகட்டில் மயங்கிவிடக் கூடாது. காந்திஜியின் அடிப்படைக் கொள்கையை ஆராய்ந்துணர அவர்கள் முயல வேண்டும். தர்க்க ரீதியில் அவர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால், குடிசைத் தொழில் மூலம் சுதந்திரத்தையும், ஒத்துழைப்பையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார அமைப் பையும், அதன் மூலம் அரசியலமைப்பையும் ஏற்படுத்த முடியுமென்பதை அவர்கள் உணர்வார்கள். அந்த அமைப்பின் மூலம், நமது நாட்டில் இன்றுள்ள மிக முக்கியக் குறைபாடு—பலர் ஒன்று திரண்டு வேலை செய்ய இயலாமலிருப்பது—நீங்கி விடும்.

யுத்த காலம்

குடிசைத் தொழிலால் ஏற்படும் அமைப்பு—யுத்த காலத்திற்கும் சரி, சமாதான காலத்திற்கும் சரி, ஏற்றதாகும். ஐரோப்பாவில் யுத்தம் நடப்பதால், எல்லாப் பொருள்களின் விலைவாசிகளும் அநியாயமாக உயர்ந் துள்ளன. சில பொருள்களின் முன்பிருந்த விலைக்கும்

இப்போதைய விலைக்கும், ஏணிவைத்தால் கூட எட்டா தெனச் சொல்லலாம். சில பொருள்கள், எவ்வளவு விலை கொடுத்தாலும் கிடைப்பதில்லை. புது மூலப் பொருள் கள் கிடைப்பதற்கும் வழியில்லை. யுத்தம் தொடங்குவ தற்கு முன்பே, புத்தி கூர்மையுள்ள ஓர் ஆமதாபாத் ஆலை ஏஜெண்டு, தேசீயத் தொழில் திட்டக் கமிட்டி முன்பு ஒரு சிபார்சு செய்தார். யுத்தத்தை முன்னிட்டு, ஆலைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களைச் சர்க்காரே வாங்கிக் கொண்டு, பின்னர், ஆலைகளுக்கு நியாயமாகக் கிடைக்கும்படி விநியோகம் செய்யவேண்டு மென்பது அந்தச் சிபார்சு. அந்தச் சிபார்சு என்னவாயிற்று என் பது யாருக்கும் தெரியாது. கமிட்டி அதைப் பற்றித் தீர்க்கமாக ஆலோசிப்பதற்கு முன்பாகவே, யுத்தம் தொடங்கி விட்டது போலும்! யுத்த காலத்தில், மூலப் பொருள்கள் கிடைக்காததால், ஆலைகளின் உற்பத்தியைக் குறைக்கவோ அல்லது அடியோடு மூடிவிடவோ நேரிடக் கூடும். உற்பத்தி செய்யப் படுவதும், ராணுவத்தின் உப யோகத்திற்காகச் சர்க்காரால் ஒதுக்கப்படக்கூடும். ஆனால், குடிசைத் தொழிலில் உற்பத்தியாகும் பொருள்களோ முதலில், வீட்டுக்காரனின் சொந்தத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டா லொழிய, ராணுவத்திற்கென்று சர்க் காரால் ஒதுக்கப்பட முடியாது. குடிசைத் தொழில் முறையில், உற்பத்தி செய்பவனும் அவன் குடும்பமுமே பிரதானம். இந்தியாவில் இயந்திரத் தொழில் பிற் போக்கா யுள்ளதால்தான் இந்நிலை யேற்பட்டுள்ள தென்று சிலர் வாதாடலாம். அதுவே காரணமாயிருந் தாலும் கூட, அந்நிலைமைக்கு அனுசரணையாகத்தானே நாம் செல்ல முடியும். மேலும், இயந்திரத் தொழிலில் முன்னேறியுள்ள மேல் நாடுகளில்கூட, யுத்த காலத்தில் வேண்டிய பொருள் கிடைப்பது கஷ்டமாக விருக்கிறது.

சர்வதேச நிலைமை இவ்வளவு சஞ்சலமுற்று இருக்கும் போது, எந்தத் தேசமும் தன் முக்கியத் தேவைகளுக்காக அயல் நாட்டை நம்பியிருக்க முடியாது.

யுத்த காலத்தில், எதிரி பெரிய ஆலைகளை நாசம் செய்து, உற்பத்தி முறையை அடியோடு தகர்க்க முடியும். ஆனால், தேசம் முழுவதும் பரவிக் கிடக்கும் தொழிலை அழிப்பது அசாத்தியம். பல் வேறு கிராமங்களிலும் உள்ள உற்பத்தி நிலையங்களையும் சாதனங்களையும் அழிக்கும் செலவே எதிரிக்குக் கட்டிவராது.

சமீபத்தில் பண்டித நேரு சீனு சென்றபோது சர்க்கா, குடிசைத் தொழில் இயக்கங்கள் பற்றித்தான் சீன மக்கள் மிக்க ஆர்வத்துடன் பல கேள்விகள் கேட்டனர். "அத் திட்டங்கள் முன்னேறி வருகின்றனவா? அவற்றை இன்னும் எந்தெந்த வழிகளில் வளர்க்க முடியும்?" இவை போன்ற பல கேள்விகள் கேட்கப்பட்டன. இந்தியர்களைப் போலவே சீன தேசத்தவரும் தங்களுக்கு வேண்டிய பொருள்களிற் பெரும்பாலானவற்றை, அயல் நாடுகளிலிருந்தும் குறிப்பாக, ஜப்பானிடமிருந்தும் இறக்குமதி செய்கின்றனர். இப்பொழுதோ, ஜப்பானுக்கும் சீனுவுக்குமிடையே போர் நடந்து வருகிறது. மற்ற மார்க்கங்களில் பொருள் பெறுவதும் சாத்தியமில்லை. எல்லாத் துறைமுகங்களும் முற்றுகை யிடப்பட்டுள்ளன. தங்கள் பொருள்களைச் சீனுவுக்குச் சேர்ப்பிப்பதற்காகப் பிரிட்டிஷார் பர்மா மூலம் ஒரு தரைப் பாதையைத் திறக்க வேண்டியதாயிற்று. இப்பாதை மூலம் சீனுவுக்குத் தேவையான பொருள்களில் ஒரு சிறிதளவுகூட எடுத்துச் செல்ல முடியாதென்பது அனைவரும் அறிந்ததே. மேலும், இப்பாதை, ஜப்பானியர் குண்டுவீச்சுக்கு இலக்காகவும் கூடும். ஆகவே, சீன மக்கள் தங்களுக்கு வேண்டிய பொருள்

களைத் தாங்களே தங்கள் சொந்த நாட்டில் உற்பத்தி செய்துகொள்ள முற்பட்டுள்ளனர். தங்கள் அன்றாட வாழ்க்கைக்கு மிக இன்றியமையாததான பொருள்களை உற்பத்தி செய்ய, அவர்கள், கூட்டுறவு முறையில் கிராமக் கைத்தொழில்கள் தொடங்கியுள்ளனர். 'காந்தி - தறி' என்று அவர்கள் பெயரிட்டுள்ள தறிகளைக் கொண்டு தொழில் முறையைப் பரப்பி வருவதாகவும் நமக்குச் செய்தி கிடைத்துள்ளது. ஆகவே, நம் இயக்கம் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளதென்று அறிந்து, நம் அனுபவத்தைக் கொண்டு அவர்களும் நன்மை அடைய விரும்புவது இயற்கையே. நம் நாட்டிலேயே, சர்க்காவில் அவநம்பிக்கை கொண்டுள்ள அறிஞர்கள் இருக்கின்றனர் என்பது, அந்த அறியாத சீனர்களுக்குத் தெரியாது. சர்க்காவைப் போலவேதான் அஹிம்ஸை பற்றியும். உலக மக்களனைவரும் பலாத்காரத்தில் நம்பிக்கை யிழந்து, அஹிம்ஸை மூலம் விமோசனம் கிடைக்குமென்று எதிர் பார்த்துக்கொண் டிருக்கும் நேரத்தில், அஹிம்ஸை இதுவரை சாதித்துள்ளது பற்றியும் இனிச் சாதிக்கக்கூடியது பற்றியும் நமக்கே சந்தேகங்கள் வலுத்துவிட்டன. 'அஹிம்ஸை மூலம் இந்தியா ஒரு சில சலுகைகளைப் பெறக்கூடும்; டொமினியன் அந்தஸ்து வேண்டுமானாலும் அடைவது சாத்தியம். ஆனால், அஹிம்ஸை மூலம் பூர்ண சுதந்திரம் கிடைப்பது அசாத்தியம்' என்று இவர்கள் வாதாடுகின்றனர். அவ்வாறே அஹிம்ஸை மூலம் சுதந்திரம் பெற்றுவிட்டாலும், அதைக் காப்பதற்குப் பலாத்காரம் அவசியமல்லவா என்று சிலர் கேட்கின்றனர். இன்றுள்ள அதிகார வர்க்கத்தினரை அஹிம்ஸை மூலம் விரட்டமுடியுமென்றால், இனி வரக்கூடிய ஆக்ரமிப்புக் காரர்களையும் ஏன் அஹிம்ஸை மூலம் விரட்ட முடியாது என்று கேட்கிறேன்?

1939-ம் ஆண்டின் கடைசியில், ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இந்தியாவிற்கு விஜயம் செய்தபோது, ஒரு பேட்டியில் காந்திஜியிடம் பின்வருமாறு கூறினாராம்: "ஐரோப்பாவும் அமெரிக்காவும் சலித்துக் களைத்து விட்டன. சீர்கேடு எங்களைப் பீடித்துவிட்டது. இந்தியாவும் சீனாவுமே எங்களுக்குப் புது மார்க்கத்தைக் காட்ட வேண்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.'' இவ்வாறு உலகம் முழுவதும் நம்மை எதிர்பார்த்து நோக்கும்போது, நாம், நம் ஞானத்திலிருந்தே, நம் ஒப்பற்ற தலைவரிடமிருந்தே நமது பார்வையை அகற்றி, இருளை நோக்க விரும்புகின்றோம். என்ன விபரீதம்! இன்று ஆத்மாவைப்பற்றி நாம் கவலைப்படுவதில்லை. நவநாகரிக யுவர்களாய் விளங்கவேண்டுமென்றுதான் நமது இளைஞர்கள் கவலைப்படுகின்றனர். "காந்தி கோஷ்டியினரனைவருமே பித்துக்குளிகள் போலிருக்கின்றனரே! இவர்களா நமக்கு வழிகாட்டப் போகின்றனர். இவர்களிடம் என்ன திறமையிருக்கப்போகிறது'' என்று பலர் எள்ளி நகையாடுகின்றனர். ஆனால், சரித்திரத்தை நாம் சரிவரப் படித்தால், மீன் பிடிக்கும் செம்படவர்கள் சீடர்களைத் திரட்டி ஞான மார்க்கத்தைக் காட்டிய மதாச்சாரியார்களாக விளங்கியுள்ளதைக் காணமுடியும். நாகரிகப் பூச்சில் மயங்கி ஆண்மையை இழந்த பல இனங்களைப் பண்படாத காட்டுமிராண்டிகள்கூட வென்றதைச் சரித்திரத்தில் காணலாம்.

ஓர் அரசியல் அல்லது பொருளாதார சீர்திருத்தத்திற்கு நவநாகரிகப் பூச்சு இல்லையென்ற காரணத்தால், அதை நாம் அசட்டை செய்யமுடியாது. இன்று, நாகரிக மானவர் வசிக்கும் வீடுகளில் தையல்வேலை செய்யலாமாம். ஆனால் நூற்பதுமட்டும் நாகரிகத்திற்கு விரோதம். இவ்வாறு பேசுபவர்கள் தங்களைப் புரட்சி வாதிகள்

என்று வேறு சொல்லிக் கொள்கிருர்கள். கர்னுடக மனப் பான்மையை உதறி, வைதீக பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலையடைந்து, மூட நம்பிக்கைகளை முறித்தெழுந்து புதிய எண்ணங்களையும் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே புரட்சிகரமான மனப்பான்மை. பலர் எள்ளி நகையாடியபோதும், கொள்கையைக் கை விடாமல் கடைப்பிடிப்பதே புரட்சி மனப்பான்மைக்கு அழகு. 1920-லிருந்து காங்கிரஸ் வாதிகள் இந்தப் புரட்சிப் பாதையைப் பின்பற்றியுள்ளனர். பொது மக்கள் அவர்களைப் பரிகசித்த துண்டு. அவர்கள் குடும் பங்களே, அவர்களைத் தருதலைகள் என்று அழைத்த துண்டு. 1920 லும், 1930 ல் தண்டி யாத்திரையின் போதும், உப்பு சத்யாக்ரஹத்தின்போதும் இவ்வாறு பொதுமக்கள் பரிகாசம் செய்தனர். அன்று புரட்சிப் பாதையைப் பின்பற்றிய காங்கிரஸ் வாதிகள், தங்கள் லட்சியம் கைகூடுவதற்கு முன்பாகவே பிற்போக்காகவோ சீர்கேடுற்ருே போய்விடாமல், தங்கள் புரட்சி மனப் பான்மையை மேலும் காத்துக்கொள்ள வேண்டிய தவசியம்.

அத்தியாயம் 2

செயல் முறையில் சமதர்மம்

குடிசைத் தொழில், அடிப்படையிலேயே சமதர்மத் தன்மை கொண்டது. சுரண்டல் இருக்கக்கூடாதென்பதும் வருவாய் அனைவருக்கும் சமமாகவோ, ஏறக்குறைய சமமாகவோ இருக்கவேண்டும் என்பதும் தான் சமதர்மத்தின் கொள்கைகள். தொழிலாளியின் உழைப்பே, அவன் உற்பத்தி செய்யும் பொருளுக்கு மதிப்புத் தருகின்றது என்ற கொள்கையின் பேரில் மார்க்ஸும், எஞ்சல்ஸும் தங்கள் சித்தாந்தத்தை வகுத்தார்கள். அக்கொள்கை சரியானது என்று எந்தப் பொருளாதார நிபுணரும் இன்று ஒத்துக்கொள்ளமாட்டார். ஆனால், அது சரி யென்று ஒப்புக்கொண்டால்கூட, கிராமக் கைத்தொழில் அக்கொள்கையை ஏறக்குறைய பூர்த்தி செய்கிறது. அத் தொழிலில், பொருளின் விலை அல்லது மதிப்பில் பெரும் பகுதி அதைச் செய்த தொழிலாளிக்கே உரியதாகும். முதலாளிக்கு லாபம் தருவது என்பது அதில் கிடையாது. ஏனென்றால், தொழிலாளியே தான் தனது எசமானர். பொருள் உற்பத்தியால் கிடைக்கும் லாபம் அனைத்தும் தொழிலாளியையே சேர்கிறது. உற்பத்தி சாதனங்களைப் பொதுவுடைமையாக்க வேண்டும் என்பது சமதர்மத்தின் மற்றொரு கொள்கை. உற்பத்தி சாதனங்கள் தனி முதலாளியின் கையிலிருப்பதால் தான், சுரண்டலும், தொழிலாளியை அடிமைப் படுத்துவதும் சாத்தியமாகின்றன. குடிசைத் தொழிலில், உற்பத்தி சாதனங்கள் ஒரு குறுகிய முதலாளி வர்க்கத்தினிடம் சிக்கிக் கொள்வதில்லை. பெரிய இயந்திரங்கள் அவசியமில்லை யாதலால், தொழி

லாளர் தங்கள் சொந்த மூலதனத்தைக் கொண்டே தொழிலை ஆரம்பிக்க முடிகிறது. ஆயினும், வறுமையில் ஆழ்ந்துள்ள நம் நாட்டில், மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் அன்றுடம் பட்டினிப் பயத்தால் பீடிக்கப்படும் நிலையில், அனைவரும் தங்கள் தொழிற் சாதனங்களை வாங்கித் தொழிலை ஆரம்பிக்க முடியாம லிருக்கலாம். அத்தகையோருக்கு இன்று கிராமக் கைத்தொழில் சங்கமும், அகில பாரத சர்க்கா சங்கமும் தொழிற் சாதனங்களைத் தந்து உதவுகின்றன. இவற்றின் விலையை, சிறு சிறு தொகைகளாகப் பல தவணைகளில், தொழிலாளர், சங்கத்துக்குத் திருப்பிக் கொடுத்துவிடலாம். சிலருக்குச் சங்கம் இலவசமாகக் கொடுப்பதும் உண்டு. உற்பத்தி சாதனங்கள்மீது வட்டியோ, குத்தகைப் பணமோ தொழிலாளர், சங்கத்துக்குத் தரவேண்டியதில்லை. உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் அரசாங்கத்துக்குச் சொந்தமாக்கப்பட்டால்கூட, அவற்றை அந்த அரசாங்கமே, ஏழை மக்களைச் சுரண்டும் வழியில் பயன்படுத்த முடியும். அரசாங்க முதலாளித்துவம், தனிப்பட்ட முதலாளித்துவத்தைப் போலவே கொடியதாக இருக்கலாம்; அதைவிட அதிகக் கொடுமை காட்டவும் முடியும்; ஏனென்றால், அரசாங்கத்துக்குள்ள அதிகாரம் அனைத்தையும், அது தன் சுரண்டலுக்காகப் பயன்படுத்த முடியும். தொழிலாளர் கிளர்ச்சியை ராணுவ, போலீஸ் அதிகாரம் கொண்டு அடக்கிவிட முடியும். தனிப்பட்ட முதலாளிகளின் ஏகபோக உரிமைகளைவிட அரசாங்க ஏகபோக உரிமைகள் மிகக் கொடியன. இது பாஸிஸ, நாஜிஸ நாடுகளில் மட்டுமல்ல, பொதுவுடைமை ருஷ்யாவிலும் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்க முதலாளித்துவம், அரசாங்க ஏகபோகங்கள் ஆகிய அபாயங்கள் குடிசைத் தொழில் முறையைப் பாதிக்க முடியாது.

பொருளாதார சமத்துவம்

குடிசைத் தொழிலில் ஈடுபடுவோர் அனைவருக்கும், ஏறக்குறைய சமமான வருவாய் கிடைக்கிறது. இதனுல் ஏற்றத் தாழ்வுகளும், அதன் பயனாய் எழும் மனக்கசப்பும், பொருமையும், விரோதமும் மறைகின்றன. பணக்காரன்தான் உயர்ந்தவன் என்ற போலி அந்தஸ்து ஏற்படுவதில்லை. இத்தகைய தொழில் முறையில் ஒரு சிலர் கணக்கு வழக்கற்ற லாபத்தைக் குவித்துக்கொண்டு தங்கள் அதிகாரத்தையும், செல்வத்தையும் நிலைநாட்ட முயற்சிக்க முடியாது. மற்றொரு பக்கத்தில், பட்டினியால் பீடிக்கப்பட்டு வறுமையால் வாடும் ஏழைகளும் இருக்கமாட்டார்கள். பாமர மனிதனுக்கு இத்தகைய தொழில் முறையினுல் ஏற்படக்கூடிய நன்மைகள் அளவற்றவை. வர்க்க விரோதமோ, வர்க்கப் போராட்டமோ எழமாட்டா. வருங்காலத்தில் பெரிய போராட்டமாக மூளக்கூடிய வர்க்க வேறுபாட்டை, நாம் இத்தொழில் முறையின் மூலம் ஆரம்பத்திலேயே களைந்துவிட முடியும்.

புரட்சி

ஆலைத் தொழில்கள் இல்லாவிடில், தொழிலாள வர்க்கமென்று தனியாக ஒன்று இருக்காதென்றும், அதனுல் வர்க்க விரோதமும், புரட்சியும் ஏற்படா வென்றும் சிலர் வாதாடுகின்றூர்கள். புரட்சி ஏற்படவேண்டுமென்ருல் வர்க்க விரோதம் இருக்கவேண்டு மென்பது இவர்கள் வாதம். இதை ஒப்புக்கொண்டால், அமைதியான நடவடிக்கைகள் மூலமாகவும், ஒத்துழைப்பு மூலமாகவும் புரட்சி ஏற்படுத்தமுடியாது என்பதைத் தடுத்துக் கொள்வதாகும். புரட்சி என்பது இயற்கையின் இன்றியமையாத அம்சம். பூமியிலும், உயிர்களிலும், சமூக, அரசியல் வாழ்விலும் புரட்சி ஏற்படுகிறது. இத்தகைய

புரட்சி, வர்க்கப் போராட்டத்திஞல் தான் ஏற்பட முடியும் என்பது சரித்திர, விஞ்ஞான அறிவற்றவர்களின் கூற்ருகும். உயிரற்ற பொருள்கள் முதற்கொண்டு, தாவர, விலங்கு வர்க்கங்களிலும், மனித வர்க்கத்திலும், புரட்சி ஏற்படுவதற்கு முன், வெளிப்பார்வைக்குப் புலப்படாமல், நீண்டகாலம் அமைதியான மாறுதல் நடந்து வருகிறது. குழந்தை, பிறப்பதற்கு முன் கருத்தரித்து, பத்து மாதங்கள் அன்னை வயிற்றில் இருக்கத்தானே வேண்டும். அந்தப் பத்து மாதங்கள் இல்லாவிடில் சுகப்பிரசவம் நேரிடாது. அதே போல், புரட்சி என்பது ஒரு நீண்டகால பரிணமத்தின் இறுதிக் கட்டமேயாகும். அந்த இறுதிப் புரட்சி பலாத்காரமாய், இடியும் புயலுமாக ஏற்பட வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஒரு கல்லை உடைப்பதற்கு 20 அடிகள் அடிக்கவேண்டுமென்று வைத்துக் கொள்வோம். இருபதாவது அடியில்தான் கல் உடையலாம். ஆனுல், அதற்கு முந்திய 19 அடிகள் விழுந்திராவிடில் இருபதாவது அடியிஞல் பயன் ஏற்பட்டிருக்காது. ஒவ்வொரு அடியும், கல்லின் சக்தியைச் சிறிது சிறிதாகத் தகர்த்துக்கொண்டே வந்தது.

இயற்கையில் நடந்த புரட்சிகளை நாம் ஆராய்ந்தால், இந்த உண்மைகள் நன்கு புலப்படும். மனிதர்களிடை ஏற்பட்ட புரட்சிகளை மட்டும் நாம் எடுத்துக்கொள்வோம். ஒவ்வொரு புரட்சி ஏற்பட்டபோதும், திடீரென ஏற்பட்ட கிளர்ச்சிபோல் தான் வெளிப் பார்வைக்குத் தென்பட்டது. ஆனுல் அதை ஆராய்ந்து பார்த்தால், அதற்கு முன்பு நீண்டகாலம் அமைதியான மாறுதலும், ஆயத்தமும் நடந்து வந்துள்ளதை நாம் காணலாம். பிரெஞ்சுப் புரட்சிக்குக் காரணமாயிருந்த சம்பவங்கள், குறைந்தது நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நடக்கத் தொடங்கி விட்டன ; ரஷ்யப் புரட்சியிலும் அவ்வாறே.

பலாத்காரம் பீறிட்டு வருவதுதான் புரட்சி என்று எண்ணுவது தவருகும். உலக சரித்திரத்தில், மகத்தான பல புரட்சிகள் பலாத்காரமின்றியே நடந்துள்ளன. மக்கள் வறுமையின் எல்லையை அடைந்து கதியற்று இருந்தால் தான் புரட்சி ஏற்படும் என்பதுவும் உண்மையல்ல. 1943-ல் வங்காளத்தில் பஞ்சம் ஏற்பட்டபொழுது, மக்கள் கதியற்றுக் கலங்கி நின்றனர். அந்நிலைமை அவர்களைப் புரட்சிக்குத் தூண்டவில்லை. அவர்கள் செயலற்றுச் சக்தியற்றுப் போய்விட்டனர். சில சமயங்களில் பொருளாதார நிலைமை அபிவிருத்தி அடைய அடைய ஏழை மக்களின் உணர்வும் ஆசையும் அதிகரிக்கிறது. எனவே, அவர்கள் புரட்சிக்கு ஆயத்தமாகின்றனர்.

அமைதியாக, சமாதான முறையில், பலாத்காரமின்றி ஸ்திரமான, பண்பட்டதோர் புரட்சியை உண்டாக்குவதே கிராமக் கைத்தொழில் இயக்கத்தின் நோக்கமாகும். கலகம், கொள்ளை, பலாத்காரம் முதலியவற்றை அது தடுக்க விரும்புகிறது. நடைபிணமாக இருக்கும் கிராமவாசியிடம் புத்துணர்ச்சியைப் புகுத்தி, அவனுக்குப் போராட்ட சக்தியை ஊட்டுகிறது அந்த இயக்கம்.

கிராமக் கைத்தொழில் இயக்கம் புரட்சி இயக்கம் அல்ல என்றும், மனித சமுதாயத்தைப் பின்னுக்கு இழுத்துச் செல்லும் பிற்போக்கான இயக்கமென்றும் சிலர் வாதாடுகிருர்கள். உணர்வற்ற, கண்மூடித்தனமான கர்னாடக சம்பிரதாயங்களையும், தொழில் முறைகளையும் பின்பற்றிய குடிசைத் தொழிலைக் காந்திஜி ஆதரிக்கவில்லை. மார்க்ஸிய வாதிகள் சித்தாந்தப்படி புரட்சி வேகம் எப்பொழுதும் உள்ளூர ஓடிக்கொண்டேயிருக்கிறது. தெள்ளிவுடனும் துணிவுடனும் நாம் நடவடிக்கை யெடுத்து அவ்வேகத்தை வெளிப்படுத்த

வேண்டும். ஆகவே உணர்வற்ற ஓர் இயக்கத்தைச் சரியான வழியில் சரியான நோக்கத்துடன் திருப்பினால் அதை ஒரு புரட்சி இயக்கமாக்க முடியும் என்பது அவர்கள் சித்தாந்தம். அவ்வாறே குடிசைக் கைத்தொழில், பழைய உணர்வற்ற தொழில் முறைகளைப் பின்பற்றி நடந்துவந்திருக்கலாம். இன்றோ, அவற்றைவிடச் சிறந்த வேலை முறைகளும் வசதிகளும் இருக்கின்றன. அம்முறைகளைப் பின்பற்றிக் குடிசைக் கைத்தொழிலை நடத்தினால், அதையும் புரட்சி இயக்கமாக நடத்த முடியுமே. மேலும், உணர்வும் உறுதியும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படுவது நிச்சயம். இன்றுள்ள உற்பத்தியைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான நூலைச் சர்க்காவைக் கொண்டே உற்பத்தி செய்யும் வழியை நாம் கண்டுபிடிக்கலாம். ஆகவே, குடிசைக் கைக்தொழிலையும் நாம் சரியான வழியில் நடத்தினால், அதை ஒரு புரட்சி இயக்கமாக ஆக்க முடியும்.

ஒரு பொருள், பழைய காலத்திலிருந்தே நிலைத்து வந்துள்ளது என்ற காரணத்தால், அதில் புரட்சி சக்தி இல்லையென்று நாம் சொல்லிவிட முடியாது. அவ்வாறு பார்த்தால், பண்டைக் காலத்திலிருந்தே உபயோகிக்கப் பட்டு வந்துள்ள பலாத்காரமும், புரட்சி சக்தி ஆக முடியாதே. ஒரு புரட்சி எண்ணத்தைப் புகுத்தவும் இந்தப் பலாத்காரம் உபயோகப்படுகிறது. பிற்போக்கு முறையைப் பலப்படுத்தவும் இந்தப் பலாத்காரம் பயன்படுகிறது. அப்பொழுது, பலாத்காரம் பிற்போக்கு சக்தியாக வேலை செய்கிறது. ஒரு புரட்சியின் அடிப்படை அதன் லட்சியத்தில் இருக்கிறதேயொழிய, அப்புரட்சியை நடத்த என்ன மார்க்கங்கள் கையாளப்படுகின்றன என்பதில் அல்ல. காந்திஜியின் குடிசைக் கைத்தொழில் இயக்கத்தின் லட்சியம் புரட்சிகரமானது.

புதிய மார்க்கங்களைக் கையாள்வதுதான் புரட்சியின் அறிகுறியென்று வைத்துக்கொண்டாலும், காந்திஜியின் இயக்கமே மிகப் புரட்சிகரமானது. பண்டைக் காலத்தி லிருந்து உபயோகமாகி வந்த பலாத்கார ஆயுதத்தை அவர் உதறிவிட்டு, இதுவரை எவரும் பொதுஜன இயக் கங்களில் கையாளாத அஹிம்ஸைமார்க்கத்தைக் கையாள் கிறார்.

வெளித் தோற்றத்தில் சிறிதாகவும் சாதாரண மாகவும் தோன்றும் காரியங்களும், உண்மையில் புரட்சிகரமாய் இருக்க முடியும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சமூக சீர்திருத்தத்திற்கும் புரட்சி கரமான நடவடிக்கைக்கும், செயலில் வித்தியாசம் இருக் காது; அதைச் செய்யும் விதத்திலும், எந்த நோக்கத் துடன் அது செய்யப்படுகிறது என்பதிலும் தான் வித்தி யாசம் இருக்கும். நான் புனவில் மாணவனாக இருந்த போது, மித வாதிகள், மது விலக்கு இயக்கத்தைத் தொடங்கினர். திலகர் அதில் பின்பு சேர்ந்து கொண் டார். அவர் சேர்ந்தவுடன் இயக்கத்தை அரசியல் ரீதியி லும், ஸ்தாபன முறைப்படியும் நடத்தத் தொடங்கினார். கள்ளுக்கடைகள் மறியல் செய்யப்பட்டன. புனவில் மதுபான விற்பனை குறைந்தது. இதைக் கண்ட அதிகாரி கள் கிலிகொண்டு, தொண்டர்களைச் சிறைப்படுத்தினர். சமூக சீர்திருத்த நோக்குடன் மட்டுமே இயக்கத்தில் சேர்ந்த மிதவாதிகள், இயக்கத்திலிருந்து உடனே விலகி விட்டனர். அதேபோல், தேசீய எழுச்சி தொடங்கிய காலத்திலிருந்தே பல இயக்கங்கள் நடந்துள்ளன. சாதாரண காரியங்களும் புரட்சிகரமான நடவடிக்கை கள் ஆகிவிடுகின்றன. வங்காளப் பிரிவினையை எதிர்த் துக் கிளர்ச்சி நடந்தபோது, வந்தே மாதர கீதம் பாடிய தற்காகப் பல தொண்டர்கள் சிறைப்பட்டனர். அது

புரட்சி நடவடிக்கைதானே? சாதாரண தேசியகீதம் ஒன்று எழுதியதற்காகப் பல கவிகள் பல ஆண்டுகள் சிறைவாசம் அனுபவிக்க நேர்ந்தது. 1921ல் இளவரசர் விஜயத்தைப் பகிஷ்கரித்து இயக்கம் நடந்தபோது, ஆயிரக்கணக்கானவர் சிறைக்குச் சென்றனர். சைமன் கமிஷன் பகிஷ்கார இயக்கத்தில் லாலா லஜபதிராய் தம் உயிரையே இழந்தார். உப்புக் காய்ச்சுவது மிகவும் சாதாரண விஷயம்தான். ஆனால், 1930ல் அந்த இயக்கம் நடந்தபோது அது புரட்சிகரமான நடவடிக்கை ஆயிற்று. தேசீயக் கொடியைத் தாங்கிச் சென்றதற்காகப் பல தொண்டர்கள் தடியடிக்கு ஆளாகியுள்ளனர்; சிலர் தங்கள் உயிரையே அர்ப்பணம் செய்துள்ளனர். ஒரு சிறு காரியமும், உயர்ந்த லட்சியத்துடன் செய்யப்படும்போது புரட்சி நடவடிக்கையாகி விடுகிறது. 'தீண்டாமை விலக்கு' என்பது பாட்டிமார் செய்யவேண்டிய வேலை யென்று பலர் ஏளனம் செய்துள்ளனர். ஆனால், காந்திஜி அந்த இயக்கத்தை நடத்தியுள்ள விதத்தில், அது மகத்தான புரட்சி இயக்கமாக நடந்துள்ளது. அது போலவே அவருக்கும், அவரைப் பின்பற்றும் ஆயிரக்கணக்கான தொண்டர்களுக்கும், சர்க்கா, மிகப் புரட்சிகரமான தாயுள்ளது. குடிசைக் கைத் தொழில் கர்னாடகமானது தான். ஆனால், அதைப் புத்துணர்வுடனும், அரசியல், சமூக மறுமலர்ச்சி நோக்குடனும் செய்யும் போது, அது புரட்சி நடவடிக்கை ஆகிவிடுகிறது. அந்த இயக்கத்தின் நோக்கங்களை சிலர் ஒத்துக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், அது புரட்சிகரமான நடவடிக்கை யில்லை யென்று அவர்களும் கூற முடியாது.

மனித சமுதாயத்தைப் பின்னுக்கு இழுத்துச் செல்வதென்பது எந்த மகானாலும் சாதிக்க முடியாத காரியம். கங்கையைக் கடலிலிருந்து உற்பத்தியாக்கி மலையில் சங்கம

மாகும்படி செய்யக் கூடிய மகானுல்தான், மனித சமுதாயத்தைப் பின்னுக்கு இழுத்துச் செல்லவும் முடியும். ஒரு சமயம் நடந்ததே, மீண்டும் நடக்கும் என்ற சரித்திரத்தின் படிப்பினை உண்மையாக இருக்கலாம். ஆனல், சரித்திரம் என்றும் மாறிக்கொண்டே யிருக்கும் என்பது அதைவிடப் பெரிய உண்மையாகும். மனிதர் முன்னேற்றம் என்பது நேரான ஒரு கோடல்ல. அது இங்குமங்கும் வளைந்து செல்லும். பத்து அடி முன்னேறுவதற்கு, மூன்று அடி வளைந்து பின்னேறிப் பின்பு பாய வேண்டியிருக்கும். அவ்வாறு பின்வாங்குவது, முன்னேறிப் பாய்வதற்குப் பூர்வாங்கமேயாகும். அது பிற்போக்கு அல்ல; நிரந்தரமான முன்னேற்றத்திற்கு அடிகோலும் நிதானமே. காந்திஜியின் குடிசைக் கைத்தொழில் இயக்கம் தவருனது என்று ஏற்பட்டால்கூட (ஏற்படாது என்பதுதான் நமது கொள்கை), அதனல் கிடைத்த அனுபவமும் அறிவும் நமக்கு நன்மையே பயக்கும். இயந்திரத் தொழில் மேலும் முன்னேறுவதற்கே அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அந்த இயக்கத்தினுல் தொழில் திறமை பெற்றுள்ள தொழிலாளரோ எனில், எப்பொழுதும் நாட்டின் களஞ்சியமாக விளங்குவார்கள்.

சமத்துவத்தின் தார்மீக அடிப்படை

சமதர்மத்துக்கு அடிப்படை சமத்துவமே. சகோதரத்துவம், நீதி, நல்லுணர்வு, அன்பு ஆகியவை இருந்தால் தான் சமத்துவம் நிலைக்கும். அவையில்லாத சமத்துவம், தற்காலிகமாகவும் மேல்வாரியாகவுமே இருக்கமுடியும். அடிப்படையான ஆத்மீகபலம் இருந்தால்தான், அது நிரந்தரமாக முடியும். அத்தகைய பலம், அஹிம்ஸைக் கொள்கையிலிருந்து தான் பிறக்க முடியும். மனிதர் அனைவரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த

வர்கள் என்பதும், அவர்கள் அனைவரிடத்தும் நாம் அன்பாய் இருக்கவேண்டும் என்பதும் அக்கொள்கையிலிருந்து எழுவன. அனைவரும் ஒன்றே என்பதுதான் யேசுநாதரும், வேதாந்திகளும் போதித்த உண்மை. அத்தகைய ஐக்யத்தை உணராத சமத்துவம், உண்மையானதாக இருக்க முடியாது. அதனால் தனி மனிதனுக்கோ சமூகத்துக்கோ நன்மை ஏற்பட முடியாது. தந்திரசாலிகள், அதன் விதிகளை மீறி நடக்கவும் சூழ்ச்சி செய்ய முடியும்.

மனித சமுதாயம் முன்னேற வேண்டுமானால், தனி மனிதன் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வது அவசியம்; சமூக அமைப்புக்கள் தூய்மையாவதும் அவசியம். இவை யிரண்டும் ஒருங்கே ஏற்படாமல் ஒன்று மட்டும் ஏற்பட்டால், அதனால் ஏற்படும் முன்னேற்றம் நிலைக்காது; பிற்போக்கே ஏற்படும். இதற்குச் சரித்திரத்தில் பல உதாரணங்கள் இருக்கின்றன. சில சீர்திருத்தவாதிகள், தனி மனிதனின் ஆத்ம நிலையைத் தூய்மையாக்குவதை மட்டும் கவனித்தனர்; சமூக அமைப்புக்கள் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. அதனால், சிறிது காலத்திற்கு நன்மை யேற்பட்டது. ஆனால், சமூக அமைப்பில் அந்நன்மைக்கு அனுசரணையான சூழ்நிலை ஏற்படாததால், அந்நன்மை நாளடைவில் இறந்தது. தனி மனிதனோடு சமூகம் உயரவில்லை. சமூகம் இருந்த நிலைக்குத் தனி மனிதன் தாழ்ந்துவிட்டான். சமீப காலத்தில், சமூக அமைப்பில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டதுண்டு. ஆனால், அதற்கேற்றாற் போல் மனிதர் மனம் மாறவில்லை. சர்வதேச சங்கம் ஏற்படுத்தப்பட்டது; ஆனால் தேசங்களிடைச் சமாதான மனப்பான்மை இல்லை. அதனால் சங்கம் தோல்வியுற்றது. அத்தோல்விக்குச் சங்கம் அமைக்கப்பட்ட விதம்தான் காரணம்

என்று சிலர் வாதாடலாம். ஆனால் அத்தகைய அமைப்பு ஏற்பட்டதன் காரணம் என்ன? மனிதரிடைச் சகோதர வாஞ்சையும், ஆத்மீக உயர்வும் இல்லாதது தானே?

இன்று நம் நாகரிகம் ஒரு நிலைப்பட்டதாயில்லை யென்றும், ஆத்மீக உயர்வைவிட லௌகிக வசதிகள் பெருகிவிட்டன என்றும் பலர் கூறுகின்றனர். இதன் பொருள் என்ன? வெளியில் சூழ்நிலை முன்னேறியுள்ளது; ஆனால், நாம் ஆத்மீக உயர்வு அடையவில்லை. அரசியல், பொருளாதார, விஞ்ஞானத் துறைகளில் நாம் முன்னேற்றம் அடைந்துள்ளோம். ஆனால் அதற்கேற்றபடி ஆத்மீக முன்னேற்றம் ஏற்படவில்லை. ஆகவே நிரந்தர முன்னேற்றம் ஏற்படவேண்டுமானால் தனி மனிதனும், சமூக அமைப்பும் ஒருங்கே முன்னேறவேண்டியது அவசியம். ஆண்டவன் ஆட்சியைப் பூலோகத்தில் நிலைநாட்டுவது என்று வேதாந்த பாஷையில் பேசுவதன் பொருள் இது தான். சூழ்நிலை சாதகமாக இல்லாவிடில், மனிதன் ஆத்மீக உயர்வடைய முடியாது. அதை உணர்ந்துதான், அரசர்கள் ஞானிகளாகவும், ஞானிகள் அரசர்களாகவும் ஆனால்தான் நாட்டில் உள்ள கேடுகளைப் போக்க முடியு மென்று அறிஞர் பிளேட்டோ கூறினார். கெடுதலான சூழ்நிலையும், அமைப்பும் இருந்தால், மனிதர் அதற்கு இரையாகி விடுவார்கள். அதேபோல் சமூக அமைப்பு மட்டும் சீராக இருந்து, மனிதர் மனம் மாசுள்ளதாக இருந்தால், அந்த அமைப்பு வெகு விரைவில் முறிந்துவிடும்.

லட்சியங்களும் சாதனைகளும்

மார்க்ஸ், எஞ்செல்ஸ் ஆகியோரால் வகுக்கப்பட்டு, லெனின், ஸ்டாலின் ஆகியோரால் பரப்பப்பட்டுள்ள சமதர்ம சித்தாந்தம், சமதர்மத்துச்குள்ள ஆத்மீக அடிப்படையை அசட்டை செய்து; அதைப் பொருளாதார சமத்துவம் ஏற்படுத்துவதற்கான ஓர் அமைப்பாக ஏற்

படுத்தியுள்ளது. லோகாயத வாதத்தை நம்புகின்றான் மார்க்ஸிய வாதி. இதற்கும், ஆத்மீக அடிப்படை கிடையாது. காரியத்தைச் சாதிக்க எவ் வழியையும் உபயோகிக்கலாம் என்பது இதன் சித்தாந்தம். வெற்றிதான் அவர்களுடைய தர்மம். அதை அடைவதற்கு எந்த மார்க்கத்தை உபயோகித்தாலும், அம்மார்க்கம் நியாயமானதே ஆகும். தர்மம், நீதி என்பவை அதன் வெற்றிக்குச் சாதகமான கோட்பாடுகளே. அவை மனிதரால் ஏற்படுத்தப்பட்டு, சந்தர்ப்பங்களுக் கேற்றபடி மாற்றப்படுபவை. அவர்கள் முறைப்படி, அரசியல் அதிகாரம் கொண்டுள்ளவர்கள் வகுக்கும் சட்டமே நியாயமானது. சகலத்தையும் அறிபவர்கள் அவர்களே.

உதாரணமாக, சமீபகாலத்திய புரட்சி ரஷ்யாவின் சரித்திரத்தைக் காண்போம். "எல்லா நிலமும் குடியானவர்களுக்கே சொந்தம்" என்ற கோஷத்தை எழுப்பி அதன் மூலம் குடியானவர்களை, நிலச் சுவான்தார்களை எதிர்த்துப் புரட்சி செய்யும்படி தூண்டமுடியுமென்றால், தற்காலிகமாக அக்கோஷத்தை எழுப்பலாம். நிலத்தையெல்லாம் தேசத்தின் பொதுவுடைமையாக்க வேண்டுமென்ற கொள்கைக்கு அக்கோஷம் முரணானதே என்று யாரேனும் வாதாடினால், அவ்வாறு வாதாடுபவர்கள், சமயோசித புத்தி இல்லாதவர்கள் என்று கண்டனம் செய்யப் படுவார்கள். முன்பிருந்த விற்பனை முறைப்படிதான் தங்கள் உற்பத்தியை நகரத்துக்கு அனுப்பமுடியும் என்று விவசாயிகள் கூறினால், அவர்கள் கோரிக்கைக்கு விட்டுக் கொடுக்க,பொருளாதாரத்திட்டத்தை மாற்றித்தரகர்களை ஏற்படுத்துவதும் அனுமதிக்கப்படும். இத்தரகர்கள், தங்கள் சொந்த லாபத்திற்கு வேலை செய்ய அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் எந்த நேரத்தில் அவர்களை அடியோடு அழிக்கலாம் என்று அதிகாரிகள் காத்துக்கொண்டிருப்

பார்கள். இப்புதிய மாறுதலுக்கு ஒத்துக்கொள்ள யாரும் மறுத்தால், அவர்களும் ஒழிக்கப்படுவார்கள். சிறிய நிலச் சுவான்தார்களை அரசாங்கமே சிருஷ்டித்துவிட்டுச் சமயம் வாய்க்கும்போது, அவர்களை அழித்துவிடக் காத்துக் கொண்டிருக்கும். மதம் பகிஷ்கரிக்கப்படும். அது மக்களின் லாகிரி என்று பிரசாரம் நடக்கும்; திருச்சபைகளும் பாதிரிமார்களும் அழிக்கப்படுவர். இவ்வேலையால் கஷ்டம் ஏற்படும்போது, அரசாங்கம் தன் கொள்கையைச் சற்றுத் தளர்த்தும்; ஆனல் மாற்ருது. நிலைமை சாதகமானவுடன் அக்கொள்கை மீண்டும் புகுத்தப்படும். மதவெறியைத் தடைசெய்த அரசாங்கமே கொள்கை வெறியைப் பரப்பும். வைதீகத்தையும், மூட நம்பிக்கையையும், சடங்குகளையும் கண்டனம் செய்யும்; அதே மூச்சில், தங்கள் அரசியல் தலைவரின் (லெனின்) பிரேதத்தை வாசனைத் திரவியங்களில் புதைத்துக் காத்துப் பொருட்காட்சி சாலையில் வைத்துப் பல்லாயிரக் கணக்கான மக்கள் அதை வணங்கிச் செல்லும்படி ஏற்பாடு செய்யும். அது மூட நம்பிக்கை யில்லையாம்; அது தங்கள் லட்சியத்தைப் பரப்பும் விதமாம். இவை இரண்டுக்குமுள்ள நுட்பமான வேறுபாடு (உண்மையில் இருந்தால்) பாமர மக்களுக்குப் புரியுமா? கட்சி சர்வாதிகாரம் நிலை நாட்டப்படும். அதற்குப் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் என்று பெயர் கொடுக்கப்படும். மற்ற சகாக்களையெல்லாம் விரட்டி யடித்துவிட்டு, தேசப் பிரஷ்டம் செய்துவிட்டுச் சர்வாதிகாரி யென்று ஒருவர் ஆள்வார். ஆனல், அவர் சர்வாதிகாரியென்ற பெயரை மட்டும் வைத்துக்கொள்ள மாட்டார். பலதடவை சொன்னல், பொய்யும் மெய் போலத் தோன்றும் என்ற கொள்கைக் கிணங்க, உலகம் முழுவதும், இந்நாடு தனது பிரசாரத்தையும் பிரசுரங்களையும் பரப்பும். சரித்திரம் பகிஷ்

கரிக்கப்படும். சாம்ராஜ்யங்களை ஏற்படுத்தி ஆண்ட சக்ரவர்த்திகள் எல்லாம் இரத்தவெறி கொண்ட கொள்ளைக்காரர்கள் என்று ஒரு காலத்தில் சொல்வார்கள். ஆனல், தாங்களே பிற நாடுகளை ஆக்ரமிக்கத் தொடங்கும்போது, அன்று தூற்றியவர்களையே இன்று போற்றுவார்கள். அவர்களைப் பின்பற்றும்படி இளைஞர்களைப் பழக்குவார்கள். ஆதிகாலத்தில், சர்வாதிகாரிகள் கடவுளுக்காவது பயப்பட்டார்கள். இன்றோ சர்வாதிகாரிகள், கடவுளையோ பூதத்தையோ நம்புவதில்லை. தங்கள் சக்திக்கு மீறியது எதுவுமில்லை யென்ற போக்கில் தங்கள் அடக்குமுறை ஆட்சியை நடத்துவார்கள்.

சர்வதேச அரசியலில் ஜனநாயகத்தைக் கண்டிப்பார்கள். ஜனநாயகம், முதலாளித்துவத்தின் சதி என்பார்கள். சர்வதேச சங்கம், கொள்ளைக்காரர்களின் சங்கம் என்பார்கள். ஆனல், தங்களுக்கு வசதியாய் இருக்கும் போது, அவர்களும் இந்தக் கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்து கொள்வார்கள். அந்தக் காரியத்தைச் சாதித்துக் கொண்டவுடன் விலகி விடுவார்கள். தேசீய விடுதலைப் போராட்டங்க ளெல்லாம் முதலாளித்துவ ஆட்சியை நிலை நாட்ட நடக்கும் போராட்டங்கள் என்று அவர்கள் தங்கள் சீடர்களுக்குச் சொல்லித் தருவார்கள். பின்பு அதே பாடத்தைத் தலை கீழாகத் திருப்பி, குடியேற்ற நாடுகளில், சுதந்திர இயக்கங்களே புரட்சிகரமான போராட்டங்கள் என்று சொல்லித் தருவார்கள். இந்திய தேசீய காங்கிரஸ், முதலாளித்துவ ஸ்தாபனம் என்று அதைத் தூற்றுமாறு முதலில் தங்கள் சீடர்களுக்கு ஆக்ஞை யிடுவார்கள். பின்பு காங்கிரஸில் சேர்ந்து, அதைத் தங்கள் பக்கம் திருப்ப முயற்சிக்குமாறு கட்டளை யிடுவார்கள். ஜெர்மனியில் வேமார் குடியரசைக் கண்

டனம் செய்து அதன் வீழ்ச்சிக்கு உடந்தையாய் இருப்பார்கள். இத்தாலிய அபிஸீனிய யுத்தத்தில், பணத்தாசை பிடித்துப் பாஸிஸ நாட்டுக்குப் பெட்ரோல் விற்பார்கள். ஸ்பெயினில் சுதந்திரத்திற்காகப் போராடி வரும் வீரர்கள் தங்கள் ரக சமதர்மத்திற்கு ஒத்துக் கொள்ளவில்லை யென்ற காரணத்தால், அவர்களுடன் ஒத்துழைக்க மறுப்பார்கள். இரண்டாவது உலக மகா யுத்தத்தில் ஹிட்லருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு அதன் மூலம் ஜெர்மனி யுத்தத்தில் பிரவேசிக்க வசதி செய்து தருவார்கள். நாஜி ஜெர்மனியுடன் நேசம் பூண்டிருக்கும்போது, தோல்வியுற்ற முதலாளித்துவத்தின் இறுதி நிலை (ஜெர்மனியின் பாஸிஸ நிலை) மேல் நாட்டு ஜனநாயக நாடுகளின் நிலையைவிட (நேச நாடுகள் நிலை) போல்ஷிவிஸத்துக்கு நெருங்கியது என்று வியாக்கியானம் செய்வார்கள். நடு நிலைமை வகிப்பதற்குக் கூலியாகப் போலந்தில் பாதியை விழுங்குவார்கள். அவ்வாறு விழுங்கியது போலந்தின் பாட்டாளி மக்களின் நலனுக்காகவே என்று சாதிப்பார்கள். பால்டிக் சமஸ்தானங்களைக் கழுத்தில் பிடித்து நெருக்குவார்கள். பின்லாந்து, நேச நாடுகளின் சூழ்ச்சிக்குச் சாதகமாகப் பயன்படக் கூடுமென்ற காரணத்தைச் சொல்லிப் பின்லாந்து மீது தர்ம யுத்தம் தொடுப்பார்கள். பின்லாந்து மீது போர் தொடுக்கும்போதும், அங்கு முதலாளித்துவ ஆதிக்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்யும் பின்லாந்தின் பாமர மக்களுக்கு உதவி செய்வதாகவே கூறுவார்கள். ஆனால், தங்களுக்கு லாபம் தரும் சமாதானம் ஏற்பட்டவுடன் பாட்டாளி மக்களைக் காற்றில் பறக்கவிட்டுப் பின்லாந்தின் பிற்போக்கான முதலாளித்துவ சர்க்காருடன் ஒப்பந்தம் செய்து கொள்வார்கள். பால்கன் சமஸ்தானங்கள் மீது கண் போடுவார்கள். உண்மையில், ஜார்கள்

எந்தப் பிற்போக்கான அயல் நாட்டுக் கொள்கையைப் பின்பற்றி வந்தனரோ அதையே அமல் நடத்துவார்கள்.

இவை பொதுவுடைமை ரஷ்யாவின் புரட்சி லீலைகள். ஆனால் நம் பொதுவுடைமை நண்பர்களோ, இவற்றை யெல்லாம் மறந்துவிட்டுக் காந்திய வாதிகள் காந்தியைக் கண்மூடித் தனமாகப் பின்பற்றுகின்றனர் என்று குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் காந்திய வாதிகள், தாங்கள் சொல்வதுதான் வேதவாக்கு என்று சொல்வதில்லை; தங்களுக்கு மீறிய சக்தி வேறில்லை என்று சொல்வதில்லை. அவர்கள் கடவுளுக்காவது பயப்படுவார்கள்.

ரஷ்யா செய்தது போலவே மற்ற ஏகாதிபத்திய நாடுகளும் செய்கின்றனவே என்று நண்பர்கள் கூறலாம். அது உண்மைதான். ஆனால், அந்த நாடுகள் ஏகாதிபத்திய நாடுகள் என்ற முறையில் பகிரங்கமாக நடக்கின்றன. ராஷ்யாவைப் போல், பூலோகத்தில் சொர்க்கலோகத்தை நிலை நாட்டப் போவதாக அவைகள் சொல்லிக் கொள்வதில்லை.

பொதுவுடைமை வாதிகளோ, பலாத்காரத்தை இன்னும் அதிக பலாத்காரம் கொண்டு அழிக்க முயல்கின்றனர். சூழ்ச்சியைச் சூழ்ச்சியால் முறியடிக்கவும், இருளை, இன்னும் அதிக இருளில் ஆழ்த்தி விடவும் முயற்சிக்கின்றனர்.

ரஷ்யாவைப் பற்றி நான் இங்கு குறிப்பிட்டுள்ளது, அதை ஏளனம் செய்வதற்காக அல்ல. அதன் கொள்கையில் உள்ள அடிப்படையான தவறுதலையும் அதனால் ஏற்படும் கோளாறையுமே நான் எடுத்துக் காட்ட விரும்பினேன். வெற்றியே தர்மம் என்றும், சமயத்துக்கு ஏற்றபடி நடப்பதே சிறந்ததென்றும் ஏற்படுத்தி விட்டால், மனிதரிடை நேர்மையைக் காணமுடியாது.

மனிதனின் விவேகமும் அறிவும் மிகவும் கட்டுப்பட்டவையே. அனைத்தையும் உணரும் ஆற்றல் அவனுக்கில்லை. சுத்த அறிவு இல்லாத இடத்தில் ஓர் ஆத்மீக அடிப்படையும், நம்பிக்கையுமாவது இருக்கவேண்டும். அதையும் மீறி, வெற்றியும் தோல்வியும் மனிதன் முயற்சியைப் பொறுத்ததே என்று சொல்வதும், குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்கள் ஏற்படின், குறிப்பிட்ட சில பலன்கள் நேரிடுவது நிச்சயம்என்று சொல்வதும் சரியல்ல. மனிதன் ஒரு காரியத்தைச் செய்யமுடியுமே யொழிய, அதன் முடிவும் பலனும் அவன் கையில் இல்லை.

நீதி, நியாயம், தர்மம் என்ற கோட்பாடுகள் மனிதனைக் கட்டுப்படுத்தாவிடில், அவன் தன் குறுகிய புத்திக்கு எட்டியவாறே நடப்பான். ஒரு சமூகத்தை எடுத்துக்கொண்டாலோ, வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். தர்மம் அழிந்து வல்லமையே பிரதானமாகும். அந்த நிலைமையைத் தடுக்க வேண்டுமானால், மனிதன் சில அடிப்படையான ஆத்மீகக் கொள்கைகளை அனுசரித்து நடக்கவேண்டும். அக்கொள்கைகளைச் சமயத்துக்குத் தக்கவாறெல்லாம் மாற்றினால், மனிதன் நடத்தை கட்டுக் கடங்காததாய்ச் செல்லும். நாம் எந்த நிமிஷத்தில் என்ன செய்வோம் என்பது நம் எதிரிக்கு மட்டுமல்ல, நண்பனுக்கும், தோழனுக்கும் தெரியாமலிருக்கும். எந்த நிமிஷத்தில் எதிரி நண்பனாகி, நண்பன் எதிரியாவான் என்பதையும் யாராலும் சொல்லமுடியாது. சத்தியம், தர்மம் என்று எதுவும் இருக்காது. கொடுத்த வாக்கை மறுகணமே மீறலாம்.

அத்தகைய வாழ்வில் மனிதரிடை என்ன பாசம் இருக்கமுடியும். நட்பு, அன்பு அனைத்தும் அரசாங்கத்துக்குக் கட்டுப்பட்டதாகிவிடும். புதிய ரஷ்யாவில்,

குடும்ப வாழ்வு குலைக்கப்பட்டுவிட்டது; பெற்றோர்களைச் சபிக்கும் குழந்தைகளோ எண்ணற்றவை. அந்தச் சமுதாயத்தில் ஒரே ஒரு விசுவாசம்தா னிருக்கமுடியும். அரசாங்கத்தினிடம் விசுவாசம். இத்தகைய கொள்கை வெறியால்தான் பல மதச் சண்டைகள் ஏற்பட்டுச் சரித்திரத்தில் ரத்த வெள்ளம் பெருகியுள்ளது. கம்யூனிஸ்ட் கொடியின் நிறம் சிவப்பு - ரத்தத்தின் நிறம். அவர்கள் சரித்திரமும் ரத்தக்களரியாக இருக்குமா? முன் சொன்ன அக் கொள்கை வெறியின் பெயரால் தூக்கிலிடப்பட்டவரும், உயிரோடு நெருப்பில் போட்டு வேக வைக்கப்பட்டவரும்எத்தனையோபேர். அக்கொள்கை வெறிக்கு ஞானி முதல் விஞ்ஞானிவரை இரையாகியுள்ளனர். அத்தகைய கொடுமை 17 ம் நூற்றுண்டில்தான் நடந்தது. அந்த மதவெறியைக் கண்டித்துச் சகிப்புத் தன்மையையும், சீர்திருத்த மனப்பான்மையையும் பரப்பின 18-19 ம் நூற்றுண்டுகள். 17 ம் நூற்றுண்டில்கூட அன்புத் தெய்வம் பற்றியே கொள்கைவெறி யெழுந்தது. அப்படியிருந்தும் கூட மனித சமுதாயம் நாசத்திலிருந்து தப்ப முடியவில்லை. சத்தியம், தர்மம், அன்பு இவையெல்லாம் பலவீனத்திற்கும், பிற்போக்குக்கும் அறிகுறிகள் என்று கூறும் ஒரு கொள்கையினுல் பிறக்கும் வெறி இன்னும் எவ்வளவு நாசத்தை உண்டாக்கும். அக்காலத்தில் மதவெறிக்கும் எதிராக மற்ருெரு புரட்சி எழுந்தது போலவே, இன்றும் கம்யூனிஸ்ட்களின் கொள்கைவெறிக்குப் பதிலாக நாஜிஸ, பாஸிஸக் கொள்கை வெறி எழுந்தது. கம்யூனிஸத்தின் பயனுக எழுந்ததே பாஸிஸம். பாஸிஸம் முதலாளித்துவத்தின் புகலிடம் என்பது சரித்திரத்தில் மெய்ப்பிக்கப்பட வில்லை. முதலாளிகள் தங்கள் திட்டத்தை ஆதரித்து வந்தவரைதான், ஹிட்லரும் முஸோலினியும் அவர்கள் நண்பர்களாயிருந்

தனர். முஸோலினி நிலச்சுவான்தார்களின் உரிமைகளைப் பறிக்கத் தயங்கவில்லை. ஹிட்லரும் முதலாளிகளிடம் கருணை காட்டவில்லை. அரசாங்கம், அவசியம் என்று கருதியபோ தெல்லாம், முதலாளித்துவ வர்க்கத்தின் செல்வமும், செல்வாக்கும் உறிஞ்சப்பட்டுள்ளன. அதே போல் தொழிலாளரும் முடக்கப்பட்டுள்ளனர். ஒரு சில தொழில்களில், உற்பத்தி சாதனங்கள் தனி மனிதரின் கையிலிருப்பதுதான் சிக்கனத்துக்கு வழியென்று அவர்கள் நினைக்கும்வரை, அதை அனுமதிப்பார்கள். அதனால் லாபமில்லை யென்று ஏற்பட்டவுடன் அதை ஒழித்து விடுவார்கள். முதலாளி வர்க்கத்தினர் தங்கள் சொந்த நலனைக் கருதி நாஜிஸத்தையும், பாஸிஸத்தையும் ஆதரித்துள்ளனர் என்பது உண்மைதான். அதனால் பாஸிஸத்துக்கும் முதலாளித்துவத்திற்கும் எப்பொழுதும் ஒற்றுமை உண்டு என்று ஏற்பட்டு விடாது. அந்த ஒற்றுமை அச்சமயத்திற்கு இரண்டுக்கும் ஒற்றுமை இருந்தது என்ற அளவிற்கே ஏற்படும்.

அடிப்படையான தார்மீகக் கொள்கைகள்

சில அடிப்படையான தார்மீகக் கொள்கைகளை மனித சமுதாயம் அசட்டை செய்தால், சமூக வாழ்வே சாத்தியமில்லை. அத்தகைய கொள்கைகளில் ஒன்று சத்தியம். பிளேட்டோ சொன்னதுபோல் சத்தியம் ஒன்றே. அது நிரந்தரமானது. சத்தியத்தின் தோற்றங்கள் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு மாறலாம்; மனிதர் மனத்திற்குப் புலப்படும் விதம் மாறலாம். சத்தியத்தின் வெளித் தோற்றமாக எழும் பல் வேறு பழக்க வழக்கங்களும் முறைகளும் வேறுபட்டு இருக்கலாம். மனித சமுதாயத்தில் எப்பொழுதும் சத்திய சோதனை நடந்து கொண்டே இருக்கிறது. ஒரு காலத்தில் நியாயமா யிருந்த முறைகள் மற்றொரு காலத்

தில் மாற்றப்படவேண்டி யிருக்கலாம். ஒரு காலத்தில் உண்மையின் உறைவிடமாக இருக்கும் முறை இன்னொரு காலத்தில் அந்த உண்மைக்கே உலை வைப்பதாய் இருக்கக் கூடும்.

"பழமைமாறிப் புதுமை புகுகிறது;
ஒரே வழக்கம் உலகை முடக்கா வண்ணம்,
ஆண்டவன் அனந்தம் வழிகளில் தம்
ஆக்கினையை நிறைவேற்றுவார்."

என்று டென்னிஸன் கவி பாடியதன் பொருள் இதுவே.

ஒரு முறைக்கு அடிப்படையாய் உள்ள நல்ல கொள்கை மறைந்த பின்னரும், அம் முறை மட்டும் வழங்கி வரக்கூடும். அப்பொழுது அது கெடுதலே பயக்கும். அதனால், அடிப்படை தர்மத்திலேயே நம்பிக்கை யிழந்து, சத்தியம் என்பதெல்லாம் கற்பனை, கட்டுக்கதை யென்று சொல்வது முறையல்ல. சத்தியத்தின் ஊற்று என்றும் வற்றாது. நாம் இழந்த ஆத்மீக அடிப்படையை மீண்டும் நிலைநாட்ட முயற்சிப்பதே சரியான வழி. தவறான முறையை ஒழிக்க வேண்டுமே யொழிய, தர்மத்தையே ஒழித்துவிடக் கூடாது. அவ்வாறு செய்ததால் தான் இன்று உலகில் பல அநீதிகளும், கோளாறுகளும் ஏற்பட்டுள்ளன. தனி மனிதனும், சமூகமும் இன்று நிலை யிழந்து நிற்கின்றனர். தங்கள் அறிவுக்கு எட்டாத சமூக சக்திகளுக்கு அவர்கள் அடிமைப்படுகின்றனர். வர்க்க, வகுப்பு, இன, உணர்ச்சிகளுக்குப் பலியாகி அவர்கள் சுதந்திரத்தைப் பறிகொடுத்து விட்டனர். தாங்கள் சிருஷ்டிக்காத ஒரு சமூக அமைப்பில் சிக்கி, அவர்கள் பகுத்தறிவற்ற ஆட்டு மந்தைகள் போல் கண்மூடித் தனமாக நடக்கின்றனர். எந்தத் தேச மக்க

ளும் யுத்தத்தை என்றும் விரும்பியதில்லை. ஆனால் எப்படியோ, தேசங்கள் யுத்தத்தில் இழுத்துச் செல்லப் படுகின்றன. தேச மக்களின் விருப்பத்தைப்பற்றி யாருக்கும் கவலை யில்லை. பண்டைக் காலத்தில், சமூக வாழ்வின் கொடிய விதிகளிலிருந்துத் தப்ப விரும்புவோர் சந்யாசிகளாகவாவது செல்ல முடியும். இன்று அதுகூடச் சாத்தியமில்லை. பிரஜையின் கடமை பலாத்காரமாய் அவன் மீது சுமத்தப்படுகிறது. தன்னால் அறிய முடியாத சக்திகளுக்குக் கட்டுப்பட்டு அவன் நடக்கவேண்டி யிருக்கிறது.

காரண காரிய சம்பந்தம் மனிதர் செய்யும் செயலின் வெற்றியும், தோல்வியும் முழுவதும் மனிதன் கையிலேயே இல்லை யென்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மனிதர் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத சக்திகள் பல அதைப் பாதிக்கிறது. பலன் ஒன்றாக இருக்கலாம். இது விஞ்ஞான சாஸ்திரத்திலேயே அங்கீகரிக்கப்பட்டுள்ள உண்மை. பூத சாஸ்திரங்களுக்கே இந்த உண்மை பொருந்துமென்றால், மனிதர்களுக்கு இது இன்னும் எவ்வளவு அதிகப் பொருத்தமாயிருக்க வேண்டும். பூத சாஸ்திரங்களில், நாம் விரும்பும் பொருள்களைச் சேர்த்து, விரும்பாத பொருளை நீக்கிப் பரீட்சார்த்தம் செய்ய முடியும். சமூகத்தில் இத்தகைய பரீட்சார்த்த முறைகளைக் கையாள முடியாது. ஆகவே சமூகத்தைப் பொறுத்த வரை, எந்த நிலைமை ஏற்பட்டால் என்ன பலன் ஏற்படும் என்று நாம் நிச்சயமாய் நிர்ணயிக்க முடியாது. பெண்களையும் குழந்தைகளையும் ஆலையில் வேலை வாங்குவதுபற்றி யாதொரு கட்டுப்பாடும் இருக்கக்கூடாதென்று கூறப்பட்டுவந்த காலம் ஒன்றுண்டு. அதற்குப் பொருளாதார சுதந்திரம் என்று பெயர் தந்தார்கள். தொழிலாளருக்குக் கல்வி வாசனையே

இல்லாமலிருந்தது. அவர்கள் வசித்து வந்த இடமோ மிகக் கேவலமான நிலைமையி லிருந்தது. அவற்றை ரஸ்கின், கார்லைல் போன்ற அறிஞர்கள் கண்டனம் செய்தனர். ஆனால், அவர்கள் கண்டனம் யார் காதிலும் ஏறவில்லை.

இத்தகைய அநீதிகள் தடுக்கப்பட வேண்டுமென்றால், மனிதருக்கு வழிகாட்ட அடிப்படையான சில தர்மங்கள் இருக்க வேண்டும். அத்தகைய கொள்கைகளே, சாதாரண மனிதருக்குக் கைக் கோல்களாக இருக்கும். அவையில்லாவிடில், மனிதர் நடத்தை அத்து மீறிச் செல்லும். வல்லமை தான் தர்மம் என்ற நிலைமை ஏற்பட்டு விடும்.

விஞ்ஞான சாஸ்திரத்துக்கும் ஓர் அடிப்படையான விதி இருக்க வேண்டியது அவசியமாகிறது. அவ்விதி தான் உண்மை. பார்ப்பதை உண்மையாகத் தெரிந்து, அதன்மீது பரீட்சை செய்வதால் தான் விஞ்ஞானம் பெருகுகிறது. உண்மையே ஆராய்ச்சியின் உயிர் நாடி. துவேஷம், ஒருதலைப்பற்று, சுய நலம், மூடப் பழக்க வழக்கங்கள் ஆகியவை ஆராய்ச்சியின் பரம விரோதிகள். விஞ்ஞானத்திற்கே உண்மை இவ்வளவு அவசியமென்றால், சமூக வாழ்விற்கோ உண்மை மிகவும் அத்தியாவசியமாகும். சத்தியத்திற்குப் பணிந்து தம் துவேஷங்களையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும். ஆனால், பாஸிஸ, கம்யூனிஸ்ட் நாடுகளில் என்ன நடக்கிறது? ஆள்வோர் ஆதிக்கத்திற்கு விரோதமாக ஆராய்ச்சியாளர் முடிவு செய்து விட்டால், அந்த அறிஞர்கள் நசுக்கப்படுவார்கள். அங்கு அறிவு, ஆதிக்கத்தின் அடிமையாகிவிட்டது. நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு முன்பிருந்ததை விட இன்று அக் கொடுமை அதிகமாகி விட்டது. ஏனென்றால், கொடுமையை அமல் நடத்த இன்று அரசாங்கத்திடம் அதிக வசதிகளும், அதிகாரங்களும் இருக்கின்றன.

அடிப்படை தர்மத்தில் நம்பிக்கை வைப்பது மூட நம்பிக்கைகளுக்கும், கொள்கை வெறிக்கும், ஆஷாடபூதித்தனத்துக்கும் அடிகோலும் என்று சிலர் ஆட்சேபிக்கலாம். எல்லா மாறுதல்களும் இது வரை மதத்தின் பெயரால் எதிர்க்கப்பட்டு வந்தன என்பது உண்மை தான். ஆனால் இந்த அபாயத்தைவிட, மனிதருக்கு வழிகாட்ட அடிப்படைக் கொள்கைகளே இல்லாததால் நேரிடும் கெடுதலோ இன்னும் அதிகம். அவையில்லாவிடில் அராஜகமே நிலைக்கும்; இல்லாவிடில் சர்வாதிகாரக் கொடுமைக்கு வழி யேற்படும். இது சரித்திரத்திலேயே நன்கு மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. அடிப்படைக் கொள்கையும், தர்மமும் இல்லாததால் தான், ரஷ்யாவில் புரட்சியை உண்டாக்கிய வீரர்களே இன்று புரட்சியின் விரோதிகளாக விசாரிக்கப்பட்டனர். கைக்கு அதிகாரம் வரவில்லை யென்றதாலும், எந்த விதமான பொதுவுடைமையைப் புகுத்துவது என்பதில் தங்கள் கொள்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை யென்ற காரணத்தாலும், அவர்கள் புரட்சிக்குத் துரோகிகளாக மாறிவிட்டனர் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். அடிப்படை தர்மம் ஒன்று இருக்கும் நாடுகளில், அதுபோல் நாட்டின் சிறந்த தலைவர்கள் திடீரெனத் துரோகிகளாக மாறுவதில்லை. முதலாளித்துவ, ஜனநாயக நாடுகளில்கூட அவ்வாறு நடப்பதில்லை. ஆனால், புரட்சி வீரர்கள் துரோகிகளாக மாறியதேன்? புரட்சி, பழைய சமுதாய அமைப்பை அழித்தது மட்டுமின்றி, அடிப்படையான தர்மங்களையும் அழித்து விட்டது தான் காரணம். அவை மறைந்ததால் நியாயம், விசுவாசம் என்பவையும் மறைந்துவிட்டன. முதலாளித்துவ நாடுகளிலும் இத் தர்மங்கள் தங்கள் உண்மைத் தாத்பரியத்தை இழந்து, வெறும் சம்பிரதாயங்களாகவே இருக்கின்றன என்பது உண்மையாக இருக்

கலாம். ஆனால் அதைவிட நிரந்தரமான, பலமான அடிப்படை தர்மங்கள் வேண்டுமென்றுதான் இதிலிருந்து புலனாகிறது. அத்தர்மங்களை அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்று ஏற்படவில்லை. அடிப்படை தர்மங்கள் பண்பட்டு நிரந்தரமாகும் வரை, இன்றுள்ள சம்பிர தாயங்களாவது நிலைப்பது நலம். அவை மனிதர் வாழ்வின் மீது சில கட்டுப்பாடுகளை யாவது விதிக்கின்றன; சில காரியங்களைச் செய்யக் கூடாது என்ற தடையை யாவது அவை விதிக்கின்றன. முதலாளித்துவ நாட்டில், ஆசாபங்க மடைந்த ஓர் அரசியல் வாதி துரோகியாகிவிட மாட்டான். அவ்வாறு செய்வது பாபமென்றும், அதை மிக இழிவான குற்றவாளிகளும் செய்வார்கள் என்றும் ஒரு நியதி அங்கு ஏற்பட்டுள்ளது.

அத்தியாயம் 3

சமதர்மமும் ஜனநாயகமும்: ஆத்மீக அடிப்படைகள்

குடிசைக் கைத்தொழிலும் சமதர்மத் தன்மையதே என்று கூறினேன். சமதர்மத்திற்கு அடிப்படை, பொருளாதார சமத்துவம். அச்சமத்துவத்தின் அடிப்படைகள் ஒத்துழைப்பும், அஹிம்ஸையும் என்பது எனது நம்பிக்கை. பொருளாதாரத் துறையில் மனிதனின் சமத்துவத்தையும், அவனுக்குரிய அந்தஸ்தையும் நிலை நாட்டுவது சமத்துவம். மனிதர்கள் அனைவரும் ஒன்றே என்ற கொள்கையைப் பொருளாதாரத் துறையில் நிலை நிறுத்துவது அது.

அரசியல் துறையில் ஜனநாயகம் எதைச் செய்கிறதோ, அதையே பொருளாதாரத் துறையில் சமதர்மமும் செய்கிறது. மனிதர் அனைவரும் ஒன்று என்ற கொள்கையை அரசியல் துறையில் நிலை நாட்டுவது ஜனநாயகம். அதில் வாக்குரிமை அனைவருக்கும் உண்டு. அந்த வகையில் பாமர மனிதன், சமூகத்தில் மிக உயர்ந்த நிலையில் உள்ளவனுக்குச் சமமாக இருக்கின்றான். கொள்கையளவிலாவது, அரசியல் துறையில் முன்னேறுவதற்கு அவனுக்கும் சமசந்தர்ப்பம் இருக்கிறது. ஜனநாயகத்தின் பயனாய் இந்த அரசியல் சமத்துவம் ஏற்படுவதற்கு முன்பாகச் சமூகம், மன்னரென்றும் குடிகளென்றும், ஆளும் வர்க்கமென்றும் ஆளப்படும் வர்க்கமென்றும் பிரிக்கப்பட்டிருந்தது. ஜனநாயகத்திலோ பிரஜையே ஆள்பவனும் ஆளப்படுபவனும் ஆகிவிட்டான்.

அவன் விருப்பத்திற் கேற்ற அரசை ஏற்படுத்துவதில் பிரஜை பங்கெடுத்துக்கொள்கிறான்; அந்த வகையில் அவன் ஆள்பவன். அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட சர்க்காருக்கு அவன் பணிகிறான்; அந்த வகையில் அவன் ஆளப் படுபவன். தன் மனம்போன போக்குப்படி நடக்க மனிதனுக்கு இடம் தருவதல்ல ஜனநாயகத்தின் கொள்கை. மனிதனின் எண்ணங்களை மேம்படுத்தி, அவனைத் தனியாய உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டு நடக்கும்படி செய்வதே ஜனநாயகத்தின் கொள்கை. அதுதான் உண்மையான சுதந்திரம்; மற்றது, கட்டுக்கடங்காத ஒழுங்கீனமாகும். நாட்டிற்குள்ளாகவே பலாத்கார அரசியல் சச்சரவுகள் நேரிடுவதைத் தடுப்பதும் ஜனநாயகம். அவ்வகையில் அது அரசியல் துறையில் ஆத்மீகக் கொள்கையை நிலைநாட்டுவ தாகும். ஆத்மீகக் கொள்கை இயற்கையான முறையில் வேலை செய்தால் முற்போக்குக்கே உதவும். அது தன் செல்வாக்கைப் பரப்பி, வளர்த்துக்கொண்டேயிருக்கும். அதன்படி வளர்ந்தால், நாளடைவில் தேசம் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே அஹிம்ஸைக் கொள்கையை அரசியலில் ஏற்றுக் கொள்ளும். ஜனநாயகக் கொள்கை, பொருளாதார ஏற்றத் தாழ்வையும் அழித்திருக்கும். ஆனால் அது வளர்ச்சியடைவதற்கு முன்பே முதலாளித்துவ, ஏகாதிபத்திய அமைப்பு அதைக் கவ்விக் கொண்டது.

ஜனநாயகம் ஏற்பட்ட காலத்திலேயே, மேல் நாடுகள் பூகோள, விஞ்ஞான ஆராய்ச்சி நூதனங்களைக் கண்டு பிடித்தன. அதன் பயனாய் உள்நாட்டுப் பொருளாதார நிலையும், சர்வ தேசீய அரசியல் முறையும் நிலையிழந்தன. பொருளாதார ஒழுங்கீனம் நிறைந்த சமூகத்தில், அரசியல் வாக்குக்கு மதிப்பில்லாமல் போயிற்று. முதலாளித்துவ உற்பத்தி முறையால், எல்லையற்ற செல்வத்தைக்

குவித்து வைத்திருக்கும் பணக்காரரென்றும், நாளுக்கு நாள் அதிக வறுமை அடைந்துவரும் ஏழைகளென்றும், சமூகம் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டது. பொருள் உடையோர், பொருள் இல்லாதார் என்ற பிரிவினை ஏற்பட்டது. அரசியல் துறையில் ஏற்பட்டிருந்த ஒரு சிறிது சமத்துவம் கூடப் பொருளாதார ஏற்றத் தாழ்வினால் அழிந்துவிட்டது. முதலாளித்துவத்திலிருந்து பிறந்தது தான் ஏகாதிபத்திய ஆதிக்கம். இதனால், நாட்டிற்குள்ளாகவும் ஜனநாயகத்தின் வளர்ச்சி தடைப்பட்டு விட்டது. தற்காலத்தில் தேசங்கள், சமாதானத்தை நிலை நாட்டுவதில் தங்கள் சக்தியைச் செலுத்துவதில்லை; யுத்தம் மூட்டுவதில் சக்தியைச் செலுத்துகின்றன. சமாதான காலத்தில் கூட யுத்த முஸ்தீபு தான் மும்மரமாக நடந்து வருகிறது. ஒரு தேசத்தின் பொருளாதார, விவசாய, இயந்திரத் தொழில் கொள்கைகள் மட்டுமல்ல, கல்வி, மதக் கொள்கைகள் கூட யுத்த காலத்திற்கு உதவும் படியாக அமைக்கப்பட்டுள்ளன. எப்பொழுதும் யுத்த முஸ்தீபிலேயே முனைந்துள்ள ஒரு தேசம், அரசியல் ஜனநாயகத்தின் பலனை அனுபவிக்க முடியாது. யுத்தக் கொள்கையை முன்னிட்டு உள்நாட்டு நிர்வாகத்தில் சர்வாதிகாரப் போக்கு வலுக்கும். இதனால் ஜனநாயகம் பாதிக்கப்படுவது நிச்சயம். முதலாளித்துவமும், முதலாளித்துவ ஏகாதிபத்தியமும் உண்மையில் மேனாடுகளில், அரசியல் ஜன நாயகத்தையே அழித்துள்ளன.

மேலும், இன்று ஜனநாயகம் ஓர் அரசியல் உபாயமாக அல்லது ஆயுதமாகக் கையாளப்பட்டு வருகிறதேயொழிய, அது ஒரு தருமமாக மதிக்கப்படுவதில்லை. அதன் அடிப்படைகளான ஒற்றுமை, அன்பு, சகிப்புத் தன்மை ஆகியவற்றை யாரும் லட்சியம் செய்யவில்லை. அதனால் தான், முதலாளித்துவமும், ஏகாதிபத்தியமும் ஜனநாயகத்

தின் அடிப்படையையே அரித்துத் தின்றன என்பது வெகு காலம் வரை யாருக்கும் புலப்பட வில்லை. இன்று சர்வாதிகார வல்லரசுகள் ஜனநாயக நாடுகளை விழுங்கி விடும் என்ற நிலை யேற்பட்டுள்ளதால்தான், ஜனநாயகத் தின் மதிப்பும் அவசியமும் ஓரளவிற்கு உணரப்பட்டு வருகின்றன. பொருளாதார முதலாளித்துவமும், அரசியல், பொருளாதார ஏகாதிபத்தியமும் ஜனநாயகக் கொள்கைக்கு முரண்பட்டவை யென்பதும் உணரப்பட்டு வருகிறது. அதனுல்தான், தங்கள் சாம்ராஜ்ய ஆதிக்கத் தைக் கைவிட மனமில்லை யென்றும், பிரிட்டிஷ் அரசியல் வாதிகள், சாம்ராஜ்யமே கிடையாதென்றும் சாதித்து முழுப் பூசணியைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறுர்கள்.

மனித சமுதாயம் முன்னேற வேண்டுமானுல், அரசியல் ஜனநாயகத்திற்கு அடிப்படையாக உள்ள தார் மீகக் கொள்கை காக்கப்படவேண்டும். பெயரளவில் ஜனநாயகத்தைக் கடைப்பிடித்து வரும் நாடுகளே, உண்மை ஜனநாயகத்தின் விரோதிகள். அத்தார்மீகக் கொள்கையைப் பாதுகாப்பதுமட்டு மல்லாமல், அரசியல் பொருளாதாரத் துறைகளிலும் அக்கொள்கையைப் பின் பற்றவேண்டும். அரசியல் ஜனநாயகம் முதலாளித் துவத்தாலும், ஏகாதிபத்தியத்தாலும் மூழ்கடிக்கப்பட்டு வருகிறது என்பதை உணராத சில சமதர்ம வாதிகள், முதலாளித்துவத்திற்கு அரசியல் ஜனநாயகமே காரணம் என்று கூறிவந்தனர். முதலாளித்துவத்தில் தனி மனி தனுக்குத் தன் இச்சைப்படி நடக்க இடம் தரப்படுவது வேறு, ஜனநாயகம் வேறு என்பதை உணராமல், கம்யூ னிஸ்ட் பிரசாரம் ஆரம்பித்த காலத்தில், சமதர்ம வாதி கள், முதலாளித்துவத்தை மட்டுமல்ல, அரசியல் ஜனநாய கத்தையும் கடுமையாகத் தாக்கிவந்தனர். பின்புதான், பாஸிஸ நாடுகளை எதிர்த்து ஜனநாயக நாடுகளின் முன்

ணியில் சேர ரஷ்யா சம்மதித்துச் சர்வதேச சங்கத்தில் சேர்ந்தது. அதற்குப் பிறகும், ரஷ்யா, 'யதேச்சாதிகார நாஜி ஜெர்மனியுடன் சேர்ந்து கொள்ளத் துணிந்தது. அச் செய்கைக்குக் காரணமும், நியாயமும் ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்.

ஆகவே, ஜனநாயகத்தின் தார்மீகக் கொள்கையை முதலாளித்துவ, ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து விடுவித்துக் காக்கவேண்டும். அரசியல் ஜனநாயகத்தைச் சமூக, பொருளாதார ஜனநாயகத்துடன் இணைக்க வேண்டும். பொருளாதார சமதர்மத்தை நிலை நாட்டினால் தான் இது சாத்தியம். ஜனநாயகம் எங்கும் நிலைபெற வேண்டுமானால், ஒரு நாடு பிற நாடுகள்மீது ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்திய முறை ஒழிய வேண்டும்.

பொதுவுடைமையும் ஜனநாயகமும்

ரஷ்யா, பொருளாதார சம தர்மத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், இதுவரை அங்கு நடந்துள்ள நிகழ்ச்சிகளைக் கொண்டு பார்த்தால், பொருளாதார சமதர்மத்தை நிலை நாட்டும் முயற்சியில் அரசியல் ஜனநாயகம் பலியிடப்பட்டுள்ளது என்று நினைக்கத்தான் தோன்றுகிறது. உள்நாட்டு விவகாரங்களிலும், சர்வ தேசத்துறையிலும் ஓர் ஒழுங்கு ஏற்பட்டவுடனேயே இந்த சர்வாதிகாரம் தானாக அழிந்து, ஜனநாயகம் தோன்றும் என்று கம்யூனிஸ்ட்கள் வாக்குத் தருகின்றனர். ஆனால் இன்று அது நடைமுறையில் மட்டுமல்ல, கொள்கையிலேயே அசாத்தியமாகத் தோன்றுகிறது. தனி மனிதனின் சுதந்திரமும், அவன் ஆத்மீக ஐக்யமும்தான் ஜன நாயகத்தின் அடிப்படைகள். ஆனால், கம்யூனிஸ்ட் தத்துவமோ, தனி மனிதனின் சுதந்திரத்திலோ ஆத்மீக உயர்விலோ நம்பிக்கை கொள்வதில்லை. சமூகத் தொடர்புகள் ஒன்று சேர்வதால் சிருஷ்டிக்கப்

படுவதே தனி மனிதன் என்பது அதன் கருத்து. அச்சமூகத் தொடர்புகளும், பிணைப்புகளுமே பிரதானம் என்று அது எண்ணுகிறது. அத் தொடர்புகள் இல்லாவிடில், மனிதனுக்கு மட்டும் தனியாக மதிப்புக் கிடையாது என்று அது நம்புகிறது. இத்தகைய கருத்தில், மனிதனுக்கு ஆத்மீக ஐக்கியமே இல்லாமல் போய்விடுகிறது. அதை இழந்ததற்கு ஈடாக அவனுக்குப் பொருளாதாரப் பாதுகாப்புத் தருவதாகக் கூறுகிறார்கள். எறும்புக் கூட்டம் அல்லது வண்டினம் போலவே மனிதக் குழுவும் மதிக்கப்படுகிறது. மனிதனுக்குத் தனியான வாழ்வு இல்லாமல் போகிறது. அவன் சமூகத்தின் ஓர் அணுவே. பாஸிஸ நாட்டில் தனி மனிதனுக்கு என்ன நிலைமை ஏற்படுகிறதோ அதே நிலைமைதான் கம்யூனிஸ்ட் நாட்டிலும் ஏற்படுகிறது. உலகம் முழுவதும் கம்யூனிஸ்ட் கொள்கையைப் பின்பற்றிய பின், சர்வாதிகார ஆட்சிக்கு அவசியமில்லாதபோது தான் இந்த நிலைமை மாறும். தனி மனிதனை இந்த நிலைக்கு இழிவு படுத்துவது ஜன நாயகத்தின் அடிப்படைத் தத்துவத்திற்கே விரோதம். கம்யூனிஸ்ட் பீடத்தில் பலியிடப்படும் தனி மனிதனின் சுதந்திரம் புத்துயிர் பெற்றெழமுடியாது.

பெருவாரியான குவியல்முறை உற்பத்தியில் கம்யூனிஸமும் நம்புகிறது. ஆகவே பொருளாதார உற்பத்தி, விநியோகம், அனைத்தையும் கட்டுப்படுத்தி ஒரு திட்டத்திற்கு உட்படுத்த வேண்டுமென்பது அதன் கொள்கை. இத் திட்டம் திறமையாக நடக்க வேண்டுமானால் கட்டுப்பாடு பலமாகவும், கடுமையாகவும் இருக்க வேண்டும். திட்டத்தை

பொதுவுடைமையும் பொருளாதாரத் திட்டமும்

வகுத்து அமல் நடத்த நிபுணர் குழுவும், திறமையான நிர்வாகஸ்தர்கள் குழுவும் தேவையாக இருக்கும். பரவல்

முறைப்படி உற்பத்தியும், விவசாயமும் நடக்கும் ஒரு சமூகத்தில் இருப்பதைவிட, இத்தகைய சமூகத்தில் அரசியலும், பொருளாதார வாழ்க்கையும் பல சிக்கல்கள் கொண்டதாயிருக்கும். இச் சிக்கல்களை யெல்லாம் புரிந்து கொள்ள முடியாத தனி மனிதன், நிபுணர்கள சொன்னதே வேத வாக்கு என்று நம்பியிருப்பான். இதனுல் அதிகார மனைத்தும் அந்த நிபுணர்கள், நிர்வாகஸ்தர்கள், அரசியல் வாதிகள் ஆகியோர் வசமே குவிந்து, நாளடைவில் ஓர் அதிகார வர்க்கமே ஏற்படுகிறது. பாமர மக்களுக்குப் பொருளாதாரப் பாதுகாப்புக் கிடைக்கலாம். ஆனுல் அதற்கு மேல், வளர்ச்சிக்கு எவ்வித வசதியும் கிடைக்காது. அத்தகைய நிலை ஏற்பட்ட பின், இயந்திர சாலைகளில் இருக்கும் சிறிதளவு சுதந்திரத்தைக் கொண்டே அரசியல் ஜனநாயகத்தைக் காப்பாற்றிவிட முடியாது. இதுபோன்ற சமுதாய அமைப்பின் அடிப்படையையே மாற்றும்படியாகப் பெரிய புரட்சி செய்தாலொழிய எவ்வித மாறுதல்களையும் புகுத்த முடியாது. அதிகாரவர்க்கம் வைத்ததே சட்டம்.

ரஷ்யாவில் பொருளாதார, சமூக, அரசியல், கலாசார, கல்வி, மதத்துறைகள் அனைத்திலும் பிரஜைகளின் நடவடிக்கைகள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. எந்தத் துறையிலும் தனி மனிதனுக்குச் சுதந்திரம் கிடையாது. குறிப்பிட்ட சில சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு நடப்பவர்களின் திறமைதான் மதிக்கப்படும். ஒரு தனி மனிதனுக்கு, சாதாரணமாகப் பெற்றோர்கள், குடும்பம், சமூகம் முதலியன செய்வதை யெல்லாம் அரசாங்கம் தானே செய்கிறது. இதையும்தவிரத் தொழில் முறையை வகுப்பதும் அதுதான்; அரசியல் நியதியை விதிப்பதும் அதுதான். கலாசாரத்திற்கும் மதத்திற்கும்கூட அதுவே தாயகமாக விளங்க

முயற்சிக்கிறது. இந்த எல்லாத் துறைகளிலும், அதிகாரம் அனைத்தும் அரசாங்கத் திடம் குவிந்து விடுவதால், தனி மனிதனுக்குச் சுதந்திரமே இல்லாமல் போகிறது. இந்தியாவில் அவிபக்தக் குடும்பம், சாதி, சமூகம், குழு ஆகிய கட்டுப்பாடுகள் நம் அமைப்பை எவ்வளவு தூரம் அரித்துத் தின்றுள்ளன என்பதை நாம் அறிவோம். இவையெல்லாம், பொருளாதாரப் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் என்று தான் கூறப்பட்டு வந்தன. ஆனாலும், தனி மனிதனின் சுயபுத்தி, சுயசக்தி, சுதந்திரம் ஆகியவை வரண்டு போகும்படி செய்யப்பட்டது. மனிதன் விடுதலைப் போராட்டம் நடத்தியுள்ள போதெல்லாம் குடும்பம், சாதி, சமூகம் ஆகியவை விதிக்கும் கட்டுபாடுகளையும், சுமத்தும் தடைகளையும் தளர்த்த முயன்றுள்ளான். தன் தனிப்பட்ட சுதந்திரத்தை அவன் இவ்வகையில்தான் அடைந்துள்ளான். 18, 19-ம் நூற்றுண்டுகளில் மனிதன் தன் சுதந்திரத்தை நிலைநாட்டி அடைந்துள்ள நன்மைகள் பல. அவற்றைக் கொண்டு மேலும் முன்னேற விரும்புவதல்ல கம்யூனிஸம். பழைய கட்டுப்பாடுகளையே இன்னும் கடுமையான முறையில் புகுத்த விரும்புகிறது அது. சமதர்மம் நிலை நாட்டப்பட்டு வர்க்கப்பிரிவினையில்லாத சமூகம் ஏற்பட்டவுடன், அரசாங்கம் தானுகப் பட்டுப் போய்விடும் என்று மார்க்ஸிய வாதிகள் உறுதி கூறுகின்றனர். அரசாங்கம் பட்டுப் போய்விடும் என்ற கொள்கை எதிலிருந்து பிறந்தது? குறைந்த அளவு அதிகாரத்தைச் செலுத்தும் அரசாங்கம் சிறந்ததேயாகும் என்ற கொள்கையிலிருந்துதான் அது பிறந்தது. இக்கொள்கைதான் தனி மனிதனின் சுதந்திரத்திற்கும் அஸ்திவாரமாகும். ஆகவே தனிமனிதன் சுதந்திரத்தில் நம்பாத கம்யூனிஸம், அரசாங்கம் பட்டுப்போக இடம் கொடுக்காது. அந்த ஆட்சியில், அரசாங்கத்தின் அதி

காரமும், வல்லமையும்தான் நாளுக்குநாள் பெருகும். வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அது தன் சர்வாதிகாரத்தை நிலை நாட்டும். பொது வாழ்வில், சுதந்திரத்திற்கே இடமில்லாமல் போகும். விளையாட்டுக் கழகங்கள்கூடச் சர்க்காரின் கடுமையான கண்காணிப்பின் கீழ் தான் வேலை செய்யமுடியும். பண்டைக் காலத்தில், மிக்க வல்லமை பொருந்திய சர்வாதிகாரங்கள்கூடத் தனி மனிதனின் சொந்த வாழ்க்கையிலும், சமூக வாழ்வின் பல துறைகளிலும் தலையிடாமல் இருந்தன. செங்கிஸ் கானும், தெமுர்லேனும் பிரஜைகளின் கலாசார வளர்ச்சியைக் கட்டுப்படுத்தவோ, சொந்த வாழ்க்கையில் குறுக்கிடவோ முயற்சிக்கவில்லை. ஆனால் புது கம்யூனிஸ்ட் ஆட்சியோ, வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் கண்காணிக்கும். இத்தகைய கடுமையான கட்டுப்பாடு, மனிதனின் சுதந்திரத்தையும், சுய சக்தியையும் அழித்து விடும்.

உலகம் முழுவதும் கம்யூனிஸத்தை ஏற்றுக்கொள்ளும்வரை, ஒரு நாட்டின் கம்யூனிஸ்ட் ஆட்சியில், பாஸிஸ அல்லது நாஜிஸ நாட்டில் இருக்கும் அநீதிகள், கெடுதல்களில் அநேகம் இருந்தே தீரும். பிற நாடுகள் தன்னை ஆக்ரமிக்கக்கூடுமென்று கம்யூனிஸ்ட் நாடு நினைக்கும் வரை, அது யுத்த முஸ்தீபில் முனைந்து சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முயலும். அந்தத் தற்காப்பிற்கு, அண்டையில் உள்ள நாடுகளின் எல்லைகளை ஆக்ரமிக்கும் நிலைக்குக் கூட அது வந்துவிடும். வெளி நாடுகள் ஆக்ரமித்தால் முதலில், அண்டையிலுள்ள சிறு நாடுகளுக்குத்தான் அபாயம் என்பதையும் அவர்கள் மறந்துவிடுகின்றனர்.

1939-ல் நடந்த ரஷ்ய, பின்லாந்து யுத்தத்தில் ரஷ்யாவால் பின்லாந்துக்கு அபாயம் என்பதை மறந்துவிட்டு, பின்லாந்தால் ரஷ்யாவுக்கு அபாயம் என்று

வியாக்கியானம் செய்தனர் ரஷ்ய அரசியல் வாதிகள். அரசியல் ஆதிக்க வேட்டையில்தான் பகுத்தறிவு பலியாகி விடுகிறதே! ஆடு இருப்பதால் ஓநாய்க்கு அபாயம் என்ற ஈஸாப் கதைதான் இங்கு பொருந்தும். இச்சிறு நாடுகளை ஆக்ரமிப்பது, கம்யூனிஸ்ட் கொள்கையைக் காத்துக் கொள்வதற்கு அவசியமானது என்று அவர்கள் வியாக்கியானம் செய்வதுமட்டும் நிச்சயம். எவ்வளவு உத்தமமான லட்சியத்திற்கு அச்சிறு நாடுகள் தங்களை அர்ப்பணம் செய்கின்றன என்பதை அவை உணராமலிருக்கும் மடமையைக் கண்டு இரங்குவர் இந்த அரசியல் வேட்டைக்காரர்கள். ஏகாதிபத்தியத்தின் ஆக்ரமிப்பிற்கும், கம்யூனிஸத்தின் ஆக்ரமிப்பிற்கும் வித்தியாசம் தெரியாத அந்நாட்டினர் பேதமையைக் கண்டு பரிகசிப்பர் அந்த ராஜ தந்திரிகள்: தெய்வீக ஆட்சியைப் புவிமேல் நிலைநாட்ட நடக்கும் தர்ம, லட்சிய யுத்தமல்லவா இது என்று அவர்கள் கேட்கிறார்கள்.

புது சமுதாயத்தின் அடிப்படை

கம்யூனிஸத்தினால் ஏற்படும் பொருளாதார நன்மைகள் எவ்வளவாயிருந்தாலும் சரி. அரசியல், கலாசார, மதத் துறைகளில் அதனால் பிற்போக்குத்தான் ஏற்படும் என்பது நிச்சயம். பொருளாதாரப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக அது மற்றவற்றைப் பலிகொடுத்து விடுகிறது. மனித சமுதாயம் இவ்வாறு தன் சிறந்த பண்புகளையெல்லாம் பலிகொடுப்பது அவசியமா? அரசியல் ஜனநாயகத்தைப் பொருளாதார சமத்துவத்துடனும், சர்வதேசிய சமாதானத்துடனும் இணைத்தால்தான் சுதந்திர, ஐக்ய சமுதாயம் ஏற்பட முடியும். பொருளாதார சமத்துவத்தைப் பெற்று அதற்குப் பதிலாக அரசியல் ஆத்மீக அடிமைத்தனத்தைச் சம்பாதித்துக் கொள்வதில் பலன் என்ன? வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும்

ஓரளவிற்குச் சுதந்திரம் இருக்கவேண்டும். குவியல் உற்பத்தி முறையை ஒழித்து உற்பத்தியைச் சிறு அளவில் அந்தந்த இடங்களில், சுயதேவைப் பூர்த்தி முறையை அனுஷ்டித்து நடக்கும் உற்பத்தி முறை மூலமாகப் புகுத்தினல்தான், இத்தகைய சுதந்திரம் ஏற்படும். இத்தகைய பரவல் உற்பத்தி முறையினுல், தொழிலாளர், பல துறைகளிலும், பல வேலைகளிலும் ஈடுபட முடிகிறது. ஓர் இயந்திரத்தின் சக்கரங்களாகி விடுவதில்லை அவர்கள். சமூகத்தின் ஒவ்வோர் அங்கத்தினரும் பயன் தரும் வேலையொன்றில் உற்சாகத்துடன் ஈடுபட்டிருப்பார். இயந்திர சாலையில் உற்பத்தியாகும் பொருளுக்கு வேண்டிய சில பகுதிகளைக் குடிசைத் தொழில் முறையில் உற்பத்தி செய்து, ஆலைகளுக்குக் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்பதல்ல, இந்தப் பரவல் உற்பத்தி முறையின் கொள்கை. பரவல் உற்பத்தி முறையில், ஒரு தொழிலாளி, தன் சாதனங்களைக் கொண்டே ஒரு பொருளை உற்பத்தி செய்து முடித்துவிடுவான். இந்த வேலையினுல் அவன் சுய சக்தியும், கலை உணர்ச்சியும் வளர்கின்றன. மேலும் ஆலையில், ஆட்டு மந்தைபோல் இருந்து வேலை செய்யாமல், குடிசைத் தொழிலாளி, கிராமத்தில் சுத்தமான சூழ்நிலையில் வசித்து வேலை செய்வான். படாடோப வாழ்க்கை முறையை அவன் பழக்கப்படுத்திக் கொள்ளமாட்டான். பொருமை, வர்க்க விரோதம் ஆகியவை, அவனிடம் நகரத் தொழிலாளியைவிடக் குறைவாக இருக்கும். அவனுடைய சமூக வாழ்வும் தூய்மையாக இருக்கும். உணவு, வாழ்க்கை முறை, முதலியவையும் இயற்கையாகவும், எளியனவாகவும் இருக்கும். அநீதி, அடக்குமுறை முதலியவற்ருல் நசுக்கப்பட்டுக் கதியற்றிருக்கும் மனப்பான்மை அவனிடம் புகுந்துவிடாமலிருக்கும். கிராமத்

தொழிலாளியின் நிலைமையை இவ்வாறு சித்திரிப்பது லட்சியக் கனவாகத் தோன்றலாம். ஆனால், இந்த நிலைமையை நாம் அடைய முடியுமென்றுதான் நான் கூறுகிறேன். அந்நிலையை, இன்றுள்ள தொழிற்சாலைகள், அசுத்தம் நிறைந்த குடிசைகள், சுகாதார வாழ்வின் சுடுகாடுகளாயுள்ள சேரிகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பாருங்கள் என்றுதான் அறைகூவி அழைக்கின்றேன். அக்குடிசைகளில் பல ஆண், பெண், குழந்தைகள் ஒன்றாய் அடைபட்டுக் கிடப்பார்கள். தாய் வெளியில் போய் விடும்போது குழந்தைகள் சேற்றிலும், தெருச் சாக்கடைகளிலும் விளையாடிக்கொண்டிருப்பார்கள். பிரசவ வேதனைப்படுபவளுக்கு உதவி செய்யக்கூடப் பக்கத்தில் யாரும் இருக்கமாட்டார்கள். வாடகைப் பணம் கொடுக்கத் தவறினாலோ, தொழிலாளியும் அவன்குடும்பமும் வீட்டை விட்டு நடுச் சந்தியில் விரட்டப்படுவார்கள். ஆனால் கிராமத்திலோ, ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவன் பரம்பரை வீடாவது இருக்கும்; கிராமவாசிகளிடைச் சகோதர வாஞ்சையும், ஒத்துழைப்பும் அதிகமாக இருக்கும்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உள்ள இத்தீங்குகளையெல்லாம் பொதுவுடைமை அகற்றிவிடுமென்று சிலர் வாதாடுகின்றனர். குவியல் உற்பத்தி முறையினால் ஏற்படும் கெடுதல்களை அது அகற்ற முடியுமா என்பது சந்தேகத்திற்குரியது. உதாரணமாக நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளர், ஏக போக முதலாளிக்கோ, ஏக போக அரசாங்கத்திற்கோ வேலை செய்யும்போது, சுரங்கத்தில், இருட்டில் நாள் முழுவதும் வேலை செய்வதிலிருந்து தப்பமுடியாது. ஓர் ஆலை ஒரு தனிப்பட்ட முதலாளிக்குச் சொந்தமாயிருந்தாலும் சரி, அரசாங்கத்திற்குச் சொந்தமாயிருந்தாலும் சரி, காதைச் செவிடுபடுத்தும் அந்தச் சத்தம், வேலைக்கு லாயக்கற்ற

சூழ்நிலையை ஏற்படுத்தித் தொழிலாளரின் ஆரோக்கியத்தைப் பாதிக்கத்தான் செய்யும். பெரிய நகரங்களில், இத்தொழிலாளர் ஆட்டு மந்தைகள்போல் அடைபட்டிருக்கும் நிலைமையும் மாறிவிடப் போவதில்லை. தர்க்கத்திற்காக, பொதுவுடைமை அல்லது அரசாங்க முதலாளித்துவத்தினால் (இன்று இவையிரண்டும் ஒன்றுதான்) அக்கேடுகள் எல்லாம் நீங்கும் என்பதை நாம் ஒத்துக்கொண்டால் கூட, ஜனநாயகமும் தனி மனிதனின் சுயேச்சையும் அழிக்கப்படுமென்பது நிச்சயம். குடிசைக் கைத்தொழில்களோ, தொழிலாளரின் சுயேச்சையை வளர்க்கும். அவர்களே ஜனநாயகத்தின் தூண்களாவர். ஆட்டுமந்தைகள் போல், ஒருவர் ஆக்கினையை ஏற்றுக் கண்மூடித்தனமாக நடக்கும் வழக்கத்தை அவர்கள் அகற்றுவார்கள். அத்தகைய சுதந்திர உணர்ச்சி கொண்டவர்களைக் குத்தியெழுப்பி, ரத்தக் களரியான ஒரு புரட்சிக்குத் தூண்டிவிடமுடியாதென்றாலும், அவர்கள், சர்வாதிகாரத்தையும் ஆதிக்கக் கொடுமையையும் சகித்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பது திண்ணம். இத்தகைய வர்க்கங்கள் தான் பிரபுக்களிடமிருந்தும், மன்னர்களிடமிருந்தும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி ஜனநாயகத்தை நிலை நாட்டின என்பதைச் சரித்திரத்தில் காணலாம்.

குவியல் உற்பத்தி முறையும் சர்வாதிகாரமும்

இன்றைய முறைப்படி ஆலை முதலாளிதான் சர்வாதிகாரி. அந்த சர்வாதிகாரிக்குப் பணிந்து அன்றாடம் வேலை செய்யப் பயின்றுள்ள இயந்திரத் தொழிலாளருக்கு, அரசாங்கத்தில், சர்வாதிகாரத்தை எதிர்த்துப் போராடத் துணிச்சல் இருக்காது. அரசாங்க அதிகாரம் அனைத்தும் ஒருவரிடமோ, ஒரு சிலரிடமோ குவிந்திருப்பது என்பது தானே சர்வாதிகாரம். ஆலைத் தொழிலில் சர்வாதிகாரத்

துக்குப் பழக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள், புரட்சிக்குப் பின்பும், ஜனநாயக வழியில் நடக்கமாட்டார்கள்; சர்வாதிகாரப் பொதுவுடைமை வழியில்தான் நடப்பார்கள். தொழிலாளிக்கு, தனி மனிதன் என்ற சுயேச்சையான வாழ்வு இருந்ததே கிடையாது. கூலிப் பட்டாளத்தில் ஓர் ஆளாகவே அவன் எப்பொழுதும் இருந்துள்ளான். அவர்களைவிடச் சற்றுச் சுயேச்சையாக வாழ்ந்து வந்த விவசாயிகளும், கைத் தொழிலாளரும் சர்வாதிகாரத்திற்கு எளிதில் பணிந்து விடமாட்டார்கள். சிறிய நிலச்சுவான்தாரை ஒழிக்க, ரஷ்யாவில் அதிகாரிகள் எவ்வளவு கஷ்டப்பட்டனர் என்பது நமக்குத் தெரியும். சுயேச்சையான தொழிலாளர், கிருஷிகர் வர்க்கங்களை ஏற்படுத்தினால்தான் அரசியல் ஜனநாயகத்தையும் பொருளாதார சுதந்திரத்தையும் பிணைக்க முடியும். இல்லாவிடில், இவ்விரண்டு கொள்கைகளும் ஒன்றையொன்று பாதித்துக் கொண்டுதான் இருக்கும்.

குடிசைத் தொழில் முறையால், உள்நாட்டில் பொருளாதார சுதந்திரமும், அரசியல் ஜனநாயகமும் ஏற்பட ஏதுவாகின்றன என்று நாம் கண்டோம். அதேபோல் சர்வதேசத் துறையில், ஏகாதிபத்தியத்திற்கும் யுத்தத்திற்கும் முக்கிய காரணமான ஒன்றைக் குடிசைத் தொழில் நீக்குகிறது.

பொருளாதாரக் காரணங்களால்தான் சாம்ராஜ்யங்கள் ஏற்பட்டுள்ளன என்று மார்க்ஸிய வாதிகள் நம்புகின்ற அளவுக்கு இன்று ஏகாதிபத்தியமும், பெரிய ஆலைத் தொழில்களும் ஒன்றையொன்று நம்பி நிற்கின்றன. இத்தகைய கருத்து சரித்திரத்தில் மெய்ப்பிக்கப்படுகிறதோ இல்லையோ, இன்று ஏகாதிபத்தியங்கள் உண்டாக்கப்படுவதும் காப்பாற்றப் படுவதும்

ஆலைத்தொழில்களால்தான் என்பதில் ஐயமில்லை. முதலாளி வர்க்கத்திற்கு உதவி செய்ய இன்று அரசாங்கம் அதிகாரத்தைச் செலுத்தி வருகிறது. குவியல் உற்பத்தி முறை ஒழிந்தால் சாம்ராஜ்யங்கள், ஏகாதிபத்தியங்கள் உருவாவதற்கு உள்ள தூண்டுதல்கள் ஒழிந்துவிடும். ஏனென்றால், இன்று சாம்ராஜ்யங்களால் கிடைத்து வரும் லாபம் குவியல் உற்பத்தி முறை ஒழிந்த பின்னர் கிடைக்காது; நஷ்டம்தான் ஏற்படும். ஆகவே நாடுகள், தங்கள் சரக்குகளை விற்கப் பிற்போக்கான நாடுகளைத் தேடி வேட்டையாட வேண்டிய அவசியமிருக்காது. மூல தனப் பொருள் பெறுவதற்கும் கண்மூடித்தனமான பாய்ச்சலும், போட்டியும் இருக்காது. அரசியல் அதிகாரம் இத்தகைய வேட்டையில் விரயம் செய்யப்பட மாட்டாது. நாட்டு மக்கள் தேவைகளை அனுசரித்தே உற்பத்தி நடக்கும். அயல் நாட்டு வியாபாரம் நடந்தால் அது இரு தரப்பினருக்கும் நன்மை பயக்கும் அளவில் தான் நடக்கும்.

அயல் நாட்டு வியாபாரம்

அயல் நாட்டு வியாபாரம் சமீபகாலத்தில் தொடங்கியதல்ல; தொன்றுதொட்டு நடந்து வருகிறது. ஆனால் சமீப காலத்தில் அதன் தன்மையும் அளவும் விரிந்துள்ளன. பண்டை நாட்களில்கூடப் பல சரக்குகள்—குறிப்பாக உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் சென்றதுண்டு. புராதன இந்தியா, அநேகமாய் எல்லா நாடுகளுடனும் வர்த்தக உறவு கொண்டிருந்தது. அன்று திரட்டிய எல்லையற்ற செல்வம், இந்தியாவின் விவசாயத்தினாலோ மூலப் பொருள்கள் ஏற்றுமதியாலோ கிடைத்ததல்ல. இவற்றை ஏற்றுமதி செய்வது அக்காலத்தில் அசாத்தியமாயிருந்தது. சிறிய, ஆனால் விலைமதிக்க முடியாத அரும்

பொருள்களை ஏற்றுமதி செய்தே இந்தியா செல்வம் திரட்டியது. அப்பொருள்கள், ஆலைகளில் இயந்திரங்களினால் செய்யப்பட்டவையல்ல. குடிசைக் கைத்தொழில் முறையில் செய்யப்பட்டவையே அவை. அப்பொருள்களுக்குப் பதிலாக இந்தியா அயல் நாடுகளிலிருந்து பொன்னும், வெள்ளியும், மணியும் பெற்றது. இந்தியா எல்லையற்ற செல்வத்தைத் திரட்டியதன் ரகசியம் இதுதான். அச்செல்வம் தான் ஆதிகாலத்தில் பட்டாணியர், மொகலாயர் ஆகியோருடைய பேராசையையும், சமீப காலத்தில் மேனாட்டினரின் பொறாமையையும் தூண்டியது. ஆதிகாலத்தில், வட எல்லைக்கு அப்பாலிருந்து வந்த படைகள் இஸ்லாம் மதத்தைப் பரப்பும் நோக்கத்துடன் வரவில்லை. இஸ்லாம் மதமென்ற கோஷம்தான் எழுப்பப்பட்டதே ஒழிய, உண்மையில் இந்தியாவின் செல்வத்தைச் சூறையாடவே அவர்கள் வந்தனர். அவ்வாறு படையெடுத்தவரிற் சிலர், இங்கேயே ராஜ்யத்தை ஏற்படுத்தி விட்டால் நிரந்தரமாகக் கொள்ளை யடித்துக்கொண்டிருக்க முடியுமென்று எண்ணினர். அவர்களுக்குப் பின் வந்த ஐரோப்பியக் கொள்ளைக்காரர்கள், இந்தியாவின் அயல்நாட்டு வியாபாரத்தில் தங்களுக்கும் பங்கு வேண்டுமென்றுதான் முதலில் கேட்டார்கள். ஆனால் சர்வதேச வியாபாரத்தைவிட சாம்ராஜ்யத்தை ஏற்படுத்துவது லாபகரமானது என்பதை அவர்கள் விரைவில் உணர்ந்தனர். இந்தியாவின் சிறுபான்மை வகுப்புக்கள், நிலச்சுவான்தார்கள், சுதேச மன்னர்கள் ஆகியோ ரனைவரின் நலன்களும் இறுதியில் பிரிட்டனுடைய வியாபாரத் தொழில் நலன்களுக்கே பயன்படுகின்றன. இந்த அநீதிகளை நிலைநாட்டுவதற்குத்தான் ராணுவம் இருக்கவே இருக்கிறது.

ஆகவே, குவியல் உற்பத்தி முறையை ஒழித்துக் காந்தீயத் திட்டபடி பரவல் முறையை அனுஷ்டித்த உடன் சர்வதேச வர்த்தகமும், பொருள் பரிவர்த்தனையும் நின்று விடுமென்றும், மக்களிடைக் குறுகிய தேசீய மனப்பான்மை ஏற்பட்டுவிடு மென்றும் கூறுவது தவறு. இப்பொழுது போலவே, சரக்குகளின் போக்குவரத்து நடைபெறும். போக்குவரத்துப் போன்ற பிரதான தொழில்களில் ஓரளவு குவியல் முறை அவசியமாக இருக்கலாம். ஆனால் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைக் குடிசைக் கைத்தொழில்கள் மூலமே லாபகரமாக உற்பத்தி செய்ய முடியும். குவியல் முறை அவசியமாகவுள்ள துறைகளில்கூட, அவை பொதுஜனக் கட்டுப்பாட்டுக்கும் கண்காணிப்புக்கும் கீழ் நடந்து வரும்படி செய்து, அதிகாரமும் செல்வமும் ஒரு சிலரிடம் குவிவதைத் தடுக்கவேண்டும்.

குடிசைக் கைத் தொழில் பரவிவிட்டால், மக்கள் கிணற்றுத் தவளைகள்போல் ஆகி விடுவார்கள் என்று சொல்வதும் தவறு. ஆதிகாலத்தில் போக்குவரத்து கடினமாக விருந்தது. இன்று விஞ்ஞான முன்னேற்றத்தின் பயனாக நாம் காண்பது நாடுகளிடையே பொறாமையும், விரோதமும், பூசலும் ஏற்பட்டுள்ளதுதான். பண்டை நாட்களில் இருந்த நிலைமை எவ்வளவோ உயர்ந்ததாக இன்று காணப்படுகிறது. குறுகிய மனப்பான்மையும் விரோத வெறியும் வளர்வது, போக்குவரத்து வசதிகள் முதலியவை இல்லாத காரணத்தால் அல்ல; சகோதர வாஞ்சையும் நல்லுணர்வும் ஒத்துழைப்பும் இல்லாத காரணத்தால்தான். சர்வதேச ஒத்துழைப்புக்குத் தடையாக இன்று நிற்பவை பூகோளப் பிரிவுகளும் எல்லைகளும் அல்ல; மனிதனின் எண்ணங்களும் பேராசைகளுமே வேலி வகுத்துள்ளன. பேராசை, சுரண்

டல், பொருளாதார ஏற்றத் தாழ்வு முதலிய தடைகள் குடிசைக் கைத்தொழில் முறையால் வெகுவாகக் குறையும்.

தற்காலத் தொழில் முறையும் ஆயுத வெறியும்

தற்காலத் தொழில் முறை சர்வதேச யுத்தங்களையும் ஏகாதிபத்திய வெறியையும் உண்டாக்குகிறது என்பது மட்டுமல்ல; அப்போருக்கு வேண்டிய ஆயுதங்களையும் அது உற்பத்தி செய்து தருகிறது. இப்போர் ஆயுதங்களின் உற்பத்திப் போக்கைக் குறைத்துத் தடுக்கக் குடிசைக் கைத்தொழில்கள் உதவும். ஆயுத உற்பத்தித் தொழிலைத் தனிப்பட்ட சிலர் கையிலிருந்து அரசாங்கத்திடம் மாற்றுவதால் மட்டும் ஆயுதவெறியைத் தடுத்துவிட முடியாது. பண்டைக் காலத்தில் மட்டுமல்ல, இன்றும் அரசாங்கங்களின் பேராசை தனிப்பட்டவர்களின் பேராசையை விட எள்ளளவும் குறைந்ததா யில்லை. ஆலைத் தொழில் முறையால்தான் ஆயுத உற்பத்திப் பெருக்கம் சாத்தியமாகி உள்ளது என்பது சரித்திரபூர்வமான உண்மை. குடிசைக் கைத் தொழில்கள் மூலம் பீரங்கிகள் போன்ற நாசகார ஆயுதங்களை உற்பத்தி செய்ய முடியாது. தற்கால நாச ஆயுதங்களும், ஆலைத் தொழிலும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டவை. ஆயுதங்களின் நாச சக்தியையும் எண்ணிக்கையையும் குறைத்தால், யுத்தங்கள் உடனே ஒழியாவிட்டாலும் அவற்றின் கொடுமை மிகவும் குறையும். அத்துடன் அவற்றால் ஏற்படும் விரோதமும் மனக்கசப்பும் குறையும்.

இக்காலத்திய சேனைகள் அமைக்கப்பட்ட விதம் ஆலைகள் அமைக்கப்பட்ட விதத்தை ஒத்ததே யாகும். முதல் உலக யுத்தத்திலிருந்து ராணுவம் முழுவதும் இயந்திரமய மாக்கப்பட்டுள்ளது. ஆகவே அமைப்பின்

மூலமாகவும், ஆயுதங்கள் மூலமாகவும் ஆலைத் தொழில்கள் யுத்தங்களுக்கு உதவுவது மட்டுமல்ல, அடியும்கோலுகின்றன. கிராமக் கைத் தொழில் இவ்விரண்டு போக்குகளையும் தடுக்கும்.

செழிப்பும் இன்பமும்

ஆலைத் தொழில் மூலம்தான் செழிப்பும் இன்பமும் ஏற்பட்டுள்ளன என்றும், பழைய முறையை மீண்டும் பின்பற்றினால் இவை மறைவதோடு, இவற்றால் ஏற்பட்ட கலாசார உயர்வும் மறைந்துவிடு மென்றும் சிலர் வாதாடுகின்றனர். கிராமக் கைத்தொழில்களில், தேவையான—நலம் பயக்கும் அளவிற்கு—இயந்திர சக்தியை உபயோகிப்பதன் மூலம், மனித சமுதாயத்தின் நல்வாழ்விற்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் உற்பத்தி செய்ய முடியும். தேவைகளை அதிகரித்துக் கொண்டே போனால்தான் நாகரிகம் உயரும் என்று சிலர் நினைக்கின்றார்கள். தேவைகளைக் குறைத்தால், அவற்றைப் பூர்த்தி செய்வதால் கிடைக்கும் இன்பமும் அந்த அளவிற்குக் குறையுமாம். இன்பம், இத்தகைய பெருக்கல் வாய்ப்பாடுக்கு அடங்கியதல்ல. இன்பம், கணித்தற்கும் அளவிடுதற்கும் அரியது. நாய்க்கு எலும்பு கிடைத்தவுடன் ஏற்படும் இன்பம் வேறு; கலைஞன் தன் கலா சிருஷ்டியைக் காண்பதால் எய்தும் களிப்பும், அறிஞர் தங்கள் ஆராய்ச்சியிலிருந்து பெறும் இன்பமும், தியாகிகள் தங்களையே சேவைக்கு அர்ப்பணம் செய்வதிலிருந்து பெறும் நிறைவும் வேறு. இவற்றை யெல்லாம் மறந்துவிட்டு அரைகுறை உண்மைகளைக்கொண்டு சித்தாந்தம் சிருஷ்டிப்பது தவறு.

"இன்பத்தைத் தவிர்க்கவேண்டு மென்பது ஞானிகளுக் கேற்றது; தற்காலத்துக்கு ஏற்றதல்ல" என்று சிலர் வாதாடுகின்றனர். பண்பட்ட இன்ப வாழ்வு

வேறு; இன்பத்தை நாடி இச்சைக்கு அடிமையாகி மனிதத் தன்மையையே இழப்பது வேறு. புலனடக்கத்தாலும், மனத்தைக் கட்டுப்படுத்துவதாலும் கிடைக்கும் இன்பம் சகல சுகபோகங்களுக்கும் மேலானது. அறிஞர், கலைஞர், ஞானிகள் ஆகியோர் வெறும் சுகத்தை நாடவில்லை. அவர்கள் அதைவிட மேம்பட்ட லட்சியங்களுக்காக வாழ்ந்தனர்; உழைத்தனர். சுகபோகங்கள் அனுபவிக்க வாய்ப்பு இருந்தும், அவர்கள் புலன்களை அடக்கி உணர்ச்சிகளை வெல்கின்றனர். சிலர் முற்றும் துறந்த முனிகளாக வாழ்கின்றனர். சுகபோகங்களில் ஈடுபடுவ தன் மூலம் தங்கள் உடல் சக்தியும் ஆத்ம சக்தியும் விரய மாகின்றன என்பதை அவர்கள் உணர்கின்றனர். ஒரு சிறிய அளவிற்கு மேல் சுகம் அனுபவித்தால், நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ நமது ஆக்கல் சக்தி சற்றுக் குறைகிறது. நல் வாழ்க்கைக்கு, மிகக் குறுகிய லௌகீக வசதிகள்தான் தேவை என்பதை உணர்ந்தே புராதன ஹிந்துக்களும் கிரேக்கர்களும் வாழ்ந்தனர். ஓர் அளவிற்கு மீறி லௌகீகத்தில் ஈடுபட்டால் அதுவும் ஆத்மீக வாழ்க்கையைப் பாதிக்கிறது. அளவுக்கு மீறிச் சுகத்தை நாடுவது, அந்த சுகத்தை அனுபவிக்கும் சக்தியையே குறைத்துக் கொள்வதாகும். கட்டுக் கடங்கா இச்சை நம் அறிவையும் உறுதியையும் அரித் துத் தின்றுவிடுகிறது. ஆகவே அது எந்த ஆக்கல் வேலைக்கும் உதவி செய்யாமல், உண்மையில் குறுக்கே தான் நிற்கிறது. லௌகீக வசதிகளையும் பொருள்களையும் அளவுக்குமீறி நாடுவோர், பிறர் தயவில் இருக்கவேண்டி யிருக்கிறது. இவ்வாறு அவர்களுக்கு அடிமை மனப் பான்மை வளர்கிறது. அவர்கள் தங்களுக்கும் பிறருக்கும் அடிமை யாகிவிடுகிறார்கள். ஆசைகளை வெல்ல அவர்களால் முடியவில்லை. தேவைகளையும்

ஆசைகளேயும் அதிகரித்துக்கொண்டே போவதன் மூலம், நம் பண்பாடு குறைந்து, மனத்தில் மட்டமான எண்ணங்கள் புகுகின்றன; அழுக்காறும் அகங்காரமும் ஆதிக்கம் செலுத்துகின்றன. பொருட் செல்வம் பெருக அருட் செல்வமும் ஆத்ம சக்தியும் குறைகின்றன. ஏழைகளுடன் பழகும் வகை அவர்களுக்குத் தெரியவில்லை. அப்பொழுது அவர்கள் ஆத்மீக ஏழ்மையும், பண்பாட்டுக் குறைவும், புத்தி சூன்யமும் வெளியாகி விடுகின்றன.

தேவைகளின் உற்பத்தி

மனிதனின் நல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் எளிதில் கிடைக்கக்கூடியதான நிலைமை இருப்பது நல்லது தான். ஆனல், இன்றோ உண்மையான தேவைகளே அனுசரித்து உற்பத்தி நடப்பதில்லை; உற்பத்தி செய்து பொருள்களைக் குவித்துவிட்டு, அவற்றிற்குத் தேவையைத் தூண்டிவிட முதலாளிகள் முயற்சிக்கின்றனர். இம்முயற்சியில், பொய்ப் பிரசாரம், மிகைப்படுத்திப் பேசுதல், உண்மையை மறைத்தல் எல்லாம் நடக்கின்றன. இவற்றிற்கு விளம்பரம் என்ற கௌரவப் பெயர் இன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் தேவைகளைப் பெருக்குவதும் அவற்றைப் பூர்த்தி செய்வதும் பண்பாடாகாது; இவை சீரழிவின் சின்னங்களே. தேவைகள் அதிகமில்லாத, உழைப்பு அதிகம் கொண்ட வாழ்க்கை நடத்திவந்த மக்கள், சுகபோகத்தில் ஈடுபட்டிருந்தவர்களை வென்றுவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றி யுள்ளதைச் சரித்திரத்தில் காணலாம். சுகவாசிகளின் மேற் பூச்சு நாகரிகம் அவர்களை அழிவிலிருந்து காப்பாற்றவில்லை. காட்டுமிராண்டிகள் என்று அவர்களால் கருதப்பட்டவர்களிடமே அவர்கள் தோல்வி யடைந்துள்ளார்கள். ஆதி காலத்து பாபிலோனிய, எகிப்திய, ரோம, கிரேக்க, ஹிந்து ராஜ்யங்களும், மொகலாய, சீன சாம்ராஜ்யங்

களும் அதே கதியைத்தான் அடைந்தன. சுகபோகம் அப்பிரஜைகளின் உடல் உறுதியையும் ஒழுக்க உயர்வையும் குலைத்துவிட்டது. ஆகவே தேவைகளை அளவுக்கு மீறிப் பெருக்கிக்கொண்டே போவது மனித சமுதாயத்துக்கு நன்மையென்பது தவறான எண்ணமாகும்.

செழிப்பில் யாருக்குப் பங்கு?

முதலாளித்துவ அமைப்பினால் ஏற்பட்டுள்ள செழிப்பில் உண்மையான உற்பத்தியாளருக்கும், தொழிலாளருக்கும் பங்கு உண்டா? அவர்கள் இன்னும் அறியாமையிலும், அடிமைத்தனத்திலும், ஏழ்மையிலுந்தான் அமிழ்ந்திருக்கின்றனர். இந்நிலைமையினால் அவர்கள் மனத்தில் கோபமும், விரோதமும், கசப்பும் குடிகொண்டுள்ளன. ஒரு பக்கத்தில் கோதுமை முதலிய உணவுப் பொருள்கள் குவிந்து கிடக்கின்றன. மற்றொரு பக்கத்தில் உணவுக்காகத் திண்டாடும் ஏழை மக்கள். இம்மக்களுக்கு அந்த உணவு கிட்டுவதில்லை. உணவு மலிவாகிவிட்டால் தங்கள் லாபம் குறைந்துவிடுமென்று அஞ்சும் முதலாளிகள், அந்த உணவுப் பொருள்களையெல்லாம் எரித்துவிடுகின்றனர். இதுதான் இன்றைய முதலாளித்துவ அமைப்பின் ஊழல். இன்று ஆலைத் தொழில்கள் இவ்வளவு தூரம் முன்னேறியுள்ள போதும், ஜனத்தொகையில் பெரும் பகுதியினர் வேலையில்லாத் திண்டாட்டத்தால் வாடுகின்றனர். நாட்டின் சக்தியும், வளமும், ஆள்பலமும் வீணாக்கப்படுகின்றன. இவை சரியான வழியில் செலுத்தப்பட்டால், நாட்டின் செல்வம் அதிகரிக்கும். குடிசைத் தொழில்களில் இயந்திர சக்தியை அடியோடு விலக்கவேண்டுமென்ற அவசியமில்லையென நாம் முன்பே கூறினோம். இன்று ஆலைத் தொழிலுக்கு அதைப் பயன்படுத்துவது போலவே குடிசைத் தொழிலுக்கும் பயன்படுத்தலாம். மின்சார

சக்தியைப் பல இடங்களுக்கும் ப்ரப்பிக் கிராம வாசிகளுக்கு நன்மை கிட்டும்படி செய்யலாம். இத்தகைய வசதிகளால் மனிதன் உழைப்புக் குறையும்; ஓய்வு அதிகரிக்கும். ஓய்வு நேரத்தை அவன் நன்மை பயக்கும் வழியில் பயன்படுத்திக்கொள்ளலாம். நாகரிக நல்வாழ்விற்கு அத்தியாவசியமான பொருள்கள் அனைவருக்கும் கிட்டும்படி செய்யலாம்.

பொருள்களை வாங்கும் சக்தி இருக்கிறதா?

முதலாளித்துவ அமைப்பில், பொருள்களின் உற்பத்தி பெருகிக்கொண்டே போகிறது; ஆனால் அதற்கேற்றாற் போல் அவற்றை வாங்கும் சக்தி மக்களிடம் அதிகரிக்கவில்லை. சில நாடுகளில் இந்த சக்தி தற்காலிகமாக அதிகரித்திருப்பது, அந்நாட்டினர் மற்ற நாடுகளை அடிமைப்படுத்திச் சுரண்டினதால்தான். இந்தச் சுரண்டல் ஒழிந்து வியாபாரத்தில் போட்டி ஏற்பட்டுவிட்டால் இச்செழிப்புக் குறையும்; தொழிலாளர் கூலியும், அதனால் அவர்கள் பொருள்களை வாங்கும் சக்தியும் குறையும். வேலை நிறுத்தங்கள் முதலியவற்றின் மூலம் தொழிலாளருக்குக் கொடுக்கும் சம்பளம் குறையாமல் பார்த்துக்கொண்டாலும், பல தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்கள். மொத்தத்தில் பாமர மக்களின் வாங்கும் சக்தி குறையும். இதனால் முடிவில் உற்பத்தியே பாதிக்கப்படும். பொருளாதார நெருக்கடிகள் அடிக்கடி ஏற்படும். முதலாளித்துவ அமைப்பில் அவை ஏற்பட்டே தீரும். ஒரு திட்டத்தின் அடிப்படையில் நடக்கும் பொருளாதார வாழ்வில் அவை நேரிடா. பொருள் உற்பத்திக்கு மட்டும் திட்டம் வகுத்துப் பயனில்லை; விநியோகம், பரிவர்த்தனை, கொள்முதல் அனைத்தையும் தழுவும் திட்டம் வேண்டும். இத்தகைய திட்டத்தை வகுக்கப் பொதுவுடைமை முயற்

சிக்கிறது. ஆனால் பொதுவுடைமைத் திட்டத்திலும் வேறு பல குறைபாடுகள் இருக்கின்றன. உற்பத்தியும், பரிவர்த்தனையும் திட்டப்படி நடந்தால் சமூகம் விரிய விரிய, அதற்கு அனுசரணையாக அரசியல் அமைப்புக்களும் மாறவேண்டும். அடிக்கடி ஏற்படும் மாறுதல்களால்—அதிலும் ஒரு பொதுவுடைமை சமூகத்தில்—பொருளாதார, அரசியல் புரட்சிகள் நேரிடும். மேலும் உற்பத்தி, பரிவர்த்தனைக்குத் திட்டம் வகுத்தாலும், அதிகாரம் அனைத்தும் ஓரிடத்தில் குவிவதைத் தடுக்க முடியாது.

ஆனால் குடிசைக் கைத் தொழிலிலோ, உற்பத்தியும் பரிவர்த்தனையும் தாமாகவே ஒன்றை யொன்று அனுசரித்துப் போகின்றன. கைத்தொழில் செய்பவனின் கூலியே, ஒரு பொருளின் விலையில் முக்கியமாக இருக்கிறது. ஆகவே தொழில் பெருக, அவன் லாபமும் அதிகரிக்கிறது; பொருள் வாங்கும் சக்தியும் அதிகரிக்கிறது. அவனுக்குக் கிடைக்கவேண்டிய பொருள்களை ஒரு முதலாளி விழுங்கவில்லை. உற்பத்தி செய்வதும், அநேகமாய்க் கொள்முதல் செய்வதும் அவனே. ஆகவே குடிசைத் தொழில் பெருகப் பெருக, தொழிலாளர் செல்வமும் நாட்டின் செல்வமும் உயர்கின்றன.

ஓய்வு நேரம்

இன்றையத் தொழில் முறையில் ஓய்வு நேரப் பிரச்னை மிக முக்கியமான பிரச்னை. பெரிய ஆலைகளிலும், காரியாலயங்களிலும் கணக்கற்றவர் அடைபட்டுக் கிடக்கின்றனர். அங்குள்ள வேலை, உடலையும் மனத்தையும் பலவீனப் படுத்துவதாக இருக்கிறது. சரியான சூழ் நிலையில் வேலை செய்வது விளையாடுவதைப் போல் சந்தோஷம் தருவதாகவே இருக்கும். இன்றைய முதலாளித்துவ அமைப்பு, தொழிலாளரின் சக்தியை உறிஞ்சி அவர்களைச் சக்கைகளாக்கி விடுகிறது. ஓய்வு கிடைப்பதே

அரிதாக இருக்கிறது. ஆனால் ஓய்வு கிடைப்பது மட்டும் நன்மையாகி விடாது. அதை நல் வழிகளில் நாம் பயன் படுத்த வேண்டும். பண்படாதவர்களுக்கும், ஒழுக்க உயர்வும், புத்தி கூர்மையும் இல்லாதவர்களுக்கும் ஓய்வு நேரமே ஒரு கெடுதலாக முடியக்கூடும். அதை அவர்கள் தீதான வழிகளில் செலவு செய்யக்கூடும். உழைக்காமல் உண்டு களித்திருப்போரை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு நாள் முழுவதும் ஓய்வுதான். ஆயினும், அவர்களுக்கு வாழ்க்கையில் ஒருவிதச் சலிப்பும், தங்கள்மீதே ஒருவித வெறுப்பும்தான் இருக்கின்றன. சோம்பலே, அவர்களுக்கு ஒருவிதச் சுமையாகி விடுகிறது. பணக்கார வீட்டுப் பெண்களுக்கு என்ன வேலை செய்வ தென்றே தெரியவில்லை. ஆகவே நாவல்கள் படிப்பதிலும், கடைத்தெருவில் சுற்றுவதிலும், திண்ணைப் பேச்சுப் பேசுவதிலும், வீண் விளையாட்டுக்களிலும் அவர்கள் தங்கள் நேரத்தைச் செலவு செய்கின்றனர். அவர்கள் சுபாவமே மாறிவிடுகிறது. கோணல் புத்தியும், மனக் கோளாறுகளும் ஏற்படுகின்றன. அவர்கள் கலையை ரசிப்பதில்லை. தங்கள் அந்தஸ்துக்கு அக்கலை ஓர் அத் தாட்சி யென்றே கருதுகின்றனர். கலை அனுபவத்தி லிருந்து அவர்கள் ஆத்ம உயர்வோ, இதய நிறைவோ பெறுவதில்லை; சொத்துடைமையின் செருக்குத்தான் வளர்கிறது. ஆடம்பரத்திற்காகவே அவர்கள் பொருள் களைச் சேகரிக்கின்றனர். தாங்கள் வாங்கும் புத்தகங் களை அவர்கள் படிப்பதில்லை. கண்ணுக்கு அழகாக அவற்றைத் தங்கள் வீட்டில் வைத்திருப்பார்களே ஒழி யத் திறந்துகூடப் பார்ப்பதில்லை. கலையைப் போஷிப்பது என்று இதற்குப் பெயர். அவர்கள் பண்பாட்டிற்கும் நாகரிக உயர்விற்கும் மீறிய பணம் அவர்கள் கையில் சிக்கியிருப்பதுதான் இதற்குக் காரணம். பணக்காரர்கள்

நிலைமை இப்படியிருக்க ஏழைகளோ தங்கள் நேரத்தைக் குடி முதலிய கெட்ட வழக்கங்களில் போக்குகின்றனர். ஓய்வு நேரத்தை நன்மையான வழிகளில் பயன்படுத்த மனித சமுதாயம் இன்னும் கற்றுக் கொண்டபாடில்லை. ஓய்வு நேரத்தில் இன்பமும் நன்மையும் ஒருங்கே பெற்று உயர்வதுதான் சிறந்த நாகரிகத்தின் சின்னம்.

தன் தொழிலைத் திறம்படச் செய்வதற்கும், உழைப்பினால் வரும் களைப்பைப் போக்கி மீண்டும் உடல் உறுதி பெறுவதற்கும் எவ்வளவு ஓய்வு நேரம் அவசியமோ, அவ்வளவுதான் ஓர் உண்மையான தொழிலாளிக்குத் தேவை. ஒரு சிலர் தங்கள் பதவிக்கும், பொறுப்புக்கும் உரிய காரியாலய வேலையைச் செய்வதுடன் தங்களுக்குப் பிடித்த வேறு வேலைகளை ஓய்வு நேரத்தில் செய்து நன்மை அடைவதையும் நாம் காண்கின்றோம். சரித்திரத்தில் நிலையாப் புகழ் பெற்றுள்ள அறிஞர்கள், ஓய்வெடுத்துக் கொண்ட நேரம் மிகக் குறைவே. பலர் தங்கள் சொந்த நலனையும் குடும்ப விவகாரங்களையும்கூட அசட்டை செய்து விட்டுத் தங்கள் வேலைக்கே தங்களை அர்ப்பணம் செய்ததுண்டு. அறிஞர்கள் மட்டுமல்ல; உடல் உழைப்புச் செய்யும் தொழிலாளர்கூடத் தங்கள் மனத்திற்குகந்த லட்சியத்திற்காகப் பக்தியுடனும், ஆர்வத்துடனும் வேலை செய்யும்போது, ஓய்வு சிறிதுமில்லாமல் அல்லும் பகலும் உழைக்கின்றனர். ரஷ்யாவில் இத்தகைய விசேஷத் தொழிலாளர் படையொன்று இருக்கிறது. 'எங்கள் ஆதரவு பெற்றுள்ள புது சமூக அமைப்புக்காக வேலை செய்கின்றோம்' என்ற ஆர்வத்தில் அவர்கள் மேலும் மேலும் உழைக்கின்றனர். விடுமுறை தினங்களன்றுகூட அவர்கள் பாடுபடுகின்றனர். உழைப்பதற்கு மனிதனிடம் உள்ள சக்தியோ அபாரமானது. மனித உடலுக்கு மிகச் சிறிது ஓய்வே அவசியம். மேலும்

மனத்திற்கு உகந்த வேலே செய்வதே அதிக உற்சாக மும், ஊக்கமும், சக்தியும் தருகிறது. ஒரு லட்சி யத்திற்காக வேலே செய்யும்போது நமக்கு ஆத்ம திருப்தி ஏற்படுகிறது. சம்பளமில்லாமல் தாமாக விரும்பி முன்வந்து வேலே செய்தவர்களே மிகச் சிறந்த வேலே செய்துள்ளனர். ஆக்கல் வேலேக்கு ஆத்ம தூண்டு தலே முக்கியம்; சம்பளம் ஒரு சில்லறைப் பிரச்னேயே. வேலேயை விரும்பிச் செய்பவர்கள் அதைவிட்டு வரவே மனமில்லாமல் இருப்பார்கள். பனியிலும் வெயிலிலும் தன் ஆராய்ச்சி சாலேயில் வேலே செய்வதையே விஞ்ஞானி விரும்புகின்றுன். தன் சுகத்தைப் பற்றியோ சூழ்நிலேயைப் பற்றியோ அவனுக்குக் கவலேயில்லே. தன்னேயே மறந்து வேலேயில் ஆழ்ந்துவிடுகின்றுன். சீர்திருத்தவாதி சேரியி லேயே வாழ்ந்து சேவை செய்து உயிர்விடவும் சித்தமா யிருக்கின்றுன். மனத்திற்குப் பிடிக்காமல் கட்டாயத் துக்காக, அழுக்கும் அவலமும் நிறைந்த சூழ்நிலேயில் செய் யப்படும் வேலேதான் உடலேயும் மனத்தையும் பாதிக் கின்றது. அத்தகைய வேலேக்கு அதிக ஓய்வு நேரம் அவசியமாகிறது. அவ்வேலேயின் தளேகளிலிருந்து விடுதலே பெற்றுல்தான் மனிதத் தன்மையை மீட்பது சாத்திய மாகும். அதற்காக, ஓய்வுமட்டும் போதாது. களேப்பு ஏற்படுவது வேலே அதிகமாயிருப்பதால் அல்ல; வேலே யின் தன்மையும் சூழ்நிலேயுமே களேப்புக்கும் வெறுப்புக் கும் காரணம். சரியான சூழ்நிலேயில் மனத்திற்குப் பிடித்த வேலே செய்தால், சக்திக்கு மீறிய வேலே யென்ற பிரச்னேயே எழாது.

அத்தியாயம் 4

கிராமக் கைத்தொழில் மூலம் பாமர மக்களுடன் உறவு

ஒரு ஸ்தாபனமோ தொழில் முறையோ ஒரு சிலரைத் தழுவியதாகவோ, பொது மக்கள் அனைவரையும் தழுவியதாகவோ இருக்கக்கூடும். ஜனநாயகப் புரட்சியை ஏற்படுத்துவதற்குக் குறுகிய ஸ்தாபனத்தைவிடப் பொது ஜன ஸ்தாபனமே சிறந்தது என்பதில் ஐயமில்லை. கத்தியையும் குண்டையும் உபயோகித்து இந்திய சுதந்திரத்தைப் பெற்றுவிட முடியுமென்று நம்பிய பயங்கரவாதிகள், தங்களை ஸ்தாபன ரீதியாகப் பலப்படுத்திக்கொள்ள முயன்றனர். ஆனல் அவர்கள் வேலை ரகசிய வேலையாயிருந்ததால், தங்கள் இயக்கத்தில் அனைவரையும் சேர்த்து ஸ்தாபனத்தை விரிவாக்க முடியாமற் போயிற்று. பயங்கரவாதிகள் ஒரு சிறு கூட்டத்தினராகவே இருந்தனர். இக்கூட்டத்தினர் மிகுந்த கட்டுப்பாடுடனும், தியாக சிந்தையுடனும், உறுதியுடனும் போராடினர்; எனினும் இயக்கம் விரிவடைவது சாத்தியமில்லாதிருந்தது. இன்றோ ஒவ்வொரு தேசத்தின் அரசாங்கமும் தன் ராணுவ, ஆயுத பலம் அனைத்தையும் திரட்டிக்கொண்டுள்ளது. இத்தகைய சர்க்காரை ஒரு சிறு பலாத்கார, பயங்கரவாதிகள் கூட்டம் கவிழ்த்துவிட முடியாது. அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டுமானல் ஒரு பொதுஜன ஸ்தாபனம் அவசியம். இதை இந்திய பயங்கரவாதிகளே உணர்ந்துள்ளனர். அவர்கள் இன்னும் பலாத்காரத்தில் நம்புகின்றனர் என்ருலும், பொது ஜன இயக்கத்தின் அவசியத்தை உணர்ந்துவிட்டனர்.

தொழிலாளரும் புரட்சியும்

பொதுஜன இயக்கம் தொடங்குவதென்றால், முதலில் பாமர மக்களுடன் தொடர்பு ஏற்படுத்தி அவர்களைப் பலப்படுத்தவேண்டும். இதைச் சாதிப்பது எப்படி? பாமர மக்களுடன் தொடர்பு ஏற்படுத்துவதற்குச் சிறந்த வழி நிர்மாணத் திட்டமும், குறிப்பாக கதர், குடிசைத் தொழில் திட்டங்களுமே ஆகும் என்பது காந்திஜியின் திடமான நம்பிக்கை. தொழிலாளர், கிருஷிகர் இயக்கங்கள் மூலம்தான் பாமர மக்களுடன் தொடர்பு ஏற்படுத்த முடியுமென்று சமதர்மவாதிகளும் பொதுவுடைமை வாதிகளும் நம்புகின்றனர். இந்த இரண்டு மார்க்கங்களையும் நாம் சற்று ஒப்பிட்டுப் பார்ப்போம்.

இந்தியாவில், பெருவாரியான தொழிலாளர் ஐந்தாறு பெரிய நகரங்களில் குவிந்து கிடக்கின்றனர். இவர்கள் எண்ணிக்கை 10 அல்லது 15 லட்சமிருக்கும். இவர்களுடைய பொருளாதாரக் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இவர்களை ஸ்தாபனரீதியாக ஒன்று திரட்ட முடியும்; அல்லது வர்க்கப் போராட்டம், வர்க்க விரோதம் என்ற அடிப்படையின்பேரில் இவர்களை ஒன்று திரட்ட முடியும். முந்திய வழியில் ஏற்படும் ஸ்தாபனம் உண்மையான தொழிற்சங்க இயக்கத்திற்கு அனுசரணையானது. பிந்தியது, அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் வேலை செய்யக்கூடிய புரட்சிகரமான ஸ்தாபனம். அரசியல் நோக்கங்களுக்காகப் பொருளாதாரக் கோரிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன. இக் கோரிக்கைகளைச் சாக்காகக்கொண்டு அரசியல் வேட்டை நடக்கின்றது. பொருளாதாரக் கொள்கைப்படி நியாயமில்லையெனினும் அரசியல் துறையில் லாபகரமா யிருக்குமென்று கருதப்படும் திட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் இறுதிப் போருக்குப் பாட்டாளி மக்க

ளைப் பக்குவப்படுத்தும் ஒத்திகைகளாகக் கருதப்படுகின்றன. இந் நடவடிக்கைகள் வெற்றி பெருவிடினும், போராட்ட மார்க்கத்தில் பயிற்சி அளிக்கும் அளவிற்கு நன்மை யென்று கருதப்படுகின்றன.

வர்க்கப் போராட்ட சித்தாந்தத்தில் நம்பிக்கை உள்ளவர்களும், அஹிம்ஸைக் கொள்கையில் பூர்ண நம்பிக்கையில்லாதவர்களும் தொழிலாளரை அரசியல் ரீதியில் ஒன்றுபடுத்துவதை ஆதரிப்பார்கள். ஆனுல் காந்திஜியோ, தொழிலாளரின் நியாயமான பொருளாதாரக் கோரிக்கைகளை உடனடியாகத் தீர்க்கும் உண்மையான தொழிற் சங்க முறையை ஆதரிக்கிருர். தொழிற் சங்க வேலையில் சமரச மனப்பான்மையும் சகிப்புத் தன்மையும் மிக முக்கியமானவை. ஓரளவிற்குட்பட்டுத் தொழிலாளரின் கோரிக்கைகளையும், முதலாளியின் நலனையும் ஒருங்கே திருப்தி செய்யமுடியு மென்று நம்புவது தொழிற் சங்கக் கொள்கை. தொழிற் சங்கம் சமரச சம்பாஷணைகள் மூலமாகவும், அவசியம் ஏற்பட்டால், பொருளாதார வேலை நிறுத்தம் மூலமாகவும் இவ்வேலையைச் செய்கிறது. ஆனுல் வர்க்கப் போராட்ட வாதிகளோ, இவ்விரண்டு வர்க்கங்களுக்கு மிடையே தீர்க்க முடியாத விரோதமும், அடிப்படை வேறுபாடுகளும் இருக்கின்றன என்று நம்புகின்றனர். ஆகவே அவர்கள் சமரசத்தில் நம்பவில்லை. சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம், இவ்வர்க்கப் போராட்டத்தையும் தொழிலாளர் இயக்கத்தையும் பலப்படுத்த விரும்புகின்றனர். இதனுல் விரோதம் குறையாமல், வலுக்கிறது. சமரசத் தொழிற்சங்க வேலைகள் 19-ம் நூற்ருண்டுக் கொள்கை யென்றும், அதனுல் ஏற்படும் நிவாரணம் பாட்டாளி மக்களின் புரட்சி வேகத்தையும் போராட்ட உறுதியையும் குறைக்கின்றது என்றும் நம்புகின்றனர். வர்க்கப் போராட்டக் கொள்

கையை உணர்ந்து அதை அனுசரித்து நடக்காத தொழிற் சங்கங்கள், முடிவில் பிற்போக்கடையும் என்பது அவர்கள் வாதம். இத்தகைய சங்கங்களைப் புரட்சி வாதிகள் நம்பக் கூடாதென்றும், ஆனால், தங்களுக்குப் பயன்படக் கூடிய அளவிற்கு மட்டும் அவற்றை அனுமதிக்கலா மென்றும் அவர்கள் கூறுகின்றனர்.

புரட்சியும் கிருஷிகரும்

கிருஷிகர் இயக்கமும் இது போலவே இரண்டு அம்சங்கள் கொண்டது. அவர்களைப் பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் ஒன்று திரட்ட முடியும். எல்லா நிலமும் விவசாயிகளுக்குச் சொந்தம் என்பதே புரட்சி வாதிகளின் கோஷம். ஆனால் இதுவும், கிருஷிகர்களுக்கு ஆசை காட்டி அவர்களை இயக்கத்தில் இழுத்துக் கொள்ள ஓர் உபாயம் என்றுதான் தோன்று கிறது. ஜமீன்தாரி முறையை அடியோடு ஒழித்துவிட்ட பின்பு ரஷ்யாவில் செய்தது போல் நிலத்தைப் பொது வுடைமையாக்கி விட்டுக் கிருஷிகர் பாத்யதையையும் அழித்துவிடக் கூடும்.

இந்தியா போன்ற அடிமை நாட்டில் தொழிலாளர் கிருஷிகர் ஆகியோரின் அரசியல் நடவடிக்கைகள் ஓரள வுக்கு உட்பட்டதாய்த் தான் இருக்க முடியும். அன்னிய ஆதிக்கம் ஆளும் வரை, அதை எதிர்த்து நடக்கும் போராட்டமே நம் அரசியலின் உயிர் நாடியாக இருக் கும். இந்த நிலைமையில், இந்தியர்களுக் குள்ளாகவே பற்பல வர்க்கங்களுக்கிடைப் போர் மூண்டுவிட்டால் அடிப்படையான சுதந்திரப் போராட்டத்திற்குப் பங்க மேற்படும். ஏக காலத்தில் இரண்டு முனைகளில் போராட்டம் நடத்த வேண்டியிருக்கும். இதனால் தேசீயப் போராட்டத்தின் பலம் குறையும். உள் நாட்டுக் குழப்பத்தை அன்னியர்கள் தங்கள் நன்மைக்காகப்

பயன்படுத்திக் கொள்வார்கள். அன்னியனை எதிர்த்து ஒன்றுபட்ட போராட்டத்தை நடத்த வேண்டியவர்களுக்குள்ளாகவே பூசலும் பிளவும் ஏற்படும். வகுப்பு வேற்றுமைகள் தேசியப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் என்பதைச் சமதர்ம வாதிகளும் பொதுவுடைமை வாதிகளும் உணர்கின்றனர். ஆனால் வகுப்பு வேறுபாடுகள் வேறு வகைப்பட்டவை, வர்க்க வேறுபாடுகள் வேறு வகைப்பட்டவை யென்று அவர்கள் வாதாடுகின்றனர். “பொருளாதார நிலைமை தான் உண்மையான அடிப்படை. வகுப்பு வேறுபாடுகள் அனைத்தும் மேல் வாரியானவை. மதம் அல்லது மத ஆர்வம் உண்மையானதல்ல, அது மூட நம்பிக்கையே” என்பது மார்க்ஸீய வாதிகளின் சித்தாந்தம். அது மூட நம்பிக்கையாயிருந்தால்கூட, அது மக்கள் மனத்தில் பதிந்திருக்கும் வரை அவ்வுணர்ச்சியைப் பயன்படுத்தி மக்களை ஆட்டி வைக்க முடியும். இந்த அபாயத்தை எந்த அரசியல் வாதியும் அசட்டை செய்ய முடியாது. பூதங்கள் நடமாடுகின்றன என்பது மூட நம்பிக்கை தான்; ஆனாலும் அந்தப் பயத்தால் பீடிக்கப்பட்டுத் தீங்குற்றவர்கள் பலர். வகுப்புப் பிரச்னையை நாம் சரிவரத் தீர்க்காவிடில் வகுப்பு வெறியையும் மூட நம்பிக்கையையும் அன்னியன் பயன்படுத்துவான். இந்த மூட நம்பிக்கைகளுக்கு நாம் பணிய வேண்டியதில்லை; ஆனால் அவை இருக்கின்றன என்ற உண்மையையே மறந்து விடுவது கண்மூடித்தனமாகும்.

ரஷ்யா யுத்தத்தில் சேர்ந்த பின்பு இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் லீகின் வகுப்பு வாதக் கோரிக்கைகளையும் பூர்த்தி செய்ய வேண்டுமென்று பிரசாரம் செய்ய முன் வந்தனர். லீகின் கோரிக்கைகள் பொருளாதார உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவையல்ல; வகுப்பு வாத மூட நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவையே.

மேலும் லீகின் பிரிவினைத் திட்டம் இந்திய மக்களின் பொருளாதார நலனைப் பாதிக்கும் என்பதிலும் சந்தேகமில்லை. அப்படியிருந்தும் கம்யூனிஸ்ட்கள் லீகின் கோரிக்கைகளை ஆதரித்தது விந்தையே.

ஒரு வகுப்பின் கோரிக்கை நியாயமான அரசியல், பொருளாதார அடிப்படைகளைக் கொண்டதாயினும், அக் கோரிக்கையைப் பூர்த்தி செய்வதற்காக அவ்வகுப்பு உடனே நேரடியான, பலாத்கார நடவடிக்கையில் முனைய வேண்டுமென்று யாரும் சொல்ல மாட்டார்கள். தேசத்தின் பொது நலனை மனத்திற் கொண்டு பல்வேறு வகுப்புக்களும் கட்டுப்பாடுடனும் பொறுமையுடனும் நடக்க வேண்டுமென்றே அனைவரும் கூறுவர். இச் சந்தர்ப்பத்தில் வகுப்புக் கலகம் எழுந்தால் அது அன்னியனுக்குத் தான் சாதகமாயிருக்கும் என்று அவர்கள் எச்சரிப்பார்கள். சுதந்திரமடையும் வரை பல் வேறு வகுப்புக்களும் சமரசமாகவே வேலை செய்ய வேண்டும். ஒரு நேரத்தில், நாம் ஓர் எதிரியை எதிர்த்துத்தான் புரட்சிகரமான போராட்டம் நடத்த முடியும். சட்ட பூர்வமான கிளர்ச்சியாயிருந்தால், அது ஏக காலத்தில் பல முனைகளில் நடக்கலாம். ஆனால் புரட்சி நடவடிக்கை அத்தகையதல்ல.

தொழிலாளர் இயக்கத்தைப் பொறுத்த வரையிலும் நாம் இக் கொள்கையைத் தான் பின்பற்ற வேண்டும். தொழிலாளரைச் சுரண்டலிலிருந்து காப்பாற்றுவதும், அவர்கள் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவளிப்பதும் அவசியம் தான். ஆனால் அதே நேரத்தில் மூன்றும் மனிதன் தன் நன்மைக்காகப் பயன்படுத்திக் கொள்ளும்படி நம்மிடை வர்க்க விரோதம் வளர நாம் இடம் கொடுக்கக்கூடாது. இந்தியாவின் சுதந்திரப் பிரச்னையே

பிரதான, மூலாதாரப் பிரச்னை யென்பதை நாம் உணர வேண்டும். நாம் சமதர்மத் திட்டங்களைப் புகுத்த வேண்டுமானாலும் முதலில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது அவசியம். அந்த அதிகாரம் இன்று முதலாளி வசமோ நிலச்சுவான்தார் வசமோ இல்லை; அன்னிய ஏகாதிபத்தியத்தின் வசமிருக்கிறது.

இன்றுள்ள நிலைமையில் தொழிலாளரையும் விவசாயிகளையும் அரசியல் ரீதியில் ஒன்று திரட்டுவதில் மற்றொரு அபாயமும் இருக்கிறது.

முக்கோணப் போராட்டம்

பாட்டாளி மக்களின் நியாயமான பொருளாதாரக் கோரிக்கைகளுக்கே இடந்தர மனமில்லாத சர்க்கார், சந்தர்ப்பம் வாய்த்தால், கதியற்றிருக்கும் பாட்டாளி மக்களை அடக்குமுறை மூலம் அடியோடு நசுக்கிவிட முயற்சிக்கும். பிரஜைகளின் சொத்து உரிமையைக் காப்பதும், பொதுஜன அமைதியை நிலை நாட்டுவதும் தங்கள் கடமை யென்று சர்க்கார் காரணம் கூறும். ஒரு பொதுவான தேசீய இயக்கம் எல்லா மக்களையும் தழுவும். அது ஒரு தனி வர்க்கத்துக்குமட்டும் சொந்தமல்ல. தேசீயப் பண்பு, கலாசார உயர்வு, சரித்திரத்தின் சிறப்பு அனைத்தும் அந்த இயக்கத்தின் அம்சங்கள் ஆகும். எல்லாவற்றிற்கும் மேலாக அந்த இயக்கம் மக்களின் தன் மதிப்பு உணர்ச்சியையும் தேசீய கௌரவத்தையும் எழுப்புகிறது. அது அனைவருக்கும் பொதுவான லட்சியம். ஆனால் வர்க்க இயக்கங்களோ, அந்தந்த வர்க்க ஆதரவைத்தான் பெறமுடியும். எனவே ஒரு தேசீய இயக்கத்தை அடக்குமுறையால் முறிப்பதைவிட, ஒரு வர்க்க இயக்கத்தை முறிப்பது எளிதாகிறது.

மேலும் ஒரு வர்க்க இயக்கத்தை முறிக்க, அரசாங்கம், மற்றொரு வர்க்கத்தையே பயன்படுத்தும். பிரஜா

உரிமைகளையும் சிறுபான்மைகள் நலனையும் காப்பதென்ற சாக்கில் சர்க்கார் இந்த இயக்கங்களை அடக்கிவிட முடியும். மறைவிலிருந்தே மாய்க்கும் வழியும் வசதியும் அன்னிய சர்க்காருக்கு ஏற்படுகின்றன. இந்திய நாட்டினரைக் கொண்டே இந்தியரை அடக்க, அன்னிய சர்க்கார் சூழ்ச்சி செய்யும்; அதுதான் பிரித்தாளும் சூழ்ச்சியின் தத்துவம். உள் நாட்டு வர்க்கப் பூசல்களால் நாட்டு மக்களின் ஒற்றுமை குலைக்கப்படுகிறது. சர்க்கார் தானுக, நேரடியாக நடவடிக்கை யெடுக்கும் பொழுதாவது ஒரு சில விதிகளையும் சட்டங்களையும் அனுசரித்துப் போக வேண்டியிருக்கும்; ஆனால் மற்ற ஸ்தாபனங்களையோ, தனிப்பட்ட நபர்களையோ, வர்க்கங்களையோ தனது கைக் கருவிகளாக உபயோகித்து வேலை செய்யும்போது, கேள்வி முறையின்றி அடக்குமுறைத் தர்பாரை நடத்தலாம். உதாரணமாக, சட்டமறுப்பு இயக்கங்களின் போது ஜமீன்தாரி பிரதேசங்களில் ஜமீன்தார்கள் எடுத்துக்கொண்ட அடக்குமுறை நடவடிக்கைகள், மற்றப் பிரதேசங்களில் சர்க்கார் எடுத்துக் கொண்டவற்றைவிட மிகக் கடுமையாக இருந்தன. ஜமீன் தாருக்கோ, சர்க்கார் பக்கபலம் இருந்தது. 1932-34 போராட்டத்தின்போது, சர்க்கார் முஸ்லீம் வகுப்பு வாதிகளைத் தனது கைக்கருவிகளாக உபயோகித்தது. காங்கிரஸ் அப்பொழுது பிரிட்டிஷ் சரக்குகளைப் பகிஷ் கரித்து வந்தது. இதைப் பயன்படுத்திக்கொண்டு, முஸ் லீம்கள், வியாபாரத்தைத் தங்கள் ஏகபோகமாக்க முயற் சித்தனர். காங்கிரஸின் கொள்கைக்கு ஆதரவாயிருந்த சமூகங்களும் வகுப்புக்களும் இதனுல் நஷ்டமடைய லாயின. அமைதியான ஹர்த்தால்களும், மறியல்களும் நடந்தபோதும்கூட, வகுப்புவாதிகளால் அவை வகுப்புக் கலவரங்களுக்குப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறு

பிரிட்டிஷ் சர்க்கார், முஸ்லீம் வகுப்புவாதிகளைத் தூண்டி விட்டுக் காங்கிரஸின் அன்னியச் சரக்குப் பகிஷ்கார இயக்கத்தை முறிக்க முயற்சித்தது.

இன்று, லீகின் வகுப்புவாதக் கொள்கை காங்கிர ஸின் சட்டமறுப்புக் கொள்கையில் குறுக்கிடும் விதம் அனைவரும் அறிந்ததே. லீகின் கொள்கையினால் அர சியல் நிலைமையில் மேலும் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு அறைகூவும் காங்கிரஸ், லீகை எதிர்த்துப் போராடத் தயங்குவதற்கு ஒரே ஒரு காரணம்தானுண்டு; அது உள் நாட்டு யுத்தம் ஏற்படக் கூடாது என்ற கவலைதான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் தைக் கண்டே மலைக்காத காங்கிரஸ், லீகைக் கண்டு அஞ்சிவிடப் போவதில்லை. நியாயமாகப் பார்த்தால், சர்க்காருடனே, ஹிந்து மகாசபையுடனேதான் லீக் சண்டை போடக்கூடும். ஆனால் வகுப்புவாத ஸ்தாபன மல்லாத இந்திய தேசீய காங்கிரஸுடன்தான் லீக் சண்டை போடுகிறது. அச்சண்டை எவ்வளவு அநியாய மானதாயிருந்தாலும், அதை முதலில் சமாளித்தால்தான் நாம் பிரிட்டனுடன் வெற்றிகரமாகப் போராட முடியும்.

சுதேச சமஸ்தானங்களில், சமஸ்தானாதிபதிகளை எதிர்த்துக் காங்கிரஸ் ஏதேனும் இயக்கம் தொடங்கும் போதும் இதே கஷ்டம்தான் எழுகிறது. சமஸ்தானாதி பதிகளுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் ரகசியமாகவும் பகிரங்க மாகவும் உதவி செய்கின்றது. சுதேச மன்னர்களின் அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு, தான் எவ்விதத் திலும் பொறுப்பில்லை என்று பிரிட்டிஷ் இந்திய சர்க்கார் முடிவில் கூறிவிடுகின்றது. ராஜ்கோட் போராட்டத் தில், இந்திய சர்க்காரின் அரசியல் இலாகா செய்த சூழ்ச்சி அனைவருக்கும் தெரிந்ததே. அதன் உதவியில்லாவிடில் அம்மன்னரின் தந்திரம் எதுவும் பலித்திருக்காது.

ஆகவே, தேசமக்கள் அனைவரும் ஒன்றுகூடித் தங்கள் புரட்சி சக்திகள் அனைத்தையும் ஒரு முனையில் ஒன்று திரட்டி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதே வெற்றிக்கு வழி.

மேலும், ஓர் அகில இந்திய இயக்கம் நடக்கும்போது, மற்ற சிறு சில்லறைப் பிரச்னைகள் நம் கவனத்தைக் கலைத்து நம் ஒற்றுமையைக் குலைப்பது நல்லதல்ல. இத்தகைய பிரச்னைகள் நம் போராட்டத்திற்கு முட்டுக்கட்டைகளாகத்தான் முடியும். உண்மையான பொருளாதாரக் கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியது அவசியம்தான்; ஆனால் அவை பொருளாதாரத் துறையை மீறிச் செல்லக்கூடாது. சமுதாய அமைப்பையே மாற்றுவதில் முனைந்துள்ள புரட்சிவாதி, மற்ற பிரச்னைகளைப் பற்றிக் கவனிக்கமுடியாது. அவர் சற்றுப் பொறுமையுடனிருந்து உள்நாட்டுப் பிரச்னைகளைத் தற்போதைக்குச் சகித்துக்கொண் டிருக்க வேண்டியதுதான். சுதந்திரம் அடைந்தவுடன், கதிரவனைக் கண்ட இருள் போல் இந்த அநீதிகள் மறைந்துவிடுமென்ற நம்பிக்கை அவருக்கு இருக்கவேண்டும். நமக்கு மாகாண சுயாட்சியின் கீழ்க் கிடைத்த குறுகிய அதிகாரங்களைக் கொண்டே வெகுகாலம் நிலைத்திருந்த பல அநீதிகளை நம்மால் நீக்க முடிந்தது. சுதந்திரத்தால் மற்ற பிரச்னைகள் தீராவிடில், அதன் பின்னர், தெளிவான பிரச்னைகளைக் கொண்டு வர்க்க அடிப்படையில் போராட்டம் நடத்தலாம். இன்றே, நாம் நம்மிடையே உள்ள வர்க்க வேறுபாடுகளை அதிகரிக்காமல் சுதந்திர இயக்கத்தில் அனைவரும் சேர்ந்து அதை விரிவாக்கவேண்டும். காந்திஜியின் தலைமையின் கீழ்க் காங்கிரஸ் இதைத்தான் செய்து வந்துள்ளது.

ஒரு வர்க்கம் மற்றொன்றை மிகவும் அநியாயமாக நடத்துவதை எதிர்த்து உடனே போராடுவது சில சமயங்

களில் அவசியமாக இருக்கலாம். அத்தகைய போராட்டங்கள் தங்கள் உடனடியான நோக்கத்திற்குப் புறம்பாகச் செல்லாதபடி கவனித்துக் கொள்ளவேண்டும். பொதுவான தேசீயப் போராட்டம் நடந்துகொண்டிருக்கும் நேரத்தில் சில்லறைப் போராட்டம் குறுக்கிடக்கூடாது. இரு நாடுகளுக்குள் போர் நடக்கும்போது, இந்த விதி கண்டிப்பாகப் பின்பற்றப்படுகிறது. யுத்த காலத்தில் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டால், அவற்றை அடக்கக் கடுமையான அடக்குமுறை நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தொழிலாளரும், தேசாபிமான உணர்ச்சிகொண்டு யுத்த காலத்தில் நேரடியான நடவடிக்கையில் இறங்குவதில்லை. அவர்களும் தேசத்திற்குப் பொதுவான தற்காப்புப் பிரச்னையில் ஒன்றுகூடி ஒத்துழைப்பார்கள். அவர்களுக்கும் சர்க்காருக்கும் கொள்கை வேறுபாடு ஏற்பட்டாலும்கூட அவர்கள் யுத்த நிலைமையை உணர்ந்து, அதற்கு அனுசரணையாகக் கட்டுப்பட்டு நடக்கின்றனர். அத்தகைய காலங்களில், தொழிலாளர் நேரடியான நடவடிக்கையெடுத்தால், அது தேச நலனுக்கு விரோதம் என்ற காரணத்தால் அதைச் சர்க்கார் அடக்கி விடும் என்பதையும் அவர்கள் அறிவார்கள். ஒரு சாத்வீக தேசீயப் போராட்டத்தின் போதோ, தொழிலாளர் இன்னும் அதிகக் கவனமாக இருக்கவேண்டும். ஒரு பலாத்காரப் போராட்டத்தின் போது சில்லறைப் பிரச்னைகளை எழுப்புவதனால் ஏற்படும் அபாயங்கள் வெளிப்படை. சாத்வீகப் போராட்டத்தின் போது தவறான கொள்கையைப் பின்பற்றுவதால் ஏற்படும் அபாயங்கள் உடனடியாகவும் வெளிப்படையாகவும் தோன்றமாட்டா. ஆயினும் அவற்றை நாம் தடுப்பது மிகவும் அவசியமாகும்.

ஒத்துழையாமை இயக்கம் நடக்கும் நேரத்தில் ஒரு வேலை நிறுத்தம் நடந்தால், அது சர்க்காரைப் பாதிக்காது. அதிலும் குறிப்பாக, இந்தியாவில் இருப்பதுபோல் அன்னிய சர்க்காராக இருந்தால் அது எள்ளளவும் பாதிக்கப் படாது. யுத்தத்திற்கு முன்பு இந்திய சர்க்கார் தனக்குத் தேவையானவற்றை யெல்லாம் இங்கிலாந்திலிருந்து தருவித்துக்கொண்டது. ஆகையால் இந்தியாவில் ஏற்படும் வேலை நிறுத்தத்தால் அதற்கு அவ்வளவாக இடைஞ்சல் ஏற்படமுடியாது. சர்க்கார் உள் நாட்டு உற்பத்தியை நம்பியிருந்தால்தான் வேலை நிறுத்தம் அதைப் பாதிக்கக் கூடும். உலகெங்கும் யுத்தம் நடந்துகொண் டிருந்தால் தான் இத்தகைய நிலைமை ஏற்படக்கூடும்.

ஏகாதிபத்தியத்தின் தாசர்கள்: முதலாளிகள்

"ஏகாதிபத்தியமும் அதற்குப் பக்கபலமாக இருக்கும் முதலாளித்துவமும் ஒன்றை யொன்று நம்பி வாழ்கின்றவை. ஆகையால் இரண்டையும் ஒன்ருகத்தான் தாக்கவேண்டும்" என்று சில நண்பர்கள் வாதாடுகின்ருர்கள். இது தர்க்க ரீதியில் சரியாகத்தான் தோன்றுகிறது. ஆனல் நம் எதிரிகளை ஒவ்வொருவராகத் தொலைக்க வேண்டுமென்பதுதான் விவேகத்திற்கும் நடைமுறைக்கும் ஏற்றதாக இருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குப் பக்கபலமாக இருப்பவர்கள் யார்? அவர்களுக்குப் பிரிட்டன்மீது எள்ளளவும் காதல் இல்லை. தங்கள் சுயநலனைக் கருதியோ, அன்றிப் பயத்தினலோ தான், அவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைக்கின்றனர். அவர்களுக்கு உண்மையில் இந்தியாவின் மீது விரோதமில்லை. அத்தகையோரை நாம் நமது பக்கமாகத் திருப்பமுடியும். அவர்கள் விரோதத்தைச் சம்பாதித்துக்கொள்வது உசிதமல்ல. இந்திய முதலாளித்

துவம் தன் நலனுக்காகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நம்பி நிற்கிறதா என்பது இன்னும் தெளிவாகவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது சுங்கவரிக் கொள்கைகளாலும், நிதி, ரயில்வே, லேவாதேவிக் கொள்கைகளாலும், பிற பொதுக் கொள்கைகளாலும் பலமுறை இந்திய முதலாளிகளுக்குத் தீங்கு இழைத்துள்ளது. தேசீய இயக்கமோ, தனது சுதேசிக் கொள்கையால் இந்தியத் தொழில்களுக்கு உதவிபுரிந்துள்ளது. அவ்வா றிருந்தும் இந்திய முதலாளிகள் தேசீய இயக்கத்திற்கு ஆதரவாக இல்லாதது ஏன்? இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்வதால், முதலாளிகள் சொத்துக்கு அதிக நஷ்டம் ஏற்படும். அவர்கள் பொருளாதார நிலைமையில் குழப்பம் ஏற்படக்கூடும். தேசீய லேவாதேவியும் தொழில் முறையும் தேசீய சர்க்கார் இல்லாததால் பலவகைகளில் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே முதலாளிகள் எப்பொழுதும் சர்க்காருக்குப் பயந்தே நடக்கின்றனர். மற்றொரு காரணம் என்னவென்றால், தேசீய இயக்கத்தினால் பாமர மக்களிடை அரசியல் உணர்வும் எழுச்சியும் பரவுகின்றன. அவர்கள் தங்கள் உரிமைகளையும் தங்கள் பலத்தையும் உணர்கின்றனர். இதனால் முதலாளி வர்க்கத்தினருக்குப் பயம் ஏற்படுகிறது. இவர்கள் எப்பொழுதுமே தயங்கி ஊசலாடிக்கொண் டிருக்கிறார்கள். இரண்டு பக்கங்களிலும் தலையைக் காட்டித் தாஜா செய்யப் பார்ப்பார்கள். பெரிய போராட்டம் எதுவும் நடந்தால், அவர்கள் சாதாரணமாக நடுநிலைமைதான் வகிப்பதுண்டு. ஆயினும், பல முதலாளிகள் தேசப்பற்றின் தூண்டுதலால் தனிப்பட்ட முறையில் தேசீய இயக்கத்திற்கு உதவி செய்கின்றனர். ஆகவே, முதலாளிகள் அனைவர்மீதும் நாம் விரோதம் கொள்வது உசிதமாகாது.

மேலும் இங்கிலாந்தில் இருப்பதுபோல் இந்தியாவில் முதலாளி வர்க்கம் அவ்வளவு கட்டுப்பாடாகவும், வர்க்க உணர்ச்சி கொண்டதாகவும் இல்லை. தேசீய இயக்கத்தைச் சுற்றியுள்ள ஜோதி அனைவரையும் கவர்கிறது. காங்கிரஸுக்கோ, காந்திஜிக்கோ, அல்லது பொதுஜன ஊழியத்திற்காக மற்றத் தலைவர்களிடமோ பணம் கொடுப்பது ஒருவிதத் தர்ம காரியம் என்று கருதப்படுகிறது. பொதுஜன சேவைக்காகப் பணம் தரும் பணக்காரர்கள் அந்த சேவையின் நோக்கங்கள் பற்றிக்கூடக் கவலைப்படுவதில்லை. எந்தப் பொதுக் காரியமென்றாலும்—நல்லதோ, கெட்டதோ—அதற்குப் பணம் தருவதென்றால், அவர்களுக்கு விருப்பம்தான். பணக்கார வர்க்கம் இந்நிலையில் இருக்கும்போது அதை நாம் விரோதித்துக் கொள்வதால் பலன் என்ன ?

ஜமீன்தார்களின் நிலைமை சற்று வித்தியாசமானது. அவர்கள் ஜீவிதமே அன்னிய சர்க்காரை நம்பி நிற்கிறது.

ஜமீன்தார்கள்

ஆகவே அவர்கள் அச்சர்க்காரின் தூண்களாக இருக்கின்றனர். ஆனால், அவர்கள் வர்க்கம் சீரழிவும் பலவீனமும் அடைந்துள்ளது. அவர்களால் சர்க்காருக்கு அவ்வளவு உதவி கிடையாது. அதுமட்டு மல்ல, விவசாயிகளைச் சுரண்டுவதை எந்த சர்க்காரும் ஓரளவிற்குத்தான் அனுமதிக்க முடியும். அந்த எல்லை இந்தியாவில் மீறப்பட்டு விட்டது. விவசாயிகளின் பொருளாதார நிலைமை எந்த அளவிற்குச் சீரழிகிறதோ, அந்த அளவிற்கு அவர்களிடமிருந்து சர்க்காருக்குக் கிடைக்கும் வருவாயும் குறைகிறது. மேலும் நாட்டில் பெருவாரியாகவுள்ள விவசாயிகள், ஏழ்மை நிலையின் காரணமாகச் சரக்குகள் வாங்க முடியாமல் போய்விட்டால் பிரிட்டிஷ் வியாபாரம்தான் நஷ்டமடையும். ஆகவே ஜமீன்தார்கள் தங்கள்

இச்சைப்படி கட்டுக்கடங்காத வழியில் நடந்து வருவது; பிரிட்டிஷ் நலன்களுக்கே நல்லதல்ல. அதனால் அனாவசியமான அதிருப்தி ஏற்படும். ஜமீன்தார்கள் தங்களை ஆதரிப்பதால் தங்களுக்குத்தான் நஷ்டம் என்பதைச் சர்க்கார் கண்டுவிடும். ஜமீன்தாரி ஒழிப்புப் பற்றி, அன்னிய சர்க்கார்கூட வருந்தாத நிலை வந்துவிட்டது. பொருளாதாரக் காரணங்கள் இன்னும் இப்போக்கைப் பலப்படுத்துகின்றன. இதனால்தான், காங்கிரஸ் சர்க்கார்கள் தங்கள் நில உரிமைக் கொள்கையை அமலுக்குக் கொண்டுவந்தபோது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அதற்கு அவ்வளவு இடைஞ்சல் செய்யவில்லை. சட்டப்படி இதில் தலையிட வைஸ்ராய்க்கும், கவர்னருக்கும் அதிகாரமிருந்தும் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. காங்கிரஸ் சர்க்கார்கள் ராஜிநாமா செய்த பின்புகூட, அவர்கள் நிறைவேற்றிய நில உரிமைச் சட்டங்களைக் கவர்னர்கள் சட்டபூர்வமாக்கி ஊர்ஜிதம் செய்தனர். இந்தியாவில் தாங்கள் காப்பாற்றவேண்டிய உரிமைகள் பல உண்டு என்று பிரிட்டிஷார் சொல்லும்போதுகூட, அவர்கள் ஜமீன்தார்கள் நலனைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை. இதனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின்மீது ஜமீன்தார்களுக்குக் கோபம் ஏற்பட்டுள்ளது. அது தங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டது என்று அவர்கள் குறை கூறுகின்றனர்.

சுதேச மன்னர் பிரச்னை

சுதேச மன்னர்கள் பிரச்னையே ஒரு தனிப் பிரச்னை. அவர்கள் பிரிட்டிஷ் சர்க்காரின் சிருஷ்டிகள். நடைமுறையில், அவர்களும் பிரிட்டிஷ் சர்க்காரும் ஒன்றுதான். அதன் தயவில்லாமல் தங்களுக்கு வாழ்வில்லையென்பதைச் சுதேச மன்னர்கள் நன்கு உணர்வார்கள். அம்மன்னர்களால்தான் இந்தியாவின் மூன்றில் ஒரு பாகம் இன்னும் பிற்போக்கான, சீர்கேடான நிலைமையில்

இருக்கிறது என்பதும் பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தெரியும். தாங்கள் ஆளும் பிரதேசம் மன்னர்கள் ஆளும் பிரதேசத்தைவிட எவ்வளவோ முன்னேறியுள்ளது என்று பிரிட்டிஷ் சர்க்கார் பெருமையுடன் சொல்லிக் கொள்கின்றது. யுத்தகாலத்திலோ, உள் நாட்டில் கொந்தளிப்பு ஏற்படும்போதோ சமஸ்தானங்களின் உதவியைச் சர்க்கார் பெற்றுத் தங்கள் அடக்குமுறைத் தர்பாரை மேலும் தீவிரமாக நடத்துகின்றது. தங்கு தடையின்றி சமஸ்தானங்களில் ராணுவத்திற்கு ஆள் சேர்ப்பு நடந்து வருகிறது. இருந்தும்கூட, ஜமீன்தார்களைப் போல் சுதேச மன்னர்களாலும், உதவிக்குப் பதில் உபத்திரவம் தான் ஏற்படுகிறது என்று பிரிட்டிஷார் நினைக்கும் காலம் ஒன்று வரக்கூடும். ஆனால் பிரிட்டன் அதிகாரத்தை விட்டுக் கொடுக்கச் சம்மதிக்கும்போது, அல்லது, விட்டுக் கொடுக்கும் நிர்ப்பந்தம் நேரிடும்போது தான் இந் நிலைமை ஏற்படும்.

சுதேச மன்னர் பிரச்னையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது இந்திய சர்க்காரின் அரசியல் இலாகா. இந்த இலாகாதான் மற்றவைகளையெல்லாம் விட மிகக் கண்டிப்பும் கட்டுப்பாடும் கயமைத் தனமும் நிறைந்தது. மற்ற நாடுகளில் உள்ள சர்க்காரின் அயல் நாட்டு இலாகாவை ஒத்தது இது. ஜனநாயக நாடுகளில்கூட, அயல் நாட்டு இலாகாக்களை அனுசரித்து நடக்காத மந்திரிகளும், அதைச் சீர்திருத்த முயன்ற மந்திரிகளும் அடைந்துள்ள கஷ்ட நஷ்டங்கள் பல. இந்தியாவிலோ, ஒரு குறிப்பிட்ட வரம்புக்கு மீறி அரசியல் இலாகாவின் வேலையில், நல்லெண்ணம் கொண்ட ஒரு வைஸ்ராய் தலையிட முயற்சித்தால், அவர் கௌரவத்துக்குத் தான் பங்கம் நேரிடும். சுதேச சமஸ்தானங்களின் செல்வமும் செல்வாக்கும் இந்த இலாகாவிற்கு ஒத்தாசை செய்ய

எப்பொழுதும் தயாராயிருக்கின்றன. இந்தச் செல்வாக்கு இந்தியாவில் மட்டுமல்ல, இங்கிலாந்திலும் பலன் படும். சமஸ்தானங்களின் அரசியல் உரிமைகளுக்காகப் போராடும் சீர்திருத்த வாதி இவ் வுண்மைகளை மறந்துவிடக்கூடாது. மறந்தால், எந்த இடத்திலிருந்து தனக்கு அபாயம் வந்தது என்பதுகூடத் தெரியாமல் அவர் சிக்கிக் கொள்வார். ராஜகோட்டையில் நடந்த துர்ப்பாக்கிய சம்பவங்கள் இதற்குச் சிறந்த உதாரணம்.

இதைத் தவிர, சமஸ்தானங்களுக் குள்ளாகவே பல விவகாரங்களும், தர்பாருக்குள்ளாகவே உள்ள சிக்கல்களும் நிலைமையை மேலும் கடினமாக்குகின்றன. சிகார் கிளர்ச்சி இதற்கு ஓர் உதாரணம். சில காங்கிரஸ் வாதிகள் விஷயம் தெரியாமல் இதில் சிக்கி ஏமாந்து விட்டனர். பிரிட்டிஷ் இந்தியாவைவிட சுதேச சமஸ்தானங்களில் வகுப்புப் பிரச்னை தன் கொடிய சொரூபத்தைக் காட்ட முடியும். ஆகவே, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அடியோடு ஒழித்த பின்பு தான் சமஸ்தானங்கள் பிரச்னையைத் திருப்திகரமாகத் தீர்க்க முடியும். ஆனால் அதுவரை சமஸ்தான மக்களை அசட்டை செய்யவேண்டுமென்று அர்த்தமில்லை. அவர்களுக்கு எல்லா விதங்களிலும் நாம் உதவி செய்ய வேண்டும். அவர்கள் பிரஜா உரிமைப் போராட்டங்களுக்கு நாம் அமைதியாக ஆதரவளிக்க வேண்டும். சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்குவதைத் தவிர மற்ற எல்லா வழிகளிலும் காங்கிரஸ் உதவி செய்யவேண்டும். அந்த இயக்கத்தைத் தொடங்கும் பொறுப்பு, சமஸ்தான மக்களைச் சேர்ந்ததே. காங்கிரஸ் வாதிகள், தனிப்பட்ட முறையில் அந்த இயக்கத்தில் சேரலாம்; ஆனால் காங்கிரஸ் ஸ்தாபனம் அதில் பங்கெடுத்துக் கொள்ளமுடியாது. இத்தகைய இடைஞ்சல்களினால் முதலாளி, ஜமீன்தார், சுதேச

மன்னர் பிரச்னைகளைப் பொறுத்தவரை, நாம் மிகவும் ஜாக்கிரதையாகவும் மிகுந்த கட்டுப்பாட்டுடனும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

தொழிலாளரையும், கிருஷிகர்களையும், சமஸ்தான மக்களையுங் காங்கிரஸ் மூலமாகப் புரட்சிப் பாதையில் ஒன்று திரட்டினால் தான் பொதுஜன நடவடிக்கையெடுக்க முடியுமென்று சமதர்ம வாதிகளும், பொதுவுடைமை வாதிகளும் வாதாடுவதால்தான் இப்பிரச்னை பற்றி இவ்வளவு விரிவாக இங்கு ஆராய்ந்துள்ளேன்.

எப்படி நாம் ஒரு வகுப்பையோ, ஒரு சமூகத்தையோ தேசியப் போராட்டத்திலிருந்து விலக்கி ஒதுக்கிவிட முடியாதோ, அதுபோலவே முதலாளி ஜமீன்தார் வர்க்கங்களையும் நாம் விலக்கிவிட முடியாது. ஒரு வகுப்பைச் சேர்ந்த பலர் தேச நலனுக்கு விரோதமாக நடந்து வரலாம். ஆனால் அக் காரணத்தைக்கொண்டு நாம் ஒரு வகுப்பையே தேசத் துரோக வகுப்பு என்று ஒதுக்கிவிட முடியாது. முஸ்லீம் லீக், சர்க்காரின் தயவைப் பெறுவதோடல்லாமல், முஸ்லீம் பாமர மக்களின் பெருவாரியான ஆதரவையும் பெறுகிறதென்று நமக்குத் தெரியும். ஆயினும் நாம் லீகையும் முஸ்லீம் சமூகத்தையும் வேறுபடுத்தித்தான் பேசவேண்டி யிருக்கிறது. முஸ்லீம் சமூகம் முழுவதும் தேசத் துரோக சமூகம் என்று நாம் கூறிவிட முடியாது. அவ்வாறு செய்தால், உண்மையில் தேசப்பற்றுக் கொண்டு தேசத்திற்காகப் போராடித் தியாகங்கள் செய்துள்ள பல முஸ்லீம்களுக்கு நாம் தீங்கிழைத்தவ ராவோம். முஸ்லீம் சமூகம் முழுவதையும் குறைகூறுவதால், அவர்கள் நிலைமையை நாம் பலப்படுத்துவதற்குப் பதிலாக மோசமாக்கி விடுவோம். அதுபோலவே ஐக்கிய மாகாணங்களிலும், பீஹாரிலும், வங்காளத்திலும், மற்ற இடங்களிலும் ஒரு சில முத

லாளிகள் தேசப்பற்றின் தூண்டுதலால் தேசீய இயக்கத்திற்கு எப்பொழுதும் உதவி செய்து வந்துள்ளனர். அவர்களை யெல்லாம் அசட்டை செய்துவிட்டு, நாம் ஒரு வர்க்கம் முழுவதையும் கண்டனம் செய்வது நேர்மை யல்ல. வகுப்புப் பிரச்னையைப் போலவே ஜமீன்தாரி முதலாளி பிரச்னையையும் நாம் ஜாக்கிரதையாகச் சமாளிக்க வேண்டும். அவர்கள் செய்யும் அநீதிகளை நாம் சகித்துக்கொண் டிருக்கக் கூடாது என்பது உண்மை தான். ஆனால் வர்க்கப் போராட்டத்தையும், சுதந்திரப் போராட்டத்தையும், ஒன்றோடொன்றைச் சேர்த்து, இரண்டையும் குழப்பிவிடக் கூடாது. தேசீயப் பிரச்னையில் நாம் செலுத்தும் கவனம் கலைக்கப்படாமலிருக்கவேண்டும். அதுவே அடிப்படைப் பிரச்னை. வர்க்க அநீதிகளை எதிர்த்து, உடனடியான போராட்டம் தொடங்குவது அத்தியாவசிய மாகிவிட்டால், மிகுந்த கவனத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நாம் எல்லை மீறுமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்; ஆனால் எந்த நடவடிக்கையையும் காங்கிரஸின் பெயரால் எடுக்கக் கூடாது.

இது விஷயத்தில் காந்திஜியின் புத்திமதியையும், உதாரணத்தையும் பின்பற்றுவதே சிறந்தது. சம்பரானில், ஐரோப்பியத் தோட்ட முதலாளிகளின் அநீதியை எதிர்த்துப் போராட அவர் கிருஷிகர்களை ஒன்று திரட்டினர். அப்போராட்டத்தில் பண்டித மதன் மோஹன் மாளவியாவும், மற்றத் தலைவர்களும் காங்கிரஸின் சார்பில் உதவி செய்ய முன்வந்தபோது காந்திஜி அதை ஏற்றுக் கொள்ள மறுத்தார். காங்கிரஸின் ஆத்மீக ஆதரவு இருந்தால் போதும் என்று கூறி விட்டார். பல தொழிலாளர், கிருஷிகர் போராட்டங்களைக் காந்திஜி நடத்தியுள்ளார். ஆனல் அவை பொரு

ளாதாரத் துறைக்குப் புறம்பாகச் செல்லாமலும் அடிப் படை அரசியல் பிரச்னையைப் பாதிக்காத படியும் அவர் கவனித்துக் கொள்கிறார். அப் போராட்டத்தை அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுத்துவது சத்தியத்திற்கும், அஹிம்ஸைக் கொள்கைக்கும் விரோதம் என்பது மட்டு மல்ல; நடை முறையிலும் அது உசிதமல்லவென்றும், அதனால் தேசீயப் போராட்டத்திற்கும், அக் குறிப்பிட்ட பொருளாதாரப் பிரச்னைக்குமே பங்கம் ஏற்படும் என் றும் அவர் நம்புகிறார். நாம் தொழிலாளருக்கு ஆதரவு காட்டுவது தவறல்ல; நாம் போராடிப் பெறும் சுய ராஜ்யம் பாமர மக்கள் சுயராஜ்யம் என்று பிரகடனம் செய்வதில் தவறில்லை. ஆனால் வர்க்க, அல்லது வகுப்புப் பிரச்னைகளில் தேசீயப் போராட்டம் மூழ்கடிக்கப்படு வதை நாம் அனுமதிக்கக் கூடாது.

தொழிலாளர், கிருஷிகர் இயக்கங்களை அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்கு இன்று இந்தியாவில் பல தடைகள் உள்ளன.

தொழிலாளர் இயக்கமும் அதன் எல்லைகளும்

நமது தொழிலாளர் வர்க்கத்தின் எண் ணிக்கை தேசத்தின் மொத்த ஜனத் தொகையில் ஒரு சிறு பகுதியே. ஆறு, ஏழு பெரிய நகரங்களில் இவர்கள் அடை பட்டிருக்கின்றனர். மேல் நாடுகளில், தேச வாழ்வின் கேந்திர ஸ்தானங்கள் இந் நகரங்கள் தான். நம் நாட்டில் அவ்வாறில்லை. இயந்திரத் தொழி லில் மிகவும் முன்னேறியுள்ள இங்கிலாந்து அல்லது பிரான்ஸில், லண்டனையோ பாரிஸையோ கைப்பற்றி விட்டால், அவ்விரு நாடுகளின் வாழ்வையே குலைத்துவிட முடியும். இயந்திரத் தொழிலில் முன்னேறியுள்ள மற்ற நாடுகள் விஷயமும் அவ்வாறுதான். நாட்டின் கேந்திர ஸ்தானங்களான ஒரு சில நகரங்களைக் கைப்பற்றி விட்

டால் பொருளாதார வாழ்வனைத்தையும் குலைத்து விடலாம். ஒரு நாட்டின் சர்க்கார், உள் நாட்டுக் குழப்பத்தினாலோ வெளி நாட்டு யுத்தத்தில் அடைந்த தோல்வியினாலோ சீர் கேடுற்று, ராணுவமும் கலகம் செய்யும் நிலையிலிருந்தால்தான், தொழிலாளர் அல்லது கிருஷிகர் புரட்சி செய்து நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும். மற்ற நேரங்களில் இக்கிளர்ச்சியால் மட்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவது அசாத்தியமே.

இந்தியாவிலோ, இயந்திரத் தொழிலாளர் நாட்டின் ஜனத் தொகையில் மிகச் சிறிய பகுதியினரே. ஆலைகள் உள்ள ஒரு சில நகரங்களைக் கைப்பற்றுவதால் இந்திய தேசீயப் பொருளாதாரமோ, சர்க்காரோ கவிழ்ந்து விடாது; சிறிது பரபரப்பு இருக்கத்தான் செய்யும்; ஆனால் அமைப்பு ஒன்றும் கவிழ்ந்து விடாது. இந்திய கிராமம் இன்று எவ்வளவோ சீரழிந்துள்ள போதும், கிராம வாழ்க்கை தனியாகவும், சுயேச்சையாகவும், சுய தேவைப் பூர்த்தி முறையிலும் தான் நடந்து வருகிறது. இந்திய ராணுவத்துடன் நாம் நேரடியான தொடர்பு வைத்துக் கொள்வதற்கும் இடமில்லை. அரசியல் சீர் திருத்த வாதி அக்கோட்டைக்குள் புகுவதே கடினம். ராணுவத்தினருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. பட்டாளத்தினர் வசிப்பது கிராமத்தில் தான். ராணுவத்திற்கு ஆள் சேர்க்கப்படுவதும் அங்கு தான். அந்த கிராமத்தின்மூலம் தான் நாம் ராணுவத்தினருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

இந்தியாவில் ஒரு வெற்றிகரமான புரட்சி நடத்துவதென்றால், ஆலைகள் உள்ள ஒரு சில நகரங்களைக் கைப்பற்றுவது மட்டும் போதாது; கிராம மக்களை ஒன்று திரட்டிப் பலப்படுத்துவது அவசியம்.

கிருஷிகர் இயக்கமும் அதன் எல்லைகளும்

வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் தாங்கள் வகுத்துள்ள திட்டத்தின்படி கிராம மக்களை ஒன்று திரட்ட முடியுமென்று கம்யூனிஸ்ட்களும், கிஸான் சபைக்காரர்களும் கூறி வருகின்றனர். பெரிய பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், ஜமீன்தார்களை எதிர்த்துக் கிளர்ச்சிகள் ஆகியவை அவர்களின் வேலைத் திட்டங்கள். இக்கிளர்ச்சிகள் மறைமுகமாக அரசாங்கத்தை எதிர்த்து நடப்பவையென்று அவர்கள் வியாக்கியானம் செய்யக்கூடும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தாஸர்களான ஜமீன்தார்களையும், முதலாளிகளையும் தாக்குவது ஏகாதிபத்தியத்தையே தாக்குவதாகும் என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் தொழிலாளரையும் கிருஷிகரையும் வர்க்க ரீதியாக ஒன்று திரட்டுவதில் நாம் முனைந்து விட்டால், தேசியப் போராட்டம் தடைப்படும் என்பதை இந்த நண்பர்கள் மறந்து விடுகின்றனர். பொருளாதார அல்லது வகுப்பு வேறுபாடுகளையே நாம் மிகைப்படுத்திக் கொண்டிருந்தால், போராட்டத்தின் அடிப்படையே மாறி விடுகிறது. ஏற்கெனவே, விவசாயி தன்னுடைய அன்றாட அல்லல்களிலும் பிரச்னைகளிலும் மூழ்கிக் கிடக்கின்றான். அப்பிரச்னைகளையே பிரதானமாக்கி அவற்றின் அடிப்படையில் அவன் புரட்சி சக்தியைத் திரட்ட முயல்வது தேசீய விடுதலைக்கு வழியாகாது. வகுப்பு வர்க்க வேறுபாடுகளை மறக்கச் செய்து, மக்களுக்கு ஓர் ஐக்ய உணர்ச்சியையும் லட்சிய பக்தியையும் ஊட்டுவதே தேசீய இயக்கம். தேசீய சமூகம் என்ற லட்சியம் மற்றப் பிரிவுகளுக்கும், பிளவுகளுக்கும், பூசல்களுக்கும் மேம்பட்டது. இன்றுகூட வர்க்க லட்சியத்தைவிடத் தேசீய லட்சியமே மேம்பட்டது. "உலகத் தொழிலாளரே,

ஒன்றுபடுங்கள்", என்று கோஷமிடலாம். ஆனால் ஒரு தேசத் தொழிலாளர் தங்கள் தேசிய உணர்ச்சியைத் தியாகம் செய்துவிட்டு மற்றொரு தேசத் தொழிலாள ருடன் சேரத் தயாராக இல்லை. "உலகத் தொழிலாளர்" என்ற ஓர் ஐக்யமோ, கூட்டோ உண்மையில் கிடையாது. அத்தகைய ஐக்ய உணர்ச்சி இருப்பதாகத் தொழிலாளர் நம்பவில்லை. இரண்டாவது உலக யுத்தம் இதை வலி யுறுத்தியது. ஒவ்வொரு தேசத் தொழிலாளரும் மற்றத் தேசத் தொழிலாளரின் நலனுக்காகப் போராடினரா அல்லது தங்கள் தங்கள் தேசிய ஏகாதிபத்திய நலன் களுக்காகப் போராடினரா? நெருக்கடியான காலங்களில் ஒரு நாட்டு மக்கள் - தொழிலாளர், முதலாளிகள் - அனை வரும் ஒன்று திரள்கின்றனர். உலகத் தொழிலாளர் என்பது இன்று ஒரு கோஷமாக இருக்க முடியுமே யொழிய நடைமுறையில் சாத்தியமானதல்ல. மேலும் அக்கொள்கையின் அடிப்படையே தவறு. உலக மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்றோ, உலகில் எல்லா தேசங்களும் ஒன்றுகூட வேண்டுமென்றோ, ஒரு தனி உலக சமுதாயம் அமைக்கப்பட வேண்டுமென்றோ கூறுவது தான் சரியான கொள்கையேயொழிய, உலகத் தொழி லாளர் மட்டும் ஒன்றுகூட வேண்டுமென்று சொல்வது சரியான கொள்கையாகாது. இவ்வுண்மைகளை மற்ற நாட்டுப் பொதுவுடைமை வாதிகளைக் காட்டிலும் நம் நாட்டுப் பொதுவுடைமை வாதிகள்தான் முற்றிலும் மறந்து விடுகின்றனர். உண்மை நிலையை அவர்கள் உணரத் தவறிவிட்டதால்தான், தங்கள் திட்டமே உண்மையானது என்றுகூறிக் கூக்குரலிட்டுக் குழப்பத்தில் காரியத்தைச் சாதித்துக்கொள்ள எண்ணுகின்றார்கள்.

மேலும், பிரிட்டனின் தாஸர்களை அழித்துவிடுவ தால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஒழித்துவிட முடி

யுமா? முடியாது. பிரிட்டிஷார் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் அவசியம் நேரிட்டால், இந்திய நிலச்சுவான் தார்களை மட்டுமல்ல, சுதேச மன்னர்களையும் ஒழித்து விடத் தாங்களே சம்மதிக்கக்கூடும். வர்த்தகத்தில் தங்களுடன் போட்டியிடும் இந்திய முதலாளி வர்க்கமும் அழிக்கப்படுவது தங்கள் நன்மைக்கே என்று கருதி, அவர்கள் அதற்கும் சம்மதிக்கக்கூடும். ஆனால் யார் அழிந்தாலும், பிரிட்டிஷார் ஆட்சியும் அதற்கு அடிப்படையாகவுள்ள ராணுவ ஆதிக்கமும் அழியா. இந்திய ஜமீன்தாரையும், சுதேச மன்னரையும், வகுப்பு வாதியையும், முதலாளியையும் எவ்வளவு தூரம் தன் கருவியாகப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ, அந்த அளவிற்கு ஏகாதிபத்தியம் அவர்களை உபயோகிக்கும். ஆனால் தேவைப்படின் தன் வாளை நம்பியே ஜீவிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தயாராயிருக்கிறது.

மிகச் சுரண்டப் படும் வர்க்கம்

இன்று நம் கிராமங்களில் மிகவும் சுரண்டப்படுவோர் கிருஷிகர் அல்ல; தங்களுக்குச் சொந்தமாக நிலமில்லாமல் பிறர் நிலத்தோடு கட்டுண்டு, அந்நிலத்தின் சொந்தக்காரர் மாறினால் தாங்களும் நிலத்தோடு கை மாறி உழலும் நிலமில்லா விவசாயத் தொழிலாளரே இன்று மிகவும் சுரண்டப்படுபவர். அவர்கள் தான் ஏழ்மையின் ஆழத்தில் அழுந்தியவர்கள்; அடிமைத் தளைகளில் சிக்குண்டவர்கள். பெரிய ஜமீன்தார் அவர்களைச் சுரண்டுவதைக் காட்டிலும், சிறிய நிலச்சுவான் தாரும், கிருஷிகரும் அவர்களைச் சுரண்டுகிறார்கள்.

நான் என் சொந்த அனுபவத்தில் இதைக் கண்டுள்ளேன். அயோத்தி ஜில்லாவில் நானும், காந்தி ஆசிரமத்தைச் சேர்ந்த எனது தோழர்களும் பல ஆண்டுகளாக

கிராம சேவை செய்து வந்துள்ளோம். எங்கள் நிர்மாண வேலைகளில் சிறிய ஜமீன்தாரும் கிருஷிகரும் எங்களுடன் ஒத்துழைப்பதுண்டு. ஆனால் அவர்கள் கீழ் வேலை பார்த்த நிலமில்லாத விவசாயத் தொழிலாளரிடம் நாங்கள் சர்க்காவை எடுத்துச் சென்றவுடன் இச் சிறு ஜமீன்தார்களும் விவசாயிகளும் எங்கள்மீது வெறுப்புக் கொள்ளத் தொடங்கினர். சர்க்காவைச் சுற்றினால் கடுமையான தண்டனை கிடைக்கும் என்று அவர்கள் விவசாயத் தொழிலாளரைப் பயமுறுத்தினர். ஏனென்றால், சர்க்கா விவசாயத் தொழிலாளியின் அடிமைத்தனத்துக்கு நிவாரணம் தேடி அவன் விடுதலைக்கு வழி காட்டியது. குடியானவன் இவ்வாறு, வருவாய் பெற வேறுவழி தேடிக் கொண்டால், நிலச் சுவான்தார் அவனை அவ்வளவு சுரண்ட முடியாது; பட்டினி போடுவதாகப் பயமுறுத்த முடியாது. பெரிய ஜமீன்தாருக்கோ விவசாயத் தொழிலாளருடன் நேரடியான தொடர்பில்லை. ஆகவே அவர்கள் அத் தொழிலாளரை அவ்வளவு சுரண்ட முடியவில்லை. ஆனால் அத்தொழிலாளருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ள சிறிய ஜமீன்தாரும் கிருஷிகரும் அவர்களைச் சுரண்டுவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன.

மேலும் ஐ. மா. விலும், பீஹாரிலும் சில இடங்களைத் தவிர, சிறிய ஜமீன்தார், கிருஷிகரைவிட அதிக உயர்ந்த நிலையில் இல்லை. கிராமத்திலுள்ள ஏழைகளை வர்க்க அடிப்படையில் ஒன்று திரட்டுவதென்றால் அவர்களில் மிக அதிகமாய்ச் சுரண்டப்படுபவர்கள் யாரென்று காணவேண்டும். சுரண்டப்படுபவர்கள், மிகச் சுரண்டப்படுபவர்கள், மிக மிகச் சுரண்டப்படுபவர்கள் என்று படிப்படியாக ஏறிக் கொண்டே போவதைக் காண்போம். கிருஷிகர் பிரச்னையைத்

தீர்த்துவிட்டால், நாம் அநீதியை வேரோடு களைந்துவிட்டவராக மாட்டோம். கிராமப் பொருளாதார அமைப்பு முழுவதையும் அடியோடு மாற்ற வேண்டிவரும். முற்றிலும் புது சமுதாயத்தை அமைக்க வேண்டும். இவ்வாறு செய்வதற்கு முன்பு, அரசியல் அதிகாரம் நம் கைக்கு வரவேண்டும். ருஷ்யாவில் இவ்வாறு தான் நடந்தது. அதிகாரத்தைக் கைப்பற்றப் போராட்டம் நடத்துவதற்கு நம்மிடையே ஒற்றுமையும் உறுதியும் வேண்டும். ஆனால் வர்க்க அடிப்படையில் வேலை செய்தால், பிரிவும் பூசலும் தான் வளரும். சமீபத்தில் நாங்கள் கிராமங்களுக்குச் சென்றபோது, அங்கு கிராம வாசிகள் அனைவரும், கிருஷிகர்—ஜமீன்தாரி பிரச்னை பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள். தேசீயப் பிரச்னையில் கவனம் குறைந்திருந்தது. காங்கிரஸ் வாதிகளாயுள்ள கிருஷிகத் தொண்டர்கள் கூடத் தங்களை உடனடியாகப் பாதிக்கும் ஜமீன்தாரின் அடக்குமுறை பற்றித்தான் அதிகம் கவலைப்படுகின்றனர். அடிப்படையாகவுள்ள ஏகாதிபத்தியத்தின் அநீதியை அவர்கள் மறந்துவிட ஏதுவாகிறது. மறைவிலிருந்து மாய்க்கும் அந்த கோரசக்தி கிராம வாசியின் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அதை அவன் தெளிவாகக் கண்டு, அதை ஒழிக்க எழுச்சியுறும் போதுதான் தேசீயப் போராட்டம் வெற்றி பெறும்.

ஆகவே இந்த நிலைமையில், பாமர மக்களுடன் தொடர்பேற்படுத்துவதற்குச் சிறந்த வழி நமக்குள்ளேயிருக்கும் பூசல்களையும், பிளவுகளையும் அதிகரிக்காமல், அன்னியனிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதென்ற பொதுவான தேசீயப் பிரச்னையில் மக்கள் அனைவரையும் முனையச் செய்வது தான்.

தொழிலாளர், கிருஷிகர் ஆகியோருடைய உடனடியான பிரச்னைகளை நாம் அசட்டை செய்யக்கூடாது என்று ஏற்கெனவே கண்டோம். காந்திஜி ஒருபோதும் அவற்றை அசட்டை செய்ததில்லை. காந்திஜியின் தலைமையை ஏற்றுக்கொண்டபின், காங்கிரஸும் அப்பிரச்னைகளை அசட்டை செய்ததில்லை. எந்த வழியில் இப்பிரச்னைகளைத் தீர்க்க முற்படுவது என்பதுதான் கேள்வி. அடிப்படைப் போராட்டத்தைப் பாதிக்காத வழியாக இருக்க வேண்டுமென்று நாங்கள் நம்புகின்றோம். அடிப்படைப் பிரச்னை பாதிக்கப்பட்டாலோ, ஒத்திவைக்கப்பட்டாலோ அப்பிரச்னை மட்டுமல்ல, மற்ற வகுப்பு, வர்க்க நலன்களும் பாதிக்கப்படும். இந்திய சுதந்திரப் பிரச்னை பாதிக்கப்பட்டால் சமஸ்தான மக்கள் நலன் பாதிக்கப்படுவது போலவே, சுயராஜ்யம் பெறுவிடில் சுயேச்சையான, சுதந்திரமான விவசாயிகள் இருக்க முடியாது. ஆதலால், தற்போதைக்கு நாட்டிலுள்ள எல்லாப் பிரச்னைகளிலும் நாம் சீர்திருத்த நடவடிக்கைதான் எடுக்க முடியும். தேசியப் போராட்டமொன்றில் தான் நாம் புரட்சிப் பாதையைப் பின்பற்ற முடியும். தங்களைப் பாதிக்கும் பல குறைகளையும் தீர்த்துக்கொள்ள ஹரிஜனங்கள் இன்றைய நிலைமையில் நேரடியான நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று காந்திஜி புத்திமதி கூறுவதற்கும் இதுவே காரணம். இந்தியாவில் இன்று, ஹரிஜனங்கள் பிரச்னையைவிட முக்கியமானதும், உடனே தீர்க்கப்பட வேண்டியதுமான பிரச்னை வேறெதுவும் கிடையாது. ஆனால் இப்பிரச்னையில்கூட நாம் இன்று நேரடியான நடவடிக்கை எடுப்பதற்கில்லை. நிவாரண நடவடிக்கைகள்தான் எடுக்க முடியும். விடுதலை பெற்ற பின்பு, சுதந்திர சர்க்கார், சட்டங்கள் இயற்றி ஒரே அடியில் இந்த அநீதிகளைப்

போக்கிவிடக் கூடும். ஹரிஜன், கிருஷிகர் பிரச்னைகளி லெல்லாம் நாம் தற்போதைக்குச் சீர்திருத்தப் போக்கைத் தான் பின்பற்ற வேண்டும். அதனால் ஏற்படும் நன்மை கள் நிரந்தரமாக இருக்கும். ஜமீன்தாரி ஒழிப்பு முத லியவை பற்றி இப்பொழுது பேசுவது சுதந்திர இயக்கத் தைப் பாதிக்கும். உண்மையில் சுதந்திர இயக்கத்திற் குப் பங்கம் செய்வதன் மூலம், கிருஷிகர்கள், தங்கள் நலனுக்கே பங்கம் செய்து கொண்டவராவர். வர்க்க ரீதியில் நாம் இப்பொழுது நேரடியான நடவடிக்கை எடுத்தால், இதனால் ஏற்படும் நிலைமையை அன்னியன் தன் நன்மைக்காகப் பயன் படுத்திக்கொண்டு தேசீய இயக்கத்தைப் பலவீனப் படுத்துவான்.

சர்க்கா, கதர், கிராமத் தொழில்கள் முதலியன வர்க்கப் போராட்டங்களை மூட்டிவிடாமல் பொருளா தார சீர்திருத்தங்களைப் புகுத்துகின்றன.

அமைதியான மாறுதல்கள்

சிறிய ஜமீன்தார், கிருஷிகர், விவசாயத் தொழிலாளி, வேலையில்லாமல் திண்டாடு பவர் அனைவருக்கும் ஒருங்கே நன்மை அளிப்பவை இத்திட்டங்கள். அரசியல் தொண்டர்கள் பாமர மக்களுடன் மிக நெருங்கிய தொடர்புவைத்துக் கொள்வதற்கு இவை வாய்ப்புத் தருகின்றன. கிருஷிகர் களின் பொதுக்கூட்டங்கள், கிளர்ச்சிகள் முதலியவை படாடோபமாய் நடந்தாலும் அவற்றால் யாருக்கு என்ன நன்மை? மனக்கசப்பும், விரோதமும் தான் வளர்கின்றன. நிர்மாண வேலையினாலோ நிரந்தர நன்மை ஏற்படுகிறது; நாட்டின் செல்வம் அதிகரிக்கிறது. பல மைல் தூரம் நடந்து சென்று, தூர கிராமங்களில் நடக்கும் பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்ள முடியாத வயோதிகர்களும், பெண்களும், குழந்தைகளும்கூடச் சர்க்காவைச் சுற்றுவது எளிது. "அது அவர்களுக்கு வேலை தருவதோடு அவர்களை

ஒன்றுதிரட்டிப் பலப்படுத்துகிறது. கிருஷிகர் பொதுக் கூட்டங்களால் சோம்பலும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழிவதில்லை. ஆனால் சர்க்காவினாலும் குடிசைக் கைத்தொழில்களாலும் இரண்டும் ஒழிகின்றன. கிருஷிகப் பிரசாரகர் பொதுக்கூட்டங்களில் பேசிவிட்டு, வந்த வழியே போய்விடுகிறார். கிருஷிக சபையுங்கூட அனைவரும் ஒன்றுகூடுவதற்கு அடிக்கடி வாய்ப்புத் தருவதில்லை. கிளர்ச்சிகள் எப்பொழுதும் நடந்துகொண்டிருக்க முடியாது; இடையிடையேதான் நடக்கமுடியும். இடைக் காலங்களில் என்ன வேலை செய்யமுடியும்? நிர்மாண வேலைகள்தான் செய்யமுடியும். இந்த சந்தர்ப்பங்களில் குடிசைக் கைத்தொழில்களைவிடச் சிறந்த நன்மை பயக்கக் கூடியது எது? இவ்வேலையில் ஈடுபடும் நிர்மாண ஊழியர்கள் கிராமவாசிகளுடன் நெருங்கிய தொடர்புகொள்கின்றனர். நிர்மாணத் தொண்டர் கிராமவாசிகளுடன் சேர்ந்து வேலை செய்கிறார்; அவர்கள் வேலை செய்வதற்கு வேண்டிய கருவிகளைத் தந்து உதவுகிறார். அவருடைய வேலையால் ஒவ்வொரு கிராமவாசியும் உற்சாகமான, இன்பகரமான வாழ்க்கை வாழ்வதற்கு வழி ஏற்படுகிறது. ஒரு வருடத்தில் ஒரு பருவத்தில்தான் இந்த வேலைகள் நடக்கமுடியும் என்பதில்லை. ஆண்டு முழுவதும் இவ்வேலை நடக்கலாம். கிருஷிகர் கிளர்ச்சிகளையும், கூட்டங்களையும் கோடைகாலத்தில்தான் நடத்த முடியும். பயிர் விதைக்கும் காலத்திலோ அறுவடை காலத்திலோ கூட்டங்கள் ஏற்பாடு செய்தால், அவற்றிற்கு வெகு சில கிருஷிகர்களே வருவார்கள். உணவு தேடும் வேலையைப் புறக்கணித்துவிட்டு அவர்கள் பொதுக் கூட்டங்களுக்குச் செல்லமாட்டார்கள். ஆனால் அவர்கள் எந்த நேரத்திலும் நூல் நூற்க முடியும்; என்றும் அதனால் நன்மை பெற முடியும்.

இதன்மூலம் நிர்மாணத் தொண்டரும் பாமர மக்களிடையே வேலை செய்வதில் பயிற்சி பெறுகிறார். வெறும் கிளர்ச்சி செய்வதுமட்டும் அவர் வேலையல்ல. ஒருவர் எப்பொழுதுமே கிளர்ச்சி செய்துகொண் டிருக்கமுடியாது. மற்ற நேரங்களில் அவர் என்ன செய்யமுடியும். அன்றாடம் ஏதாவது அவர் வேலை செய்து கொண்டுதானிருக்க வேண்டும். கதரும், குடிசைத் தொழில்களுமே சிறந்த வேலைகள். அவைதான் நிர்மாணத் தொண்டர் பாமர மக்களிடை வேலை செய்வதற்கும், தலைமையின் பொறுப்பை ஏற்பதற்கும் பயிற்சி தருகின்றன.

அத்தியாயம் 5

முடிவுரை

குடிசைத் தொழில்முறை தேசிய வாழ்வைத் திறம்பட ஒழுங்கு படுத்துவதற்கும், பாமரமக்களுடன் தொடர்பு ஏற்படுத்துவதற்கும் உதவுகின்றது என்று கண்டோம். ஆகவே அம் முறை ஜனநாயக முறையென்பது மட்டுமல்ல, சமதர்மக் கொள்கையையும் அனுசரித்ததாகும். மேலும் அம் முறை ஏகாதிபத்திய வேட்டையையும், சர்வதேசப் பூசல்களையும் தடுக்கவும், சர்வதேச நல்லுணர்வையும், சமாதானத்தையும் வளர்க்கவும் உதவுகிறது. காந்திஜி கண்டுள்ளபடி அம் முறையைப் பின்பற்றி வேலை செய்தால் அரசியல் ஜனநாயகம், பொருளாதார சமத்துவம், உலக சமாதானம் ஆகியவற்றை அடிப்படைகளாகக் கொண்ட புது உலக சமுதாயத்தைச் சிருஷ்டிக்க அது உதவும். அதனுல்தான், நிர்மாணத்திட்டத்தின் ஜீவநாடிகளான கதர், குடிசைத் தொழில்கள் ஆகிய திட்டங்களைத் தேச மக்கள் பல முறை அசட்டை செய்துள்ள போதிலும், அத்திட்டங்கள் எந்தப் பொதுஜன இயக்கத்திற்கும் இன்றியமையாத நிபந்தனைகள் என்பதைக் காந்திஜி மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். அதைவிடச் சிறந்த திட்டத்தைத் தம்மால் சிபார்சு செய்ய இயலாதென்றும் அவர் கூறியுள்ளார். இயந்திரத் தொழில் முறை, ராஜ தந்திர சூழ்ச்சிகள், பலாத்காரம் ஆகியவற்றின் மூலம் இந்தியா தனது அரசியல் சுதந்திரத்தை அடையக்கூடும். ஆனல், அதனுல் புது உலக சமுதாயம் ஏற்படாது; பழைய சமுதாயத்தின் புதுப் பிரதிதான் வெளியாகும். மேற்சொன்ன முறைகளைப் பின்பற்றி விடுதலை யுடையும் இந்தியா, மற்ற நாடுகளைப் போலவே ஆக்ரமிப்புப்

பாதையில் தான் புகும்; சாம்ராஜ்ய வேட்டையில் தானும் பங்கெடுத்துக் கொள்ளும். இந்தியாவின் ஜனத் தொகை நாற்பது கோடி. இது நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே இருக்கிறது. ஜனத்தொகை இவ்வளவு பெருகினுல், இந்தியாவின் நிலப்பரப்பு அனை வருக்கும் பற்ருமல் போகும். பலாத்காரம், யுத்தம் ஆகிய மார்க்கங்களால் விடுதலை அடையும் இந்தியா அவற்றைப் பின்பற்றிப் பிற நாடுகளையும் ஆக்ரமிக்க முயலும். எல்லைச் சண்டைகள் வலுக்கும்; அண்டை யில் இருப்போர் அனைவரும் விரோதிகள் ஆவர். அத் தகைய இந்தியா புது உலகத்திற்கோ ஜனநாயக சம தர்ம அமைப்பிற்கோ வழி காட்ட முடியாது; உலக சமாதானத்திற்கும் மனித கலாசாரத்திற்கும் அது எவ் வித சேவையும் செய்ய முடியாது; காந்திஜியின் வாழ்க் கையும், திருப்பணியும் விழலுக்கு இரைத்த நீராகி விடும். அவர் உபதேசத்தை ஏற்றுக் கொள்ளும் அள விற்கு இந்தியாவும் உலகமும் பக்குவமடையவில்லை யென்று சொல்லப்படும். மற்ற தீர்க்கதரிசிகளையும் ஞானிகளையும் போலவே அவர் நிலை தம் காலத்தவர் எட்ட முடியாதபடி அப்பாற்பட்டிருந்தது என்று குறை கூறப்படும். அப்படியிருந்தால்கூட காந்திஜியின் வாழ்க்கையோ, சேவையோ வீணுனவை யென்று கூற முடியாது. ஆனுல், தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கையில் எழும் பிரச்னைகளாயினும் சரி, சமூக, தேசிய, சர்வதேசி யப் பிரச்னைகளாயினும் சரி, எவற்றையும் தீர்க்க வகை யற்றது என்று உலக சரித்திரத்தால் நிரூபிக்கப்பட்டு விட்ட பழைய மார்க்கத்திலிருந்து விடுதலை பெற்று, உலகிற்குப் புது வழி காட்ட இந்தியர்கள் தவறிவிட் டனா என்ற பழிச் சொல்லுக்கு நாம் ஆளாவோம்.

வந்தேமாதரம்.

Cudg

28986